# இருட்டுராஜா



சமூக நாவல்

வல்லிக்கண்ணன்

# இருட்டு ராஜா

(ஒரு நாவல்)

சாகித்ய அகாடமி பரிசு பெற்ற

## வல்லிக்கண்ணன்

நர்மதா பதிப்பகம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
10, சோமசுந்தரம் தெரு
தி. நகர், சென்னை-600 017

PRICE Rs. 10-50

Paper Used : 11.6 Kg Tamilnadu Paper Mill White Printing
Purchased at the rate of Rs. 156/- Per Ream.

● ● IRUTTU RAJA—A Social Novel in Tamil by VALLI KANNAN ● First Edition : December 1985 ● Published by : T. S. RAAMALINGAM, NARMADHA PATHIPPAGAM, 10, Somasundaram Street, T' Nagar, Madras-600 017. ● Printed at : CALVARY PRINTERS Zackria Colony 4th Street, Choolaimedu, Madras-600094

## கதையைப் பற்றி...

'இருட்டு ராஜா'வின் கதாநாயகன் முத்துமாலை ஒரு சுவாரஸ்யமான பேர்வழி — 'இன்ட்டரஸ்டிங் கேரக்டர்'. ஆனாலும் அவன் ஒரு சாதாரண சமூக மனிதன்.

எந்த மனிதனும் முழு அயோக்கியனில்லை. பரிபூரண நல்லவன் எவனும் இல்லை. கொடியன், தீயவன், ரொம்பவும் கெட்டவன் என்று பழிக்கப்படுகிற மனிதனிடமும் நல்ல பண்புகள் கலந்து கிடக்கின்றன. புனிதன், யோக்கியன், மிக நல்லவன் எனக் கருதப்படுகிற மனிதனுள்ளும் சில தீய குணங்கள் பதுங்கி வாழ்கின்றன.

பொதுவாக ஒவ்வொரு மனிதனுள்ளும் இயற்கையாகவே நல்ல குணங்களும் தீய பண்புகளும் கலந்தே இருக்கின்றன.

ஒருவன் கயவனாக, அதமனாக, மோசமானவனாக மாறுவதும், நல்லவனாகவே வளர்வதும் அவனுடைய சூழ்நிலைகள், அவனை பாதிக்கிற இதர மனிதர்கள், கால நிலைமைகள், இவற்றால் தாக்குறுகிற அவனது மனநிலை முதலியவற்றைப் பொறுத்து அமையும்.

முத்துமாலை சிந்திக்கத் தெரிந்தவன். அவன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறுவது போல, 'வாழ்க்கை மனுசங்களோடு விளையாடுது. மனுசங்களைவச்சும்விளையாடுது.' வாழ்க்கையினால், சமூகத்தினால், ஊரார் போக்கினால் பாதிக்கப்பட்ட அவன் 'நாமும் வாழ்க்கையோடு—வாழ்க்கையை வச்சு—விளையாட வேண்டியதுதான்' என்று துணிந்து விட்டான்.

ஊர்க்காரர்களே சான்று கூறுவது போல, அவன் 'நன்மையை நெனச்சு நல்லதுகளை செய்யணுமின்னு

தான் அலைஞ்சான்'. அதற்கென தனக்குத்தானே அவன் வகுத்துக் கொண்ட தர்மங்களும், கையாண்ட போக்கு களும் விசித்திரமானதாகத் தோன்றலாம்.

இருட்டில், மறைவாக நிகழ்கிற அக்கிரமங்கள், அநியாயச் செயல்களில் தலையிட்டு, நீதி வழங்க வேண்டியது—தண்டனை கொடுப்பது அல்லது சமரசம் செய்து வைப்பது—தனது பொறுப்பு என்று நம்பியவன் போல் ஊர் விவகாரங்களில் குறுக்கிட்டு ஆக்கினைகள் செய்வதில் உற்சாகமாக ஈடுபட்டான் அவன்.

முத்துமாலை எந்தக் காலத்து மனிதனோ அல்ல. எனது சமகால மனிதன் அவன். அவன் செயலில் அமானுஷ்யமோ, அதீதமோ எதுவும் இல்லை.

அவன் நிகழ்த்தியதாக விவரிக்கப்பட்டுள்ள சம்பவங்கள் கதைச்சுவைக்காக தொடர்பாக எழுதப்பட்டிருக்கின்றனவே தவிர, எனது 'அனுபவ ஞானத்தில்' வெவ்வேறு கால கட்டங்களைச் சேர்ந்தவை அவை.

முத்துமாலையின் விசிலடிப்பும் அவனது செயல்களும் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தவை—வசீகரிக்கக் கூடியவை.

'இருட்டு ராஜா' போன்ற நல்ல புத்தகங்களை அழகிய முறையில் வெளியிடும் நண்பர் ராமலிங்கம் அவர்களின் கவனிப்பில் நர்மதா வெளியீடு ஆகப் பிரசுரம் பெறுவது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. இது ரசிகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும் என நம்புகிறேன்.

24—12—'85 —வல்லிக்கண்ணன்

# இருட்டு ராஜா

## 1

அவன் உதடுகளைக் குவித்து விரலை உபயோகித்து வாயினால் எழுப்பிய சீட்டி ஒலி தெற்குத் தெரு மூலையில் எழுந்து, வெகு தூரத்துக்குப் பரவியது.

சின்னச் சின்னத் தெருக்களை உடைய அந்தச் சிற்றூரில், அந்தச் சீழ்க்கை ஒலி தெருவுக்குத் தெரு விதம் விதமான சலனங்களை உண்டாக்கியது.

—முத்துமாலைக்கு பொழுது விடிஞ்சிட்டுது!

—இனிமே ராத்திரிப் பூரா அவன் ராச்சியம்தானே!

—பாழறுவான் ஏன்தான் இந்தப் போக்குப் போறானோ!

—பூச்சி வெட்டை யார் யாரையோ கடிக்குதுங்கிறாங்க. இந்த ராக்காடு வெட்டியை எதுவும் ஒண்ணும் செய்யாது போலிருக்கு.

இப்படியும், இன்னும் பலவாறாகவும், அங்குமிங்கும் ஊர்க்காரர்கள் பேசிக் கொண்டார்கள், வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தவர்கள்தான்.

அப்போது இரவு ஆறரை அல்லது ஏழு மணி தான் இருக்கும். "பகல் பொழுது குறை; ராத்திரிப் பொழுது அதிகம்" என்று மக்கள் சகஜமாகச் சொல்லிக் கொள்ளக் கூடிய பருவகாலம். இருட்டு 'கும்மென்று' என்று கவிந்து கிடந்தது.

ஊர் அப்பொழுதே முக்கால்வாசி அடங்கியிருந்தது இன்னும் ஒரு மணி நேரம் சென்றால், உயிருள்ளவர்களை உள்ளடக்கிய சமாதிகள்மாதிரி வீடுகள் அனைத்தும் மாறி நிற்கும். எவனோ மாயாஜாலக்காரனின் மந்திரத்துக்குக் கட்டுண்டு உயிர்ப்பற்றுஇயக்கமற்றுப்போன இடம்போல அந்த ஊர் மோனநிலையில் காட்சி தரும். ஆந்தைகள் அங்கங்கே அலறும். எங்காவது ஒரு நாய் குரைக்கும். அதற்கு எதிரொலிபோல் இன்னொருநாய் குரல் கொடுக்கும். அதை எதிரேற்று அடுத்த தெரு நாய் தொடரும். மறுபடி அமைதி கனத்துக் கவித்து தொங்கும்.

இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்காகவே வந்தவன் போல முத்துமாலை கிளம்புவான். அவனது சீட்டி ஒலி அமைதியைக் கொன்று, இருட்டைக் கிழித்து எவ்வும். தெற்குத் தெருவில் எழும். பிறகு தெருத் தெருவாகத் திரியும். பாட்டு என்ற பேரில் கத்துவது வீட்டுக்குள் ஒடுங்கிக் கிடப்பவர்களுக்கு எரிச்சல் தரும்; பயம் உண்டாகும்; குழப்பம் எழுப்பும்; என்னென்னவோ செய்யும்.

முத்துமாலைக்குப் பிடித்தது ஒரே பாட்டு. எப்பவோ ஒரு நாடகத்தில் கேட்டது. எவனோ கள்ளபார்ட் நடிகன் அமர்க்களமாக ஆடிக்குதித்து அட்டகாசமாய் பாடியது—

கோட்டைக் கொத்தளம் மீதிலேறி
கூசாமல் குதிப்பேன்-ஏ பலபா
கூசாமல் குதிப்பேன்
காவலர் பிடிக்க வந்தால்
கத்தியால் குத்துவேன்-ஐஸா
கத்தியால் குத்துவேன்!
கொற்றவர் கண்டுபிடிக்க வந்தால்
குருவி போல் பறப்பேன்-பலபா
குருவி போல் பறப்பேன்!
ஒரு நீச்சலில் கப்பலைப் பிடிப்பேன்
கல்கத்தா துறைமுகம் பார்ப்பேன்!

சொற்களைத் தொண்டையில் போட்டு உருட்டிப் புரட்டி காட்டுத்தனமாகப் பாட்டென்று முத்துமாலை கத்தித் திரிகிறபோது அரைகுறைத் தூக்கத்தில் கண்களை மூடிக்கிடந்தவர்கள் திடுக்கிட்டு விழித்துக் கொள்வார்கள்.

''சண்டாளப் பய. இவனோட நித்தம் நித்தம் இதே எழவாப் போச்சு'' என்று எரிச்சலோடு முணுமுணுப்பார்கள். வீட்டுக்குள் தான்.

முத்துமாலையின் முகத்துக்கு நேரே எதுவும் சொல்ல அந்த ஊர்க்காரர்களில் எவருக்கும் தைரியம் கிடையாது.

''சரியான பிசாசுப்பய! ஒண்ணு கிடக்க ஒண்ணு செய்து போடுவான்'' என்ற நினைப்பு எல்லோருக்குமே.

ஊரையும் ஊராரையும்பற்றி அவனுக்கும் உயர்வான அபிப்பிராயம் கிடையாது தான்.

முன் காலத்திலே, விளக்குகள் எல்லாம் சர்வ சாதாரணமா இல்லாத நாட்களிலே ஒரு பழக்கம் இருந்துதாம். அதை ஒரு பழமொழி சொல்லுது, மலைவாயிலே

பொழுதும், மக்கள் வாயிலே சோறும்னு. இருட்டுற துக்கு முன்னாடியே சாப்பாட்டுக் கடையை முடிச்சிட்டு, சனங்க சுருண்டு படுத்திடுவாங்க. அந்த நிலையை இந்த ஊர்காரங்க இன்னும் தாண்டலே. எப்படா இருட்டும், நீட்டி நிமிரலாம்னு காத்திருப்பாங்க. தூங்குப்பூனைக...பூனைகளாவது எலிகிலி அகப்படு மான்னு ராத்திரி வேளைகளிலே அங்கையும் இங்கையும் ஓடும். இவங்க அசையமாட்டாங்க. சரியான கிடை பூதங்க!

இதை அடிக்கடி சொல்வதில் முத்துமாலைக்கு ஒரு ஆனந்தம். சொல்லிவிட்டு கடகட என்று சிரிப்பாணியை உருட்டி விடுவான், தெருவெல்லாம் புரண்டு ஒலிக்கும்படி.

இரவு நேரங்கள்தான் அவனுடையபகல் பொழுதுகள் ஆகும். பகல்கள் அவனுக்குத் தூங்கும் நேரம்.

ஒரு சமயம் அவன் சொன்னான்: ''எவரோ ஒரு ஞானி ஒருத்தன் கிட்டே உபதேசம் பண்ணினாராம். ''ஆடுக ளோடு படுத்து விடு; குயில்களோடு எழுந்திரு''ன்னு சீக்கிரம் படுத்து, சீக்கிரமே எழுந்திருக்கிறது புத்திசாலித் தனம்னு அவரு சொன்னாராம். நான் அதிபுத்திசாலி. ராத்திரி படுக்கப்போறதும் கிடையாது; அதிகாலையிலே விழித்தெழுவதும் கிடையாது! எனக்கு ஏற்ற சீடப்பிள்ளை களும் ரெண்டு மூணு பேர் சேர்ந்திருக்காங்க...''

சகாக்களை அழைப்பதற்காகத்தான் முத்துமாலை முதலில் தெரு மூலைகளில் நின்று சீட்டி அடிப்பான். நேரம் போகப்போக, சும்மா ஜாலியாகவும், தான் உலாவி வருவதை அறிவிப்பதற்காகவும் ஒலி எழுப்புவான். சீட்டி ஒலியிலேயே பாட்டுக்களை ஊதித்தள்ளுவது உண்டு.

''இந்த ஊர்க்காரங்க எனக்கு நன்றி கூறணும், என்னைப் பாராட்டணும். ராத்திரி பூரா நான் ரோந்து

சுத்தறமாதிரி சுத்திக் கிட்டிருக்கேன். அதனாலே திருடர் பயமே இங்கே கிடையாது. முன்னாலே இப்படியா இருந்தது? அந்தத் தெருவிலே திருடன் வந்தான்: இந்த வீட்டிலே களவு போயிட்டதுன்னு அடிக்கடி ரிப்போர்ட் டுக் கிளம்புமே. ஐயாவாள் தலையெடுத்த பிறகு அப்படி யாப்பட்ட பேச்சுக்கே இடம் இல்லாமல் போச்சே. இதை யோசிக்க வேணாம்?''

இவ்வாறு சொல்லிவிட்டு உரக்கச் சிரிப்பதும் இவனு டைய இயல்பாக வளர்ந்திருந்தது.

அன்றும் முத்துமாலை வழக்கம்போல் தெற்குத் தெரு விலிருந்து கிளம்பி, சீட்டியடித்துக் கொண்டு பாட்டுப் பாடிக்கொண்டு தெருத்தெருவாக உலா வந்தான். அநேக மாக எல்லா வீடுகளும் அடைத்தே கிடந்தன.

வழியில் யாரும் தென்பட வில்லை எவராவது வெளியே போயிருந்தால்கூட,வீடு திரும்புகிற பாதையில் முத்துமாலை நிற்கும் தெருவைத் தவிர்த்து சுற்றி வளைத்துச் சென்று விடுவார்கள். அவன் ஊராரை ஒன்றும் செய்ய மாட்டான்தான். இருந்தாலும் ''வீண் வம்பு எதுக்கு? அவனுக்கு எதிரே வருவானேன்; அவன் எதையாவது கேட்க,நாம் ஒன்றுசொல்ல, அவன் சண்டை வளர்க்க-இதெல்லாம் என்னத்துக்கு? நாம முன்னெச் சரிக்கையா விலகி இருப்பதுதான் நல்லது'' என்பது அந்த ஊர்க்காரரின் பாலிசி.

நேரம் ஆக ஆக அவனுடைய கூச்சலும், கும்மாளியும் அதிகரிக்கும். அவனுடைய தோழர்கள் சாராயம், கறி, காரம் மிகக் கலந்த மொச்சைக்கொட்டை முதலியவற் றோடு தயாராக இருப்பார்கள்.ஊருக்கு ஒதுக்குப் புறத்தி லிருந்த அம்மன் கோயிலில் கூடி எல்லோரும் அவசரம் இல்லாமல் அவற்றைக் காலி பண்ணுவார்கள். பிறகு உரத்துப் பேசியவாறும், சண்டையிட்ட படியும், கண்ட

படி ஏச்சுக்களை உதிர்த்துக்கொண்டும் தெருத்தெருவாக அலைவார்கள். திரும்பவும் கோயிலுக்குப் போய் குடிப்பார்கள். கூச்சலிட்டுத் திரிவார்கள். சீட்டாடுவார்கள். தாயக் கட்டம் விளையாடுவார்கள். இப்படி எல்லாம் செய்வதில் அவர்கள் இன்பம் கண்டார்கள்.

அவர்கள் யாருக்கும் பயப்படுவதில்லை. முத்துமாலையையும் அவனுடைய சகாக்களையும் அடக்கி விட வேண்டும் என்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சிலபேர் முயன்றது உண்டு. அவர்கள் வெற்றி பெறவில்லை. "எடுத்த எடுப்பிலெயே அரிவாளையும் கத்தியையும் தூக்குகிறவர்கள் முன்னே எப்படித் துணிந்து நிற்க முடியும்?" என்று அவர்கள் சொன்னார்கள். அப்படியும் துணிந்து கிளம்பிய ஒன்றிரண்டு பேர் சரியான பாடம் கற்றுக்கொண்டு ஓய்ந்து போனார்கள்.

அப்புறம் எவரும் முத்துமாலையின் வழியில் குறுக்கிட தைரியம் கொள்ள வில்லை.

வானத்தில் முழு நிலா அசட்டுச் சிரிப்புச் சிரித்தபடி ஊர்ந்து கொண்டிருந்தது. அதன் மங்கல் ஒலி ஊரை வெளிச்சப் படுத்திவிட வில்லை.

வெளிச்சத்தைப் பற்றியோ இருட்டைப் பற்றியோ கவலை கொள்ளாத முத்துமாலை, அம்மன் கோயிலில் வழக்கம் போல் பொழுதைப் போக்கிவிட்டு, தனது இரண்டாவது சுற்றுலாவை நடத்திக் கொண்டிருந்தான்.

கோட்டைத் தெரு எனப்பெயர் பெற்றிருந்த ஒரு சிறு தெருவை அடைந்ததும் அவன், "கோட்டைக் கொத்தளம் மீதிலேறி" என்ற பாட்டை அலறி ஆர்ப்பாட்டம் பண்ணலானான்.

அப்போது மணி பத்தை நெருங்கிக் கொண்டிருக்கலாம். ஊர் நெடுகிலும் வேறு சத்தம் எதுவும் கிடையாது. சுடுகாட்டு அமைதி.

திடீரென்று ஒரு வீட்டின் திண்ணையிலிருந்து ஒரு குரல் வெடித்தது; "போறதானா போறதுதானேடா? ஏன் இங்கே நின்னு தொண்டைத் தண்ணி வத்தும் படியாக் கத்திக்கிட்டு நிக்கிறே?" என்று.

எதிர்பாராத விதமாக மண்டையில் கல்லைத்தூக்கிப் போட்டது போலிருந்தது முத்துமாலைக்கு. "என்னது? ஆங், என்னதுங்கேன்" என்று கேட்டான். அவனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் அவனது குரல் கூடமாறியிருந்தது.

"ஒரு நீச்சல் கப்பலைப் பிடிப்பேன்-கல்கத்தா துறைமுகம் பார்ப்பேன்னு சவால் விடுறமாதிரிச் சொல்றியே; அப்படியே போய்க் காட்டறதுதானே? இங்கே நின்னு காட்டுக் கூப்பாடு போடுவானேன்னு கேட்டேன்" என்ற பதில் கணீரென்று ஒலித்தது.

"ஹேங், யாருடாது இப்படி இந்த ஊரிலே? புது ஆளு போலிருக்கு" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டவனாய் முத்துமாலை அந்த வீட்டின் முன்னே வந்தான்.

"யாரய்யாது சூரப்புலி! இப்படிக்கொஞ்சம் நிலாவிலே வந்து மூஞ்சியைக் காட்டேன். யாருன்னுதான் பார்க்கலாமே" என்றான்.

"இந்த ஊருக்கு முத்துமாலை எவ்வளவு பழையவனோ அவ்வளவு பழையவன்தான் நானும்! நல்லாப் பார்த்துக்கோ" என்று திண்ணையை விட்டு இறங்கிப் படியில் நின்றான் மற்றவன்.

முத்துமாலை அவனை உற்றுப்பார்த்தான், நன்றாக கவனித்தான். "அட தங்கராசு! நீ வடக்கே எங்கேயோ இருக்கதாச் சொன்னாங்களே?" என்றான்.

"வடக்கே இருந்தா என்ன, தெக்கே வரப்படாதா?" என்று இடக்காகக் கேட்டான் தங்கராசு.

“ஏன் வரப்படாது? பேஷா வரலாம். தெக்கே ஒரேயடியாப் போகவும் போகலாம்!” தனது பேச்சு சாதுரியத்தை மெச்சுகிறவன் போல் தானே சிரித்துக் கொண்டான் முத்துமாலை.

“அதுக்கு வேளையும் பொழுதும் வரணும். இருக்கட்டும் முத்துமாலை, நீ ஏன் இப்படி யானே?”

“எப்படி ஆனேன்! நான் எப்பவும் போல் தானே இருக்கேன்!'

“இல்லையே, முன்னே இப்படியா இருந்தே, நான் இங்கே இருந்தபோது? இடைக்காலத்திலே ஏன் இப்படி மாறியிருக்கே? ராத்திரி எல்லாம் தூங்காமெ, மத்தவங்களையும் தூங்கவிடாமக் கெடுத்துக் கிட்டு...”

“ஏ நான் தூங்கலேங்கிறது சரி. பத்தவங்களை தூங்க விடாமக் கெடுக்கிறேங்கிறது சரியில்லை. ஆந்தைக அலறுது. கூகை கத்துது. அதுமாதிரி ராப் பறவைகளின் ராசி நானும். ஊர்காரங்க அதுகளுக்குப் பழகிப்போகிற மாதிரி, என் விசயத்திலும் பழகிப் போவாங்க...”

தங்கராசு அவனையே பார்த்தபடி, “நீ ஏன் இப்படி மாறிப் போனேங்கிறதுதான் எனக்கு ஆச்சர்யமாயிருக்கு!” என்றான்.

“சரி. ஆச்சர்யப்பட்டுக்கிட்டே இரு. கொஞ்ச நாளைக்கு இந்த ஊரிலே தங்குவே இல்லே? அப்ப பார்ப்போம்” என்று சொல்லிவிட்டு முத்துமாலை நகர்ந்தான்.

அந்தத் தெரு திரும்புகிற வரையில் அவனுக்கு ‘சுரத்’ இல்லை. சந்து திரும்பி அடி வைத்ததும் தன்னை சுதாரித்துக்கொள்ள விரும்பியவனாய், “ஹ்விட்டோ ஹ்வீட்!” என்று சீட்டி அடித்தான். இரண்டு தடவை மூன்று தடவை அடித்தான். பிறகு அபூர்வமாக என்றாவது பாடுகிற ஒரு பாட்டைப் பாடலானான்.

''சாலையிலே ரெண்டு மரம்
சர்க்காரு வச்ச மரம்!
எனக்கேத்த தூக்கு மரம்
தங்கமே தில்லாலே
உனக்கு ஏத்த மரமடியே
பொன்னுமே தில்லாலே!''

அந்தப் பாட்டின் ஒலி குறைந்து, தூரத்தில் தேய்ந்து மங்குகிற வரை திண்ணையிலேயே இருந்த தங்கராசுக்கு ஆச்சரியம் தணிய வழி பிறக்கவில்லை. முத்துமாலை ஏன் இப்படி ஆனான் என்று அவன் மனம் குறுகுறுத்துக் கொண்டுதானிருந்தது.

## 2

முத்துமாலைக்கு முப்பத்தைந்து அல்லது முப்பத்தாறு வயது இருக்கலாம். கில்லாடித் தோற்றம் எதையும் அவன் முகம் கொண்டிருக்கவில்லை. ரெளடிகள் என்றால் பெரிய வெட்டரிவாள் மீசையோ, ஆட்டுக்கொம்பு மீசையோ, அது போன்ற ஏதோ ஒரு மீசையோ வைத்திருப்பார்கள்; சதா அதை முறுக்கேறும்படி திருகிவிட்டுக் கொண்டிருப் பார்கள் என்ற பொதுவான கருத்துக்கு மாறாக விளங் கினான் அவன். அவன் மீசை வைத்துக்கொள்வதில் ஆசை காட்டியதேயில்லை. சிறிது அகன்று பரந்த பெரிய முகம், அலை அலையாய் படிந்திருந்த கரிய கிராப்புத் தலை. சாதாரணமாகச் சிரித்துப் பேசுகிற வேளைகளில் அந்த

முகத்தில் இயல்பான ஒரு வசீகரம் மின்னும். அவனது உள்ளம் கடுகடுத்திருக்கிற நேரங்களில் அவன் குடித்து விட்டுக் கத்துகிற சமயங்களில், அந்த முகத்தில் ஒரு கருமையும் கடுமையும் சேர்ந்துவிடும். அப்போது அந்த முகம் அநேகருக்கு பயம் எழுப்புவதாயும், சிலருக்கு வெறுப்பு உண்டாக்குவதாகவும் காட்சி தரும்.

முத்துமாலை நெடிது வளர்ந்த கம்பீரத் தோற்றம் கொண்டவனுமல்லன். சராசரி உயரம்தான். பூசி மெழுகி விட்டது போன்ற மினுமினுப்பான புஷ்டியான உடல். சகஜ வேளைகளில் அவனைப் பார்த்துப் பயப்படுவதற்கு எதுவும் இருப்பதாகவே தோன்றாது. ஆனாலும் பெரும் பான்மையினர் அவனை நினைத்துப் பயப்பட்டார்கள். அவனை விட்டு விலகியே சென்றார்கள். அவன் வழிக்குப் போகாமலிருப்பதே தங்களுக்கு நல்லது என்று எண்ணினார்கள்.

ஊராரின் போக்கை எண்ணுகிறபோதெல்லாம் முத்து மாலைக்கு அவனுடைய இளம்பிராயத் தோழன் காசி அடிக்கடி கூறியதே ஞாபகம் வரும்.

''பெரும்பாலான மனிதர்கள் பயந்தாங்கொள்ளிகள் தான். நெஞ்சுத் தைரியம் இல்லாதவர்கள். 'அஞ்சி அஞ்சிச் சாவாரிவர். அஞ்சாத பொருள் அவனியில் எதுவு மில்லை' என்று நெஞ்சு பொறுக்காமல் ஒரு கவி பாடி வச் சானே, அது ரொம்பவும் சொக்குத் தங்கமான உண்மை. அதட்டிப் பேசுகிறவன், அடாவடி பண்ணுகிறவன், கையிலே கம்போ கத்தியோ தூக்குகிறவன் தனி ஒரு வனாக இருந்தாலும். அவனைப் பார்த்து பயப்படுறவங்க ரொம்பப் பேரு இருப்பாங்க. நீ எவனையும் வெட்டவும் வேணாம், குத்தவும் வேணாம், கையிலே பெரிய அரி வாளை வச்சுக்கிட்டு. ஆ-ஊன்னு கத்திக்கிட்டுத் திரி. நீ

பெரிய ஹீரோ ஆயிருவே சீக்கிரமே!' என்று காசி சொல்வான்.

காசி முத்துமாலை கூடப் படித்தவன். இரண்டு பேரும் ஒன்பதாம் வகுப்பு வரை படித்தவர்கள். தங்கராசுவும் அவர்களோடு படித்தவன்தான். ஆனால் அவன் நல்ல பையன்; ஒழுக்கத்துக்கு எடுத்துக் காட்டு. ஒவ்வொரு வகுப்பிலும் 'நன்னடத்தை' ('குட் காண்டக்ட்') க்கான பரிசு அவனுக்கே கிடைத்து வந்தது.

"முத்துமாலை! ஒழுக்கம், நேர்மை, நியாயம், நல்லவனாக இருக்கிறது என்பதெல்லாம் ஒரு அளவுக்குத்தான் நல்லது. ஜனங்கள் இதுகளை மதிக்கிறதேயில்லை. ஒழுங்காக நடக்கிறவன், நேர்மையா நியாயமா செயல் புரிகிறவங்க, நல்லவங்களா வாழ முயல்கிறவங்களை, மதிக்கிறதை விட; துணிஞ்சவங்களை, அடாவடித்தனம் பண்றவங்களை, கொள்ளையடிச்சுப் பணம் பண்ணுகிறவங்களை, மத்தவங்களை ஏமாத்தியும் மிதிச்சும் தாங்கள் உயர்வதற்கு வழி பண்ணிக்கிறவங்களைத்தான் ஜனங்க கெட்டிக்காரங்க என்றும்; வாழத் தெரிஞ்சவங்க, சாமர்த்தியசாலிகள், மரியாதைக் காட்டப்பட வேண்டியவங்க என்று நினைக்கிறாங்க. அடக்கம் அமரருள் உய்க்கும் கிறதுக்கு நேரடியான அர்த்தம் உனக்குத் தெரியுமா? "அடக்கமாக இருப்பது உன்னை இந்த உலகத்திலே வாழ வைக்காது; சீக்கிரமே செத்துப் போகும்படி செய்யும் என்பதுதான்!"

இவ்விதம் ஒரு முறை லெக்சரடித்து விட்டு காசி சத்தம் போட்டுச் சிரித்தான். 'கடகட என்று சிரித்தானய்யா ராசா தேசிங்குன்னு பாடுவாங்களே, அது மாதிரி சிரிக்கப் பழகுறேன்' என்றும் அவன் சொல்வது உண்டு.

காசி முத்துமாலையை விட இரண்டு வயது மூத்தவன். ஆனாலும் அவன் தனது வயதுக்கு மீறிய அறிவும்,

அனுபவமும் பெற்றவன் போல் பேசுவான். அப்படிப் பட்ட பெரிய ஆட்கள் நிறைந்த சூழலில் அவன் வாழ்ந்து வந்தான். அவன் மூளையும் குறுக்கு வழியில் தீவிரமாக வேலை செய்யும் சக்தி பெற்றிருந்ததாகத் தோன்றியது.

காசி அடிக்கடி சொல்லி வந்தான். "ஏய் ஒரு நாள் பாரு. நான் இந்த வட்டாரத்து ஹீரோவாக மாறு கிறேனா இல்லையா, பார்! ரொம்ப வருசங்களுக்கு முன்னாலே ஜம்புலிங்கம்னு ஒருத்தன் இந்தப் பக்கத்திலே பேரு பெற்றுத் திரிஞ்சான். அவனைக் கொள்ளைக்காரன் என்பாங்க. அது இல்லே. இருட்டு வேளையிலே நீதி பரி பாலனம் புரிஞ்ச ஏழை ராஜா அவன். இருக்கிறவங்க கிட்டெ கொள்ளையடிச்சு இல்லாதவங்களுக்கு உதவி பண்ணின துணிச்சல்காரன். இங்கிலாந்திலே, ராபின் ஹுட்னு ஒருத்தன் இருந்தானே. நாம பாடங்களிலே கூட அவன் பெருமையைப் படிச்சிருக்கோமே? அநியாயக் காரங்களிடம் கொள்ளையடிச்சு ஏழை எளியவங்களுக்கு உதவி பண்ணுவான்னு. அது மாதிரி நானும் ஒரு ராபின் ஹுட் ஆகணும்னு ஆசைப்படுகிறேன். ஜம்புலிங்கம் மாதிரி இந்தப் பக்கத்து ஆசாமிகளை அஞ்சி நடுங்கும்படி செய்யணும்னு விரும்புறேன்...'

முடிவில் அவன் அப்படித்தான் மாறினான். நாட்டுப் புறத்து ஆசாரி எவனோ செய்து கொடுத்த துப்பாக்கி ஒன்றை வைத்துக் கொண்டு அந்த மாவட்டத்தையே கதி கலங்க அடித்தான். நாலைந்து வருடங்கள் எங்கே பார்த் தாலும், காசி, காசி என்ற நாம ஜபந்தான். போலீசார் பெரும் முயற்சியின் பேரில் அவனைப் பிடித்து விட்டார் கள். உரிய தண்டனையும் கொடுத்தார்கள்.

அது வேறு விஷயம். என்றாலும், முத்துமாலைக்கு அவன் பெரிய ஹீரோவாக, ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தான்.

இவ்வளவுக்கும் காசி பெரிய பயில்வான் ஒன்று மில்லை. ஒல்லி, நல்ல உயரம், சாதுவான முகம், மீசை கூடக் கிடையாது.கும்பலில் அவனைத் தனியாக எடுத்துக் காட்டக்கூடிய விசேஷப் பொலிவு எதையும் அவனுடைய நடை உடை பாவனைகள் கொண்டிருக்கவில்லை.

ஆனாலும், ரொம்ப ரொம்பப் பேர்-பலபல ஊர்க் காரர்கள்-அவன் பெயரைச் சொல்லிப் பயப்பட்டுக் கொண்டிருந்தார்கள். காரணம் என்ன? அவன் துப்பாக்கி வைத்திருந்தது மட்டும்தானா? இல்லை. 'அஞ்சி அஞ்சிச் சாவது' மனித சுபாவமாக இருந்தது. பெரும்பாலோரி டம் இல்லாத நெஞ்சுத் தைரியம்- எதுக்கும் துணிந்த ஒரு எடுப்பான போக்கு காசியிடம் இருந்தது.

இது முத்துமாலையின் மன ஆழத்தில் வேலை செய்து கொண்டிருந்தது.

முத்துமாலை காசி மாதிரி வெகுவாகத் துணிந்த கட்டை இல்லை. தங்கராசு மாதிரி ஒழுக்கம் நிறைந்த நல்லவனுமில்லை. அவனிடம் நற்குண அம்சங்களும், தீயகுண அம்சங்களும் கலந்திருந்தன.

ஒவ்வொருவரிடமும் சிலசில இயல்புகள் மேலோங்கிச் செயல் புரிவதற்கு அவரவர் பெற்றோர்களின் பாதிப்பு, சூழ்நிலை பாதிப்பு, சுற்றுப் புற மனிதர்களின் தாக்கம், சகவாச தோஷம் எல்லாம் காரணங்களாகின்றன. அவர வர்களுடைய மனப் போக்கும் ஆசைகளும் பல்வேறு உணர்ச்சிகளும் தூண்டுதல்களாகின்றன.

முத்துமாலையின் அப்பா பூவுலிங்கம்பிள்ளை மகனி டம் பிரியமோ பாசமோ கொண்டிருந்ததில்லை. சில சமயங்களில் அவர், அவனை வெறுக்கவும் செய்தார். அவ்வப்போது, காரணத்தோடும் காரணம் இல்லாமலும் அவர் அவனை அடிப்பது உண்டு. அவன் படித்துக்

கொண்டிருக்கிற போது 'நீ படிச்சுப் பாட்டைத் தொலைச்சே! கடைக்குப் போயி இதை வாங்கிட்டு வா' என்று துரத்துவார். இதனால் எல்லாம் முத்துமாலையின் உள்ளத்தில் ஒரு கசப்பு வளர்ந்து வந்தது.

எனவே, அவனுடைய பதினொன்றாவது வயதில் தந்தை இறந்து போனதும், அவன் துக்கம் கொள்ள வில்லை. "தொல்லை போய்த் தொலைந்தது" என்று அவனுடைய அடி மனசில் ஒரு ஆனந்தமே ஏற்பட்டது.

பூவுலிங்கம்பிள்ளை 'தான் நினைத்த முப்பாக''மனம் போனபடி எல்லாம் வாழ்ந்து நாட்களை ஓட்டினார். வீடும் வயல்களும் இருந்தன. அப்படி வாழ்வதற்கு அவை நன்கு உதவின . கவுரவமாக வீட்டிற்கு வரவழைத்துக் குடித்தார்.விரும்பிய பெண்களை சேர்த்துக் கொண்டார். மனைவியிடம் சண்டை போட்டார். சமாதானமாகவும் இருந்தார்.

முத்துமாலையின் தாய் வடிவம்மாள் அவனிடம் அளவுக்கு அதிகமான அன்பு செலுத்தி அவனைக் கெடுத் தாள். ஒரே பையன். அந்தச் செல்லம். தந்தை அவனைச் சீராட்டவில்லையே என்ற ஆதங்கம் வேறு.

அப்பா இறந்த மூன்றாவது வருடமே பையன் 'ஏட்டைக்கட்டி இறைப்பிலே சொருகிவிட்டான்' என்று சொல்ல வேண்டும். அவன் படித்தகாலத்தில் கூட ஏடுகள் இல்லாமல் போயிருந்ததால் புத்தகங்களையும் நோட்டுக் களையும் வெந்நீர் அடுப்பில் போட்டுவிட்டான் என்று கூறலாம் முத்துமாலை அப்படித்தான் செய்தான்.

அவர்களுடைய வயலை 'மேல் பார்வை' பார்த்து வந்த பெரியப்பா பாபநாசம் பிள்ளை கள்ளக்கணக்குகள் எழுதியும், தில்லுமுல்லுகள் பண்ணியும் ஏமாற்றிவந்தார். வடிவம்மாள் பொம்பிளை, முத்துமாலை சின்னப்பயல்

என்கிற தைரியம்தான். அவர் பெயரே பாபநாசம் பிள்ளை என்றிருந்ததனால் புதிய புதிய பாபங்கள் செய்வதற்கு அவர் தயங்கவில்லை. பூவுலிங்கம் உயிரோடிருந்த காலத்தில் 'சீட்டுக்கட்ட' என்றும்,வேறு சிறுசிறு காரணங்கள் சொல்லியும் அவர் திருப்பிக் கொடுப்பதாக வாங்கியிருந்த ரொக்கப் பணத்தை 'ஏப்பம் போட்டு விட்டார்.' அப்படி எதுவும் பணம் தரவேண்டியதிலை என்றும்,சீட்டு பாக்கிவகையில் வடிவுதான் முந்நூறு ரூபாய் வரை தர வேண்டும் என்றும் சொன்னார். ஒவ்வொரு பூவின் போதும், நெல் சரியாக விளையவில்லை என்று பொய்க் கணக்குக் கூறி அவர் லாபம் கண்டுவந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் அவர் வடிவைப் பார்த்துப் பல்லிளித்து, சாடைமாடையாக ஏதோ சொன்னதை, முத்துமாலை கேட்டு விட்டான். அவன் வீட்டில் இல்லை என்ற நினைப்பில்தான் அவர் அவ்வாறு சாடை பேசத் துணிந்தார். ஆத்திரம் கொண்ட முத்துமாலை அரிவாளும், கையுமாக வெளியே வந்தான். "வேய், நீரு பெரியப்பாவா இருந்தாலும் சரி, அதுக்கு மேலே பெரியவரா இருந்தாலும் சரி, உம்மை இங்கேயே வெட்டிப் பொலியிட்டிருவேன். சரியான உத்திராட்சப் பூனை நீ. ஒண்ணாம் நம்பர் ஆஷாட பூதி, பணத்துக்கு நாமம் போட்டீரு, பூ தோறும் நெல்லை முழுங்கினீரு. கள்ளக் கணக்கெழுதி, ரூபா வேறே கேட்டீரு. இப்ப இது மாதிரிப் பண்ண ஆரம்பிச்சிருக்கீரு. உம்மை நாசம் பண்ணினா, அது பாபமே ஆகாது". என்று கத்திக் கொண்டு அவர் முன்னே வந்து நின்றான்.

பெரியவர் வெலவெலத்துப் போனார். நா குழற, "என்னடே, இல்லேடே, என்ன இது...தெரியாத்தனமா" என்று உளறினார். 'நீ பணம் எதும் தரவேண்டியதில்லே. இனி வயலை எல்லாம் நீயே பார்த்துக்கோ' என்றார்.

அவனுடைய அம்மா வந்து அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வீட்டுக்குள்ளே போயிராவிட்டால் முத்துமாலை அன்றைக்கு பாபநாசம் பிள்ளைக்கு ஏதாவது வெட்டுக்காயம் ஏற்படுத்தி ஒரு பாடம் கற்பித்திருப்பான்.

அன்றிலிருந்து பாபநாசம் பிள்ளை அவன் கண்ணில் படுவதேயில்லை. வெறும் சல்லிப்பயல், உருப்பட மாட்டான்! என்று மனசுக்குள்ளும், தனக்குத் தெரிந்தவர்களிடமும் சொல்லத் தவறுவதுமில்லை.

"எப்படி உருப்படுவான்? அப்பன் இருக்கையிலேயே மகனை கவனிக்கிறதில்லை. அதன் பிறகு அம்மாக்காரி செல்லம் கொடுத்து குட்டிச்சுவராக்கிப் போட்டா. அறுதலி வளர்த்த தறுதலைங்கிறது சும்மாவா?'' என்று விமர்சனம் வேறு செய்து வந்தார் அவர்.

முரட்டுத் துணிச்சலின் சக்தியை முதல் அனுபவத்திலேயே நன்றாகக் கண்டுகொண்ட முத்துமாலை நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு திரியலானான். எதுக்கெடுத்தாலும் அரிவாளைத் தூக்கினான். அப்போது அவனுக்கு வயது பதினேழு பதினெட்டுதான் இருக்கும்.

அந்த ஊரில் அவனைப் பாராட்டவும், புகழ்ந்து தூண்டிவிடவும் சிலர் இருந்தார்கள். அவனது சுபாவத்துக்கு ஏற்ற சிநேகிதர்களும் சேர்ந்தார்கள். பொழுது போக்குவதற்குச் சீட்டாட்டம். சும்மா ஜாலியா பக்கத்து டவுனுக்குப் போய் வருவது என்றெல்லாம் பழகி, கள்ளு, சாராயம் என்று எது கிடைத்தாலும் குடிப்பது எனத் தேர்ந்து விட்டார்கள்.

இதற்குள் முத்துமாலையின் பழைய சகா காசி பெரிய ஹீரோ ஆகிவிட்டான். அவனுடைய புகழ்ச்சூடு இவனையும் தொட்டு பதப்படுத்தியது. பெரியப்பா பாபநாசம் பிள்ளையும், மண்டையைப் போட்டு விட்டார்.

அவருடைய புத்திரபாக்கியங்கள் அவரைப் போல் வாயடியும் செயல் சாமர்த்தியமும் பெற்றிராததனாலே, நமக்கு இந்த ஊர் லாயக்குப்படாது என்று தீர்மானித்து. டவுனோடு குடியேறி விட்டார்கள்.

''குப்பை செத்தையை எல்லாம் காற்று வாரிக்கிட்டுத் தான் போகும். போறவங்க போகட்டும்!'' என்று முத்து மாலை பிரிவுபசாரம் கூறினான். தன்னைப் பழித்த பெரியப்பனை பழிக்குப் பழி தீர்த்து விட்டதாக ஒரு சந்தோஷம் அவனுக்கு.

இதெல்லாம் தங்கராசுக்குத் தெரியாது. முத்து மாலை படிப்புக்குக் கும்பிடு போட்டு விட்டது வரையில் தெரியும். அதன் பிறகு அவன் இந்த ஊரில் இல்லை. படிப்பதற்கு வசதியாக இருக்கும் என்று அவன் நகரத்தில் பள்ளிக்கூட ஹாஸ்டலிலேயே சேர்ந்து விட்டான். பிறகு காலேஜ் படிப்பு. லீவு நாட்களில் ஊருக்கு வந்தாலும், முத்துமாலையைப் பற்றி அவன் அக்கறை கொண்ட தில்லை.

படிப்பு முடிந்ததும், அவனுக்குப் பண பலமும் தகுந்த ஆள் பலமும் இருந்ததால், 'வடக்கே ஒரு ஊரில்' நல்ல வேலை கிடைத்துவிடவே ஊரை விட்டுப் போனான். பிறகு நல்ல இடத்தில் கல்யாணம். இப்படியாக அவனு டைய அந்தஸ்து உயர்ந்தது. வெளியூர் சஞ்சாரங்கள் மிகுந்ததால், சொந்த ஊருக்கு வர வேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்படவில்லை. அதற்கான காலமும் கிட்டவில்லை.

பலப்பல வருடங்களுக்குப் பிறகு இப்போதான் வந் திருக்கிறான். ஊர் விசேஷங்களை எல்லாம் பற்றிச் சிறிது சிறிதாக விசாரிக்கையில் முத்துமாலையின் பிரதாபமும் தெரிய வந்தது.

தங்கராசு ஊருக்கு வந்த முதல் நாள் ராத்திரி அடிக்கடி கூப்பாடும் விசில் சத்தமும் கேட்டது. அவனுக்கு நல்ல அலுப்பு. எவனோ குடிகாரப் பயல் போக்கத்துத் திரிகிறான் என்று எண்ணிக் கொண்டான்.

மறுநாள் பகலில், பேசிக் கொண்டிருக்கையில், 'ராத்திரி எவனோ குடிகாரப் பய வீண் கலாட்டா செஞ்சான் போலிருக்கே!' என்றான் அவன்.

அவன் தாய் 'முத்துமாலைதான் அந்த வரத்து வாறான். அவனுக்கு அது தினசரி வழக்கமாகிப் போச்சு, என்று சாதாரணமாகச் செனேன்னாள்.

தங்கராசு அதிசயித்தான். தினசரியா? இப்படியா பண்ணுவான், முத்துமாலை? யாரு, நம்ம பூவுலிங்கம் மாமாவோட மகனா? அவனுக்கென்ன கேடு வந்தது இப்படி? என்று கேள்விகளை அடுக்கினான்.

"இந்த ஊரிலே அவனைக் கேட்கிறதுக்கு ஆளு யாரு இருக்காங்க? நல்லவங்க, பெரியவங்க, ஆக்கினைகள் செய்யக் கூடியவங்க எல்லோரும் போய் சேந்தாச்சு, சில பேரு இந்த ஊரே நமக்கு வேண்டாம்னு டவுனுக்குப் போயிட்டாங்க. முத்துமாலை ராச்சியம் கொடிகட்டிப் பறக்குது!" என்று அம்மா அறிவித்தாள்.

தங்கராசு கேள்விகள் போட்டு மேலும் சில தகவல்களைத் தெரிந்து கொண்டான். "சே, பெரிய நியூசன்ஸாப் போச்சே. போலீசுக்குச் சொல்லி, அடக்கிப் போட வழி பண்ணலியா யாரும்?" என்று தவித்தான்.

"நம்ம ணருக்குப் போலீஸ் ஸ்டேஷன் வரவேயில்லை. பத்து மைலுக்கு அப்பாலே இருக்கு போலீசும், ஸ்டேஷனும். அங்கே போய் சொல்லித்தான் என்ன நடந்திரப் போகுதுன்னு யாரும் அக்கறை எடுத்துக்கிடலே!"

"இதுதான் நம்மவங்க கிட்டேயே உள்ள குறை, அநியாயங்களை, அக்கிரமங்களைத் தட்டிக் கேட்கிறது கிடையாது. அதுக்கு யாரும் முன் வருவதும் இல்லே. நமக்கென்ன, யாராவது எப்படியாவது கேட்பாங்க என்று தட்டிக் கழிச்சிடுவாங்க. இல்லாட்டி, இருக்கவே இருக்கு. ஆண்டவன் கேட்பான்கிற வேதாந்தம். இன்னைக்கு நான் முத்துமாலை கிட்டே பேச்சுக் கொடுக்கிறேன்" என்று தங்கராசு பொரிந்து கொட்டினான்.

அம்மா பயந்து விட்டாள். பதறினாள். "ஏ ராசு, உனக்கெதுக்கு வீண் வம்பு? இத்தனை நாள் கழிச்சு வந்திருக்கே. பத்துப் பதினைஞ்சு நாள் இருந்திட்டுப் போப் போறே. விருதாச் சனியனை விலை கொடுத்து வாங்குகிற மாதிரி, வலியப் போயி நீ சிக்குவானேன்? துஷ்டனைக் கண்டால் தூர விலகுன்னு பேரு!" என்றாள்.

"இப்படிப் பழமொழிகளுக்கும் தத்துவ உபதேசங்களுக்கும் குறைச்சல் இல்லே!" என்று முனகினான் மகன். பிறகு வாய் திறந்து எதுவும் சொல்லவில்லை.

முன்னிரவில் சீட்டி ஒலி எழுந்ததுமே, "முத்துமாலை கிளம்பி விட்டான்". என்று சொன்ன அம்மா மகனுக்கு எச்சரிக்கை விடுத்தாள். "ராசு, அவன் எக்கேடும் கெடுதான். ஊரிலே யாருக்கும் இல்லாத அக்கறை உனக்கு எதுக்கு? நீ வெளியே தலை காட்ட வேண்டாம். அவன் கிட்டே பேச்சுக் கொடுக்கவும் வேண்டாம். சொல்லிட்டேன், சொல்லிட்டேன்"

அவன் சரி, சரி, என்று தலையசைத்தான். எட்டு மணிக்கே படுக்கவும் செய்தான். ஆனால் தூக்கம் எங்கே வந்தது?

அம்மா நன்றாக தூங்கலானாள். லேசு லேசாக குறட்டை கூட வந்தது அவளுக்கு.

ரொம்ப நேரம் ஆன பிறகு, முத்துமாலையின் சத்தம் மறுபடியும் நெருங்கிவந்த போது, தங்கராசு எழுந்து திண்ணையில் காத்திருந்து, அவன் கவனத்தைக் கவர்ந்தான். பேசினான். பதிலும் பெற்றான்.

ஆனாலும், அவனுடைய ஆச்சரியம் எங்கே குறைந்தது?

# 3

தங்கராசுவை ஆச்சரியமாகப் பார்த்தாள் அவன் அம்மா மறுநாள் காலையில். முத்துமாலையோடு தான் பேசியதைப் பற்றி அவனே அவளிடம் சொன்ன போது தான்,

“ஆங், அப்படியா? அவன் சீறி விழலியா? முறைக்கலியா?” என்று கேட்டாள்.

“அவன் என்ன வெறி மிருகமா சீறிப் பாயறதுக்கு? இல்லே நல்ல பாம்பா? அவனும் நம்ம மாதிரி மனுசன் தானே? என் கூடப் படிச்சவன் தானே ஒரு காலத்திலே!” என்று தங்கராசு சொன்னான்.

“இருந்தாலும், ராசு, எல்லா மனுசங்களும் ஒண்ணு போலவா இருக்கிறாங்க? நாய்க்குணம், நரிக் குணம், பேய்க் குணம் பெற்றவங்களும் இருக்கதானே செய்யறாங்க?”

“துஷ்டமிருகங்க கூட அதது பாட்டுக்கு, தான் உண்டு தன்காரியம் உண்டுன்னுதான் போகும் அம்மா. நாம அது

கிட்டே போய் சேட்டை பண்ணுனா, அதை தாக்கினா, சீண்டி விட்டால்தான் அதுக எதிர்க்கும், பசி அல்லது வெறி ஏற்படுகிற சமயங்களிலும் தாக்கும்...''

''சும்மா போகிற போக்கிலே முறைக்கிறதும் எதிர்க்கிறதும் சில மிருகங்களின் சுபாவம்தான். சில மனுசங்கிட்டேயும் அந்தக் குணம் இருக்கு'' என்றாள் அவன் அம்மா.

''இருந்திட்டுப் போகுது! நாம பிரியமும் அன்பும் காட்டினா மத்தவங்களும் அப்படியே நம்மிடம் நடப்பாங்க. நாம வெறுத்து ஒதுக்கினா, மத்தவங்களும் நம்மகிட்டே வெறுப்புக் காட்டுவாங்க!''

''அதெல்லாம் சரிதான் ராசு. எதுக்கும் நீ முத்துமாலையைவிட்டுவிலகியிருக்கறதே நல்லது. அவன்கிட்டே பேசிப் பழகணும்கிற ஆசையை விடுட்ரு. அது உனக்கு நல்லது செய்யாது'' என்று அம்மா உபதேசித்தாள்.

''சரி அம்மா'' என்றவன், ''ஆமா முத்துமாலையின் அம்மா என்ன ஆனாள்? இருக்காளா, போய்ச் சேர்ந்திட்டாளா?'' என்று விசாரித்தான்.

அம்மாள் பெருமூச்சு விட்டாள். ''வடிவு ஐயாவிடம் போய்ச் சேர்ந்து எத்தனையோ வருசமாச்சு. அவ பாவம் என்ன சுகத்தைக் கண்டா? பாவி நான் பொண்ணாப் பிறந்து புண்ணா உலையிதேனேன்னு அவ புலம்பாத நாள் கிடையாது. மாப்பிள்ளையாலும் அவளுக்கு சந்தோஷம் கிடைக்கலே, மகனாலேயும் நிம்மதி கிடைக்கலே. மகன் கிட்டே உசிரையே வச்சிருந்தா பாவி மட்டை. அவனுக்கு தெருவிலே, மூலை முடுக்கிலே ஏதாவது ஆபத்து நேர்ந்திடப்படாதேன்னு அவன் பின்னாலேயே நிழல் மாதிரிப் போவா. அவன் குடிச்சுப்போட்டு, வம்புச் சண்டையிலே மாட்டிக்கிடு

வான். அவதான் போயி அழுது கெஞ்சிக் கும்பிட்டு அவனை மீட்டுக்கிட்டு வருவா. அவன் கேட்டபோதெல் லாம் பணம் கொடுப்பா. கடன் வாங்கியும், பண்டம் பாத்திரங்களை அடகு வச்சும் நகைகளை வித்தும்,ஹூம், எவ்வளவு பணம் கொடுத்திருக்கா. அவ்வளவையும் நாச மாக்கிப் போட்டானே இந்தக் கரிக்கொல்லன்!''

''அம்மா, அளவு மீறினால் அமுதமும் நஞ்சாகும். அன்பு கூட ரொம்ப அதிகமாகி விட்டால், ஆளைக் கெடுத் துப்போடும்'' என்றான் தங்கராசு.

''பெத்தவ மனம் பிள்ளைகளுக்கு எங்கே புரியுது? எந்த மகன்தான் அம்மாவின் உள்ளத்தை சரியாகப்புரிஞ் சுக்கிடுதான்?'' என்று பொதுவான புலம்பல் ஒன்றைப் புலம்பி வைத்தாள் அம்மாக்காரி.

மகன் மவுனமாகச் சிரித்துக் கொண்டான்.

மீண்டும் அம்மாவே தொடர்ந்தாள்: ''வடிவுக்கு வாழ் நாளிலும் அமைதியில்லைன்னு போச்சு, சாவிலும் அமைதியில்லாமப் போச்சு. மகன் எப்படிப் பிழைக்கப் போறானோ என்ற கவலையினாலேயே அவ துடிச்சுக் கிட்டுக் கிடந்தா. அவ சாகிறவரையாது இந்த முடி வான் வீட்டோடு கிடக்கப்படாதா? அவளுக்கு இழுத்துக் கிட்டு கிடக்கு. இவன் குடிச்சிக்கிட்டும் சண்டை பிடிச்சிக் கிட்டும் அலைஞ்சான். சரி, உசிரு ஒருமட்டும் உடலை விட்டுப்போச்சு. உடலை நிம்மதியா சுடுகாட்டுக்கு எடுத் திட்டுப் போக முடிஞ்சுதா? அவ தலையெழுத்து! ஊம். யாராரு என்னஎன்ன அனுபவிக்கணும்னு விதிச்சிருக்கோ, அதை அனுபவிச்சுத்தானே தீரணும்?''

''ஏன், என்ன நடந்தது?'' என்று ஆவல் தூண்டப் பெற்றவனாய் அவன் கேட்டான்.

"முத்துமாலை அம்மன் கோயிலுக்கு வரிப்பணம் கொடுக்கலே. கொடைக்குக் கொடை தலைக்கட்டு வரி கொடுக்கணுமா இல்லியா? ஊர் நியாயம் தானே அது? நான் கொடுக்க மாட்டேன்; அம்மன் எனக்கு ஒரு உதவியும் பண்ணலே; நான்மட்டும் அம்மனுக்கு பணம் கொடுக்கணுமாக்கும்னு அவன் சண்டித்தனம் பண்ணினான். உன்னைவிட ஏழை எளியவங்க எல்லாம் கொடுக்கலியா; ஊர் வரியை மறுக்கப்படாதுன்னு எவ்வளவு சொல்லியும் அவன் கேட்கலே. அதுனாலே, அவனோட அம்மா செத்ததும், ஊர்காரங்க மறிசல் பண்ணிட்டாங்க. அம்மன் வரி பாக்கிப் பணம் பூரா வந்தால்தான் பிணம் வீட்டைவிட்டுப் போகலாம்; இல்லேன்னா தெருவைக் கடக்க முடியாதுன்னு சொல்லி, கூடி நின்னாங்க. முத்துமாலை பிடிவாதம் புடிச்சான்; அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்னு கேட்டான். அதுதான் ஊர் மரபுன்னு சொல்லிப் போட்டாங்க. ஒரு நாள் பூரா பிணம் வீட்டிலேயே கிடந்தது. அப்புறம் அவன் தம்பிடி பாக்கி இல்லாமல் அம்மன் வரியையும் அபராதம் பத்து ரூபாயையும் ஊரார் முன்னாலே கட்டினான் பிறகு மளமளன்னு காரியம் நடந்து முடிஞ்சுது. இம்புட்டு வேணுமோ? ஊரோடு ஒத்துப் போயிருக்கலாம் இல்லையா?"

அம்மா நீட்டி இழுத்துப் பேசி முடித்தாள்.

"முத்துமாலைக்கு கல்யாணம் ஆகலியோ?"

"அறுதக் கொல்லனுக்கு கல்யாண எழவு ஒரு கேடா? அவனை முறிச்சு அடுப்பிலே வய்க்கோ!" என்று படபடத்தாள் தாய். பிறகு தொடர்ந்தாள்: "இப்படிப் பேர் எடுத்த கொம்பேறி மூக்கனுக்கு எவ பொண்ணு கொடுப்பா? அம்மாக்காரிக்கு ஆசைதான். எவளாவது கொடுத்திருவான்னு, அலையா அலைஞ்சா. யார் யாரிடமெல்லாமோ சொல்லி முயற்சி பண்ணினா. கல்யாண

மாகி ஒருத்தி வீட்டோடு வந்திட்டா, பையன் தங்கக்கம்பி ஆயிருவான்னு அவளுக்கு நெனைப்பு. அவன் எடுத்த எடுப்புக்கு அது நடக்கிற காரியமா? அதுனாலேயும் அவ நெஞ்சு வேகலேன்னு சொல்லு!''

''ஐயோ பாவமே!'' என்றான் தங்கராசு.

''அதுக்காக இவன் வருத்தப்பட்டான்கிறியா? அது ஏது! கட்டினவனுக்கு ஒரு வீடு; கட்டாதவனுக்கு எத்தனையோ வீடுக; அதுமாதிரி தாலி கட்டினவனுக்கு ஒரு பெண்டாட்டி; தாலி கட்டாதவனுக்கு எத்தனையோ பெண்டாட்டிகள்னு எக்காளம் கொழிச்சான். பிறகு, கெட்டலைஞ்ச கழுதை எதையோ தேடிப் புடிச்சு தொடுப்பு வச்சுக்கிட்டான்'' என்று கரித்து கொட்டினாள்.

''அட, அது யாரு அவ? எந்த ஊர்க்காரியோ?''

இத்தனை நேரம் பேசியதே ரொம்பப் பெரிசு. ஏக தாராளம் என்று அம்மா எண்ணி விட்டாள். ''எந்த நாயி எப்படிப் போனா நமக்கென்ன! கண்டவன் கதையை எல்லாம் பேசிக்கிட்டிருந்தா நம்ம சோலி என்னாவறது?'' என்று சொல்லியவளாய் அடுப்படிக்குள் புகுந்து கொண்டாள்.

முத்துமாலை இன்ட்ரஸ்டிங் கேரக்டர்தான்னு தோணுது என்று எண்ணினான் தங்கராசு.

# 4

தங்கராசு வடக்கேயிருந்து வந்திருக்கிறான் என்றுஅறிந்ததும் அநேகர் அவனைப் பார்த்துப்போவதற்காக வந்தார்கள். அவனும் சொந்தக்காரர்கள், பெரியவர்களை அவரவர் வீட்டில் போய் பார்த்துவிட்டு வந்தான்.

யார் வந்து பேசினாலும், அல்லது எவரோடு அவன் பேசினாலும் பேச்சோடு, பேச்சாக முத்துமாலை விஷயமும் தலைதூக்கிவிடும். அவனைப்பற்றி ஒவ்வொருவர் ஒவ்வொன்றைச் சொன்னார்கள். எப்படியிருந்தாலும், முத்துமாலை அந்தஊராரின் பேச்சுக்கு முக்கியமான ஒரு பொருளாக வளர்ந்திருந்ததை தங்கராசு புரிந்து கொண்டான்.

—அவன் நல்லவன்தான். குடிதான் அவனைக் கெடுத்துப் போட்டுது.

—குடிக்காத நேரங்களிலே முத்துமாலை ரொம்ப ஒழுங்காக நடந்து கொள்வான்.

—குடித்தாலும்தான் என்ன! தப்புத் தண்டாவுக்கு போகமாட்டான்.

—குடித்துவிட்டு ராத்திரி நேரங்களிலே கூச்சல் போட்டுக்கிட்டுத் திரிகிறான் என்கிறதைத் தவிர, அவனாலே மற்றபடி எந்தவிதமான தொந்தரவும் கிடையாது.

ஆரம்பத்திலே கொஞ்சம் ஓவராப் போனான். அரிவாளை வச்சுக்கிட்டு எல்லாரையும் மிரட்டினான். தன்னைப் பத்தி பயங்கரமான ஒரு அபிப்பிராயம் உண்டாக்குதற

காக அப்படிச் செய்திருக்கலாம். பிறகு போகப் போக அவன் யார் வம்புக்கும் போவதில்லை.

வந்த வம்பையும் விடமாட்டான். சில சமயங்களிலே அவன் மனசுக்கு நியாயம்னு படலேன்னு சொன்னா, அநாவசியமா மத்தவங்க வம்பிலே கூடத் தலையிடு வான்...

அப்படித்தான் ஒரு சமயம், கோயில் மாந்தோப்புக் குத்தகைக்காரன் ஒரு சின்னப் பையனிடம் முரட்டுத் தனமாக நடந்து கொண்டான். சில சிறுவர்கள் சேர்ந்து கொண்டு மாமரத்தில் கற்களை எறிந்து மாங்காய்களைத் தட்டியிருக்கிறார்கள். குத்தகைக்காரன் வருவதைக் கண்டதும் பையன்கள் சிட்டாய் பறந்தார்கள். ஆனால் ஒரு பையன் மாட்டிக் கொண்டான். அவன் மடியில் ஒரு மாங் காயும் இருந்துவிட்டது பாவம்.

அவன் ஒரு ஐயர் பையன். குத்தகைக்கார முரடன், அவனை உருட்டி மிரட்டினாலும் அடித்து உதைத்தாலும் தட்டிக் கேட்பதற்கு யாரும் கிடையாது என்பதைத் தெரிந்து வைத்திருந்தான். இந்தப் பையனைப் பயமுறுத் துவதன் மூலம் மற்ற சிறுவர்களுக்குப் பாடம் கற்பிக்க ஆசைப்பட்டான்.

சிறுவன் கைகளில் நல்ல 'பொச்சக் கயிறை' கட்டி அவன் கால்களையும் கட்டி, அவனைக் கிணற்றினுள் இறக்கத் திட்டமிட்டான். 'எல்லாம் வேடிக்கை பார்க்க வாங்க' என்று உற்சாகமாகக் கூவி, கும்பல் சேர்த்தான். பையன்கள், பெண்கள் பெரிய ஆட்களாகப் பலர் கூடிவிட் டார்கள். கல்லெறிந்து விட்டு ஓடிய சிறுவர்களில் அநேகர் கூட பம்மிப் பம்மி வந்து கூட்டத்தோடு கூட்ட மாகக் கலந்து நின்றார்கள்.

தோப்புக் குத்தகைக்காரன், அகப்பட்டுக் கொண்ட எலிக் குஞ்சை கொப்பரைத் தண்ணீருக்குள் முக்கி முக்கி எடுப்பதுபோல ஐயர் பையனை ஆழக் கிணற்றினுள் இறக்கியும் மேலே தூக்கியும் கயிற்றை ஊஞ்சலாட்டியும் விளையாடினான்.

பையன் பயந்து நடுங்கினான். ''ஐயா, ஐயா, கிணத்திலே போட்டிராதிங்க. மன்னிச்சிடுங்க. தெரியாமப் பண்ணிட்டேன். இனி மாமரத்துப் பக்கத்திலே மறந்துபோய் கூடப் போக மாட்டேன்'' என்று அலறினான்.

தோப்புக்காரனுக்கு குஷி பிறந்தது, ''ஏ, தண்ணிக் குள்ளே முக்கப் போறேன். ... கயிறை விட்டிரப் போறேன்'' என்று வேகமாக ஆட்டினான்.

பையன் பயந்து அலறினான்.

தோப்புக்காரன் சிரித்தான். ''ஏஹேய், ஐயரே ரெண்டரே, அமுக்கிப் புடிச்சா ஒண்ணரே! பையன்களா, எல்லாரும் சேர்ந்து பாடுங்க! ஐயரே ரெண்டரே, அமுக்கிப் புடிச்சா ஒண்ணரே'' என்று ராகம் போட்டுக் கத்தினான்.

அவனுக்கு வேண்டிய பையன்கள் அதைக் கோரஸாக எதிரொலித்தார்கள்.

அந்தச் சமயத்தில்தான் முத்துமாலை அங்கே வந்து சேர்ந்தான். அவன் வளர்ந்து பெரியவனாகி, பெயர் பெற்றுச் சில வருடங்கள் ஆகியிருந்த சந்தர்ப்பம் அது. நிலைமையைப் புரிந்து கொண்டான். கிணற்றினுள் தொங்கிய பையனின் பரிதாபகரமான தோற்றம் அவன் மனசைத் தொட்டது.

''ஏ செல்லையா, இதென்ன வேலை? ஒரு மாங்காய்க்காக இந்த பையனைக் கொல்லணுமா? மேலே தூக்கு அவனை'' என்று கூப்பாடு போட்டான். ''எல்லோரும்

வேடிக்கை பார்த்து நிக்கிறீங்களே, வெட்கமாயில்லே? அந்தப் பையன் நிலையிலே உங்க மகனோ, பேரனோ இருந்தா, இப்படிச் சும்மாகூடி வேடிக்கை பாப்பீங்களா?'' என்று கூட்டத்தைப் பார்த்துக் கத்தினான் முத்துமாலை.

''இவனை சாகடிக்கவா போறேன்? சும்மனாச்சியும் பயம் காட்டலாமேன்னு''

''பயத்தினாலே அவன் செத்துப் போவான் போலிருக்கு. சீக்கிரம் தூக்கு மேலே'' என்று முத்துமாலை அவசரப்படுத்தினான்.

தோப்புக்காரன் சிறுவனை மேலே தூக்கி, கட்டுகளை அவிழ்த்து விட்டான். அவன் கிணற்றுத் துவளத்தின் அருகில் நின்றபோது அவன் எதிர்பாராத நிலையில், முத்துமாலை குத்தகைக்காரனைப் பிடித்து உலுக்கி கிணற்றுப் பக்கமாகத் தள்ளினான்.

செல்லையா பதறிப் போனான். அவன் உள்ளே விழுந்திருக்க வேண்டியவன்தான். முத்துமாலையே அவனைப் பிடித்துக்கொண்டான். அவனுடைய உடல் நடுங்கிகொண்டிருந்தது. நெஞ்சு படக் படக் கென்று அடித்தது. நிஜமாகவே அவன் பயந்துவிட்டான். ''என்னய்யா இது! ஒரு வேளையைப் போல ஒரு வேளை இருக்குமா? இசை கேடா நான் உள்ளே விழுந்திருந்தால்'' என்று குறை கூறினான்.

முத்துமாலை சிரித்தான். ''பெரியவனான உன் பாடே இப்படின்னா, அந்தச் சின்னப் பையனுக்கு எப்படி இருந்திருக்கும்? நீ இப்ப சொன்னது அவனுக்கும் பொருந்தும் இல்லையா? உனக்கு ஒரு பாடம் கற்பிக்கத்தான் இப்படிச் செய்தேன்'' என்றான்.

குத்தகைக்காரன் அதன் பிறகு முத்துமாலையை விரோதியாக பாவித்துத் திரிந்தான். அதைப் பற்றி முத்துமாலை கவலைப்படவும் இல்லை,

இந்த நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற தங்கராசு முத்து மாலையின் போக்கை எண்ணி வியந்தான்.

முத்துமாலை எதற்கும் துணிந்தவன் என்று ஒருவர் சொன்னார்.

ஒரு தடவை சிலபேர் ஜாலியாகப் பந்தயம் பேசிப் பொழுது போக்கினார்கள். 'அதைச் செய்வையா' இதை செய்து போடு பார்ப்போம்' என்று பேசினார்கள். ஒரு வன் சொன்னான்: ''அமாவாசை ராத்திரி சுடுகாட்டுக்குப் போயி, அங்கே நிக்கிற ஆலமரத்திலே ஆணி அடிச்சிட்டு வந்திரணும். அப்படி அடிக்கிறவனுக்கு நான் பத்து ரூபா தரத் தயார்.'

யாரும் துணிய மாட்டார்கள் என்ற எண்ணம் அவனுக்கு. பகல் வேளையிலேயே சும்மா அந்தப் பக்கம் போக அஞ்சுவார்கள். ஆலமரத்தில் பேய் இருக்கு, சுடு காட்டு முனியன், பொல்லாதவன் ஒரே போடாப் போட் டிடுவான் என்றெல்லாம் நம்பினார்கள். சங்கிலிக்கறுப்பு குடியிருக்கிறது.கொஞ்சம் பயந்தாலே லபக்குனு புடிச்சுக் கிடும், வீட்டிலே வந்து படுத்தால் அவ்வளவு தான். ஆள் குளோஸ் என்றும் சொல்லிக் கொள்வார்கள். இந்நிலை யில் அமாவாசை ராத்திரி எவன் போக முன் வருவான்?

அனைவரும் சாக்குப் போக்குச் சொன்னார்கள். ஒரு வன், 'முத்துமாலை, நீ பெரிய சூரன்னு சொல்றாங்களே? நீ இதைச் செய்வியா?' என்று சீண்டினான்.

''பந்தயப் பணத்தை கொடுத்திரணும், ஏமாற்றப் படாது'' என்றான் முத்துமாலை.

''நீ இதை செய்திட்டா, நான் என் மீசையை எடுத் திருவேன்'' என்றான் அவனைச் சீண்டியவன்.

''உனக்கு மீசை இருந்தாலும் ஒண்ணுதான், இல் லாட்டியும் ஒண்ணுதான். சுப்பய்யா சொன்ன பத்து ரூபா

யோட, நீயும் அஞ்சு ரூபா தருவியா?'' என்று முத்து மாலை கேட்டான்.

"ஓ, ரெடியா!'' என்றான் மற்றவன்.

அமாவாசை இரவு.முத்துமாலையின் 'பேமஸ்'பாட்டு கோட்டைக்கொத்தளம் மீதிலேறி தொடர்ந்து ஒலித்தது சுடுகாட்டு ரோடில் கேட்டுக் கொண்டேயிருந்தது.

அந்தப் பாட்டை பாடியவாறே அவன்சுடுகாட்டுக்குப் போனான்.குறிப்பிட்ட ஆலமரத்தில் பெரிய ஆணி ஒன்றை நிதானமாக அறைந்தான். பாடிக்கொண்டே திரும்பினான்.

மறுநாள், சம்பந்தப்பட்டவர்கள் கும்பலாய் போய் பார்த்தார்கள். ஆணி அழுத்தமாக அடிக்கப்பட்டிருந்தது. அனைவரும் ஆச்சர்யத்தோடும், ஒருவித மதிப்போடும், முத்துமாலையைப் பாராட்டினார்கள்.

முதலில் பந்தயம் கூறியவன் மறு பேச்சுப் பேசாமல் பத்து ரூபாயை எடுத்து முத்துமாலையிடம் கொடுத்து விட்டான்.

எடக்குப் பேசியவன் பின்வாங்கினான். "அதுதான் அண்ணாச்சி கொடுத்திட்டாகளே.அவாள்தானே பந்தயத் துக்குக் கூப்பிட்டாக'' என்றான்.

"ஏ மீசை! நீ மீசையை எடுத்திடுவேன்னு சொன்னே. உன் மீசை எனக்கு வேண்டாம், அஞ்சு ரூபா தருவியான்னு கேட்டேன். நீயும் சரீன்னியே'' என்று முத்து மாலை அதட்டினான்.

"கந்தா, கொடுத்திருடே'' என்று மற்றவர்களும் சொன்னார்கள்.

கந்தன் மழுப்பினான். பணம் கொடுக்கும் எண்ணம் அவனுக்கு இல்லை என்று தெரிந்தது

முத்துமாலையா சும்மா விடுவான்? அவன் மீசையைப் பிடித்து ஒரு சுண்டு சுண்டினான், 'ஐயோ அம்மா' என்று வேதனையினால் அலறினான் கந்தன்.

மேலும் இழுத்துச் சுண்டினான் முத்துமாலை. சில ரோமங்கள் அவன் கையோடு வந்தன.

''நீ ரூபா தரத் தயாராயில்லே. நீ சொன்னபடியே மீசையை எடுத்திரலாம். நானே அதை எடுக்கிறேன்'. என்று மறுபடியும் வேகமாய் பலமாகப் பிடித்து இழுத்தான் முத்துமாலை.

கந்தன் வலி பொறுக்கமாட்டாமல் கத்தினான். 'விட்டிரு, விட்டிரு, முத்துமாலை. ரூபாவை வாங்கிக்கோ' என்று கெஞ்சினான். ஐந்து ரூபாயைக் கொடுக்கவும் செய்தான்.

''இதை ஒழுங்கா முதல்லியே தந்திருக்கலாமில்லே?'' என்று சிரித்தான் முத்துமாலை. 'சொன்னால் சொன்ன படி நடக்கணும். வார்த்தை மாறப்படாது. என்னை ஏமாத்தணுமின்னு நினைச்சா, நான் பொல்லாதவனா யிடுவேன். முத்துமாலை நல்லவனுக்கு நல்லவன், பொல்லாதவனுக்குப் பொல்லாதவன், ஆமா!' என்றான்'

இது போல் சிறு சிறு விஷயங்கள் பல தங்கராசுவின் காதுகளில் விழுந்தன. 'முத்துமாலை தனக்கு என்று சில கொள்கைகள் வச்சிருக்கான் போலிருக்கு' என்று அவன் எண்ணிக்கொண்டான்.

# 5

முத்துமாலையோடு பேசிய இரவுக்குப் பிறகு ஒவ்வொரு நாள் ராத்திரியும் தங்கராசு திண்ணையிலேயே வெகு நேரம் வரை தங்கலானான்.

''ராத்திரி ஏழு மணிக்கும் ஏழரை மணிக்கும் கதவை அடைச்சிக்கிட்டு வீட்டுக்குள்ளே முடங்கி விடுகிறது இந்த ஊர்க்காரங்களுக்கு உகந்த பழக்கமாக இருக்கலாம். எனக்கு அது ஒத்து வராது ராத்திரி பத்து மணி பத்தரை மணி என்று படுத்தே பழகிட்டேன்'' என்று அவன் அம்மா விடம் கூறினான்.

''இங்கே இருக்கிறவங்க நாங்க. ராத்திரி வேளையிலே என்னத்தைப்பண்ணப் போறோம்? எவ்வளவு நேரம்தான் உட்கார்ந்தே இருக்க முடியும்? குறுக்கு வலிக்கிறது தான் கண்ட பலன். படுத்துக் கிடந்தா கண்ணை மூடிக்கிட்டு இருந்தால், தூக்கம் வாறப்போ வந்திட்டுப் போகுது. இதுக்கு காசை கேட்குதா பணத்தைக் கேட்குதா!'' என்று அவனுடைய அம்மா பார்வதி சொன்னாள்.

''உன் சௌகரியப்படி செய்யி. ஆனா முத்துமாலை தெருவோடு வந்தால் அவன் வழிக்குப் போகாதே'' என் றும் எச்சரித்து வைத்தாள்.

தங்கராசு விளக்கை எரியவிட்டுக் கொண்டு ஏதாவது புத்தகம் அல்லது பத்திரிகையை வைத்துக்கொண்டு திண் ணையில் ஈஸிசேரில் சாய்ந்திருப்பதை வழக்கமாக்கினான். பத்தரை மணிக்கு வீட்டுக்குள் போய் படுத்தான்.

அவனுக்கே வியப்பாகத்தானிருந்தது. அவன் திண்ணையில் விழித்திருந்த சமயங்களில் முத்துமாலை அந்தக் கோட்டைத் தெரு வழியாக நடப்பதில்லை. அப்புறம் அந்த வழியே போனாலும் சத்தம் போடுவதில்லை; சீட்டி அடிப்பதுமில்லை.

இதை அவன் தனக்கு அளிக்கும் கௌரவமாகவே தங்கராசு மதித்தான். 'பரவாயில்லே அவனும்சில பாலிசிகளை கடைப்பிடிக்கிறான்!' என்று எண்ணி மனசுக்குள் சிரித்துக் கொண்டான்.

ஒரு ராத்திரி இரண்டு பேரும் பேசிக்கொண்ட பிறகு நான்கு நாட்கள் ஓடியிருந்தன. அன்று தங்கராசுக்கு படிப்பு ஓடவில்லை. கொசுக்கடி மிக அதிகமாக இருந்தது. அதனால் விளக்கை அணைத்து விட்டு ஈஸிசேரிலேயே சாய்ந்திருந்தான்.

வெளியே நிலவு நன்றாக இருந்தது. அதனால் வசீகரிக்கப்பட்டு அவன் முன்னே வந்து வாசல்படியில் நின்றான்.

அப்போது அந்த வழியாக முத்துமாலை வந்தான். திண்ணையில் விளக்கு வெளிச்சம் காணப்படாததனால், தங்கராசு வீட்டுக்குள் போயிருக்கலாம் என்று அவன் எண்ணியிருக்க வேண்டும்.

தங்கராசு வெளியே வந்து நடையில் நின்றதும்.- முத்துமாலை பேசாமல் போக விரும்பவில்லை. "என்ன ராசு விளக்கில்லாமல் இருக்கிறே?" என்று கேட்டான்.

"கொசுத் தொல்லை ஜாஸ்தியாப் போச்சு. அதனாலே விளக்கை அணைச்சிட்டேன்..." என்றான் தங்கராசு.

"ஆமா. இந்த ஊரிலே கொசுக்கள் ரொம்ப நிறையத்தான் இருக்கு!"

"கொசுவா, அது ஒவ்வொண்ணும் எத்தாத் தண்டி இருக்கு!''

ஒலுங்கு அது பேரு. ஊசி குத்தறாப்பலே சுருக் சுருக்குனு கடிக்கும்'' என்று முத்துமாலை விளக்கினான்.

"கொசு இல்லாத வேறு என்னென்னவோ ஜந்துக் கள்ளாம் பறந்து வருது. மொய்க்குது, பிச்சுப் பிடுங்குது. உடம்பெல்லாம் தடிப்பு தடிப்பா ஆயிடுது. இந்த ஊருக் காரங்க எப்படித்தான் தூங்குறாங்களோ தெரியலே!''

"பழகிப் போச்சு அதுதான் காரணம். முன்னாலெல் லாம் வயல்களிலே பயிர் இல்லாத காலத்திலேதான் ஊருக்குள்ளே கொசு அதிகமா வரும். வீட்டுக்குள்ளே எரு குச்சி செத்தையை எல்லாம் போட்டு தீக்கங்கை வச்சுப் புகை மூட்டம் போடுவாங்க, கொசுக செத்துப் போகட்டும்னு. வயலுகளிலே பயிர் வளர்ந்து கதிர் வச்சு, நெல்லிலே அன்னம் கோதியாச்சுன்னு சொன்னா, ஊருக் குள்ளே கொசு குறைஞ்சு போம். கொசுக வயல் காட் டிலே பயிர்களிலே கதிர்களில் ஊறுகிற பாலைக் குடிக்கப் போயிரும்னு சொல்லுவாங்க. பிறகு பிறகு என்னாச்சு? எல்லா நாட்களிலும் கொசு நிறைய ஊருக்குள்ளே வீடு களிலே, மொய்ப்பதே சகஜமாப் போச்சு. அதுகளுக்கு கதிர்களிலே ஊறுகிற பாலோட ருசியை விட ஊரு ஆள் களின் உடம்பிலே ஓடுற ரத்தத்தின் டேஸ்ட்டுத்தான் ஜோராயிருக்கு போலிருக்கு?''

இதைச் சொல்லிவிட்டு முத்துமாலை சிரித்தான். தங்கராசும் லேசாகச் சிரித்து வைத்தான்.

"நீ மட்டும் தான் வந்திருக்கியா ராசு? வீட்டிலே புள்ளைகளை கூட்டி வரலையா?'' என்று கேட்டான் முத்துமாலை.

"அவளும் புள்ளைகளும் அவ அப்பா வீட்டுக்குப் போயிருக்காங்க. கொஞ்ச நாள் கழிச்சு இங்கே வரு வாங்க...'

திடீரென்று முத்துமாலை பழங்கால நினைவோட்டத்தில் ஆழ்ந்தவனாகப் பேசினான். "நீ எப்பவாவது எண்ணிப் பார்ப்பதுண்டா ராசு? ஒவ்வொருத்தன் வாழ்க்கைஎப்படி எப்படியோ போயிடுது. சின்னவயசிலே பள்ளிக்கூடத்திலே நம்ம கூட ஒண்ணாச் சேர்ந்திருந்தவங்களைப்பத்தி நான்எப்பவாவது நினைக்கிறது உண்டு. பொன்னம்பலம் என்ன ஆகியிருப்பான் முத்தய்யா இப்போ எப்படி இருக்கானோ? சாமிக்கண்ணு எப்படி இருப்பான். அப்படீன்னெல்லாம் யோசனை போகும். பல வருசங்கள் ஒண்ணாக் கூடிப் பழகினோம். பிறகு பிரிஞ்சிட்டோம். ஒவ்வொருவர் வாழ்க்கை வெவ்வேறு திசையிலே போயிடுது. சின்ன வயசிலே பெரிசாக் கனவு கண்டவங்க, ஆசைப்பட்டவங்க, வாழ்க்கையின் நிஜத்தை அனுபவிக்கையிலே ரொம்பவும் மாறிப்போறாங்க. அபூர்வமா ஒருத்தன் ரெண்டுபேரை நாம அப்புறம் என்னைக்காவது பார்க்க முடியுது...ரொம்ப ஏமாற்றமாயிடுது; இல்லைன்னா எதிர் பார்த்திராத ஒரு பெரும் திருப்பமா இருந்திருது!

"நடராசன்னு ஒருத்தன். ஒன்பதாம் வகுப்பு வரை ஒண்ணாப் படிச்சோம். அப்புறம் நான் படிக்கலே. அவன் ஹைஸ்கூல் படிப்பை முடிச்சான். ஒவ்வொரு வகுப்பிலும் அவன்தான் முதலாவதா இருப்பான். தமிழ், இங்கிலீஷ், கணக்கு—எல்லாத்திலியும் ஃபஸ்ட் மார்க் வாங்குவான். அவன் காலேஜ் படிப்பு படிச்சு நல்லா முன்னுக்கு வருவான்னு வாத்தியாரெல்லாம் சொன்னாங்க."

"ஆனா, நடந்தது என்ன தெரியுமா தங்கராசு? பல வருஷத்துக்குப் பிறகு அந்த நடராசனை நான் சந்திக்க நேர்ந்தது. எங்கே தெரியுமா? சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்லே. சாதாரண குமாஸ்தாவாக. பாரு! பெரிய புத்திசாலிப் பையன். நல்ல அறிவாளி. வெறுமனே ஈயடிச்சான் காப்பி வேலை பண்ற உத்தியோகம்னு கிண்டலாச் சொல்லு

வராங்களே, அந்த வேலை. பத்திரங்களப்பார்த்துஎழுதிக் கொண்டே இருக்கிற கிளார்க்கு வேலை செய்யும் மிஷின் மனிசனாக மாறியிருந்தான்.''

''ஒளிமுத்துன்னு ஒருத்தன். சுமாராத்தான்படிப்பான். வீட்டிலே வசதியும் கிடையாது. அப்பன் ஏதோ வித்து வியாபாரம் பண்ணி, தெருத்தெருவாகக் கூவி விக்கற வேலை பிழைப்பு நடத்துறவன். உபகாரச் சம்பளத்திலே படிச்சான் பையன். அவன் காலேஜுக்குப் போக மாட்டான்னு வாத்திகள்ளாம் சொன்னாங்க. ஆனா, அவன் பி.ஏ. படிச்சிட்டு ஏதோ ஒரு ஆபீசராவந்து அட்டகாசம் பண்ணிக்கிட்டு அலைய முடிஞ்சிருக்கு! இதுக்கு என்ன சொல்றே?''

''பழனியப்பன்னு ஒரு நோஞ்சான் பையன். புல் தடுக்கி சாண்டோ, காத்தடிச்சாலே கீழே விழுற மாதிரி இருந்தான். அந்தக் காலத்திலே. ஆனா பையன், சிவப்பா அழகா இருப்பான். நாலஞ்சு வருஷத்துக்கு முன்னாலே அவனைப் பார்த்தேன். ஏயம்மா! எவ்வளவு வாட்ட சாட்டமா ஜம்னு இருந்தான்கிறே! சின்னப்பயலா, பயந்தாங்குளியா இருந்தவன் போலீஸ் இன்ஸ்பெக்டராகி மோட்டார் பைக்கிலே ஜாம் ஜாம்னு எடுப்பா மிடுக்கா அலைறான். பழைய பழனியப்பனா இவன்னு என்னாலே நம்பவே முடியலே.

''இப்படி எத்தனையோ! இதை எல்லாம் நான் யோசிச்சுப் பார்ப்பேன். எல்லாமே வேடிக்கையாத் தோணும் எனக்கு. வாழ்க்கை மனுசங்களோடு விளையாடுது-மனுசங்களை வச்சு விளையாடுதுன்னு நினைக்கத் தோணும். சரி. நாமும் வாழ்க்கையோடு-வாழ்க்கையை வச்சு-விளையாட வேண்டியதுதான். வாழ்க்கையிலே சந்தோசமா இருக்கிறதுதான் முக்கியம்னு முடிவுக்கு வந்தேன்...''

முத்துமாலை பேசப் பேச, தங்கராசுவின் மனம் வியப்பினால் அலைமோதியது. 'ஆளுக்குள்ளே ஆளு எத்தனையோ ஆளு என்பாக. இந்த முத்துமாலைக்குள்ளும் அதிசயமான ஆளுகள் இருந்து அவனை ஆட்டிப் படைக்குது' என்று நினைத்தான்.

சட்டென்று முத்துமாலை கேட்ட கேள்வியை அவன் எதிர் பார்க்கவில்லை.

''ஆமா, தங்கராசு, நீ இப்படி பழையவனுக, பழகினவங்களைப்பத்தி எண்ணுவியா? என்னைப்பத்தி எப்பவாவது நினைச்சது உண்டா?'

''நினைக்காம என்ன!'' என்று மழுப்பலாகச் சொன்னான் தங்கராசு.

அடுத்த கேள்வியும் அவனைத் திகைக்க வைத்தது. ''திரிபுரசுந்தரி பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா, ராசு?' என்று கேட்டான் முத்துமாலை.

''திரிபுரசுந்தரியா?'' சட்டென்று அவனால் நினைவு கூற இயலவில்லை.

''அவதான், நம்ம த்ரீ ஸைட் பியூட்டி! இந்த ஊர்தான்...''

இப்போது தங்கராசுவுக்கு வெளிச்சமாயிற்று. திரிபுரசுந்தரியை ''த்ரீ ஸைடு பியூட்டி'' என்று கேலியாகக் குறிப்பிடுவார்கள் பையன்கள். ''முன்னழகு-டூ ஸைடு ப்யூட்டி தானே? மூன்றாவது ஸைடு ஏது?''என்று ஒருவன் எடக்காகக் கேட்டான் ஒரு சமயம். ''பக்கத்தோற்றம்—பக்கவாட்டிலே தென்படும் அழகு-ப்ரொஃபைல் ப்யூட்டி—அதுதான் தர்டு ஸைடு'' என்று தங்கராசு பதில் கூறவும், பிரமாதமான அப்ளாஸ் கிடைத்தது. அது நினைவுக்கு வந்தது. சிரித்தான்.

"தெரியாது முத்துமாலை. நான் இந்த ஊருக்கு ரொம்ப வருஷமா வராமலே இருந்திட்டேனா? எனக்கு எதுவுமே தெரியாமப் போச்சு· ஆமா, அவளுக்கென்ன?" என்று கேட்டான்.

"ஒண்ணுமில்லே. அவளுக்குக் கல்யாணமாச்சு. புருஷனுக்கு ஏதோ பிசினஸ்னு சொன்னாங்க. வடக்கே எங்கேயோதான் இருப்பதாகக் கேள்வி. அதுதான் நீ எங்காவது பாத்திருப்பியோ, தகவல் ஏதாவது தெரியுமோன்னு கேட்டேன்...சரி, நான் வாறேன்" என்று கூறி முத்துமாலை நகர்ந்துவிட்டான்,

—யாருடைய மனம் எப்படி வேலை செய்யும், எப்போது எப்படி நடந்துகொள்ளும்னு கண்டுகொள்ளவே முடியறதில்லே. மனித மனம்கிறது மர்மமான, அற்புதமான விஷயம்தான். இந்த முத்துமாலையை நினைக்க நினைக்க எனக்கு ஆச்சர்யம்தான் அதிகமாகுது!

தங்கராசுவின் மனம் கிளர்ச்சியுற்றிருந்தது அன்றிரவு அவன் சரியாகத் தூங்க முடியவில்லை.

# 6

தங்கராசு திரிபுரசுந்தரியைப் பற்றி அதிகம் நினைத்தான். அவன் தூக்கம் கெட்டுப் போனதுக்கு அதுவும் ஒரு காரணம் தான்.

அந்நாட்களில் அவள் வகுப்புபெண்களின் தலைவி மாதிரி செயல்பட்டாள். அவளுக்குப் பதின்மூன்று

வயசிருக்கும். தன்னையொத்த பெண்களைச் சேர்த்துக் கொண்டு குதியாட்டம் போடுவதில் அவள் கெட்டி.

அவள் வீடு அடுத்த தெருவில் இருந்த போதிலும், தங்கராசு வீட்டில் வந்து குழுமிக் கொட்டமடிப்பதில் திரிபுரம் ஒவ்வொரு நாளின் பெரும் பகுதியையும் செலவிட்டு வந்தாள். தங்கராசுவின் சகோதரி ஒருத்தி வீட்டோடு இருந்தாள். அவள் ஊர்ப்பெண்களை எல்லாம் விளையாடக் கூட்டிக்கொள்வாள். தாயக்கட்டம், பல்லாங் குழி, ஊஞ்சல் விளையாட்டு என்று வீடு எப்ப பார்த்தா லும் கலகலப்பாக இருக்கும்.

திரிபுரம் பையன்களைக் கேலி செய்யவும் தயங்க மட்டாள். தங்கராசு என்றாலும் சரி, முத்துமாலை ஆனாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, அவள் துணிச்சலாகப் பரிகாசம் பண்ணுவாள். வம்புக்கிழுத்து வாயடி அடிப்பாள்.

பையன்களும் அவளையும் அவள் தோழிகளையும் "கோட்டா பண்ணி"க் களிப்பதில் உற்சாகம் காட்டி னார்கள்.

ஒரு சமயம், திரிபுரமும் சிநேகிதிகளும் தங்கராசு வீட்டு முன்னே "தொட்டுப் பிடித்து" விளையாடிக் கொண்டிருந்தார்கள். "கண்ணாம் பூச்சி" ஆட்டம். திரிபுரம் தான் கண்ணைக் கட்டியவாறு, கைகளை நீட்டிக் கொண்டு, தொடுவதற்கு ஆளைத் தேடி அலைந்து வந்தாள். சுற்றிலும் பெண்கள் கூச்சலிட்டும் குரவை யிட்டும் துள்ளிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது முத்துமாலையும் தங்கராசும் இன்னொரு வனும் அங்கே வந்தார்கள். "இப்ப ஒரு தமாஷ் பண்ண லாம்" என்று சொல்லி, முத்துமாலை விளையாட்டு வட்டத்துக்குள் புகுந்து விட்டான். குரல் கொடுக்காமல், திரிபுரத்தின் அருகில் போய் மெது மெதுவாக நகர்ந்தும் நடந்தும் காலடி ஓசை எழுப்பினான்.

இதர பெண்களுக்கும் விளையாட்டு குஷி. எல்லோருமே பன்னிரண்டு, பதின்மூன்று வயசுக்குட்பட்டவர்கள் தான். வேடிக்கை பார்க்கும் துடிப்பில் அவர்கள் சந்தோஷம் அதிகரித்தது.

திரிபுரம் கைகளை நீட்டி முத்துமாலையைப் பிடித்து விட்டாள். "ஆ, புடிச்சாச்சு!" என்று சொல்லி, இரண்டு கைகளாலும் பற்றினாள்.

"ஆமா புடிச்சாச்சு" என்று சொல்லி அவளை நன்றாகச் சேர்த்துக் கட்டிப் பிடித்துக்கொண்டான்.

ஒரே கூச்சலும், கைதட்டலும், குலவையுமாக ஏக கலாட்டா. "அஞ்சு மூணும் எட்டு-அத்தை மகளைக் கட்டு!" என்று சில பெண்கள் ராகம் போட்டார்கள்.

திரிபுரசுந்தரி முத்துமாலைக்கு அத்தை மகள் தான் அந்த உரிமையில் தான் அவன் துணிச்சலாக அவளிடம் ரகளை பண்ணி வந்தான்.

அவள் இதற்குள் கண்ணைக் கட்டியிருந்த துணியை அவிழ்த்தெறிந்தாள். நிலையை உணர்ந்து திமிற விடுபட்டாள். அவள் முகம் வெட்கத்தாலும் கோபத்தாலும் செக்கச் சிவந்துவிட்டது. அவள் நல்ல சிவப்பு. ஆத்திரத்தோடு பழிப்புக்காட்டி "வவ்வவ்வே" என்றாள்.

"பெயினண்கள் விளைனளையாடுற இயினடத்திலே தயினடி மாயினடு புயினகுந்து வியினட்டது!" என்று கத்தினாள். "எயினருமை மாயினடுகள்!" என்றும் சொன்னாள்.

பெண்கள் தங்களுக்குள் "குழூஉக்குறி" வைத்துப் பேசினார்கள். ஒவ்வொரு வார்த்தையிலும் முதல் எழுத்துக்குப்பிறகுஅநாவசியமானஇரண்டு எழுத்துக்களை அடுக்கி, வேகமாகப் பேசுவார்கள். கேட்கிறவர்களுக்கு ஏதோ புது பாஷை போல் ஒலிக்கும் அது. பழக்கம் இல்லாதவர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாது.

திரிபுரமும் அவள் தோழிகளும் ஒவ்வொரு சொல்லிலும் "யின" சேர்த்து வேகமாகப் பேசப் பழகியிருந்தார்கள். பையன்களுக்கு அந்த பாஷை புரியாது என்ற நினைப்பில், அவர்களைப் பழித்தும் பரிகசித்தும் தங்களுக்குள் வார்த்தை பரிமாறிக் களிப்பதுமுண்டு.

இப்போது அவள், "பெண்கள் விளையாடுகிற இடத்திலே தடிமாடு புகுந்து விட்டது" என்றும், "எருமை மாடு" என்றும் சொன்னதும், அவளே எதிர்பாராத விதத்தில் முத்துமாலை பேசினான்.

"வியினளையாட்டில் தோயினத்துப் போயின செயினங் குயினரங்கை பாயினருங்கே. காயினள் காயினள்னு கயினத்துது!" (விளையாட்டில் தோத்துப் போன செங்குரங்கை பாருங்கே, காள்காள்ன்னு கத்துது)

திரிபுரத்துக்கு அழுகை வந்து விட்டது. விம்மி விம்மி அழுது கொண்டே, "பாரு பாரு. அப்பா கிட்டே சொல்றேன்" என்று சொல்லியவாறு போனாள்.

விளையாட்டு வினையில் முடிந்தது.

அவள் தன் அப்பாவிடம் சொல்ல, அவர் முத்துமாலையின் பெரியப்பாவான பாபநாசம் பிள்ளை, தங்கராசுவின் அப்பா பிச்சு மணியா பிள்ளை, மற்றும் பல பெரியவர்களிடமும் சொல்லிவைத்தார். "பையன்களை கண்டிச்சு வையுங்க!" என்றார். தன் மகளிடமும் அடக்க ஒடுக்கமாக இருக்கும்படி உபதேசித்தார்.

முத்துமாலைக்கு அப்போது பதினாலு வயசு. பெரியப்பாவிடம் அரிவாளைத் தூக்கி வந்து கலாட்டா பண்ணுவதற்கு முந்தி நடந்தது இது.

பாபநாசப் பிள்ளை, "ஏன் இதுமாதிரி எல்லாம் பண்ணுறே, முத்து? நல்லப் பிள்ளைன்னு பேரு எடுப்பியா

இப்படி சல்லிப் பயல்னு பட்டம் வாங்குவியா?'' என்று உபதேசித்தார்.

தங்கராசுவின் அப்பா, பையன் ஊரோடு இருந்தால் யோக்கியமா வளரமாட்டான். படிப்பையும் கெடுத்து, தானும் கெட்டுப் போவான் என்று எண்ணி, அவனைப் பள்ளிக்கூட ஹாஸ்டலிலேயே சேர்த்து விட்டார்.

அவன் காலேஜ் படிக்கிற காலத்தில் அவர் செத்துப் போனார்.

தங்கராசு பிறகு இரண்டு மூன்று தடவைகள் திரிபுரத்தைப் பார்த்தது உண்டு. அழகான பெண் என்று எண்ணியதுண்டு.

பின்னர் அவளைப் பார்க்கும் வாய்ப்பு அவனுக்குக் கிட்டவில்லை. அவளும் பருவம் எய்தி வீட்டுக்குள் ஒடுங்கி போனாள்.

''உரிய காலத்தில் அவளுக்கும் கல்யாணம் நடத்திருக்கும்'' என்று எண்ணிக் கொண்டான் தங்கராசு. ''முத்துமாலை அவளைப்பற்றிதிடீர்னு என்னிடம்விசாரிப்பானேன்?'' என்று அவன் மனம் அரித்தது.

''அதுதான் காரணம் சொன்னானே; மெய்யாலுமே அதுதான் விஷயமாயிருக்கும்'' என்றும் அவன் மனமே சமாதானமும் கூறிக் கொண்டது.

இருந்தாலும், மறுநாள் அம்மாவிடம் கேட்டான்: ''முத்துமாலை நேத்து ராத்திரி அவனோட அத்தை மகள் திரிபுரத்தைப் பற்றி என்கிட்டே கேட்டான். வடக்கே எங்கேயே இருக்காளாமே தெரியுமா,எப்பவாவது பாத்தியான்னு கேட்டான். அவ எங்கே இருக்கா, மெட்ராசிலேயா? எனக்குத் தெரியாதே!''

பார்வதிஅம்மாள், அவளது இயல்பின்படி பேசினாள்: ''என்ன இருந்தாலும் அத்தை மக்கள் அம்மாள் மக்கள் இல்லேன்னு போயிடுமா? ரத்தபாசம் விட்டிடுமா?

அதிலும், அவன் திரிபுரத்தைக்கட்டிக்கிடணும்னு ஆசையா யிருந்தான். வடிவும் பூமியா பிள்ளை கிட்டே கேட்கத்தான் செஞ்சா. பொண்ணு கொடுக்கும்படி. திரிபுரத்தோட அப்பா பேரு பூமி நாதபிள்ளை, பூமியா பிள்ளைன்னு சொல்லுவோம். அவரு பூமிக்கும் மானத்துக்குமாக் குதிச் சாரு. உன்மகனுக்காவது நானாவது என் மகளையாவது கொடுக்கிறதாவது அவன் வெறும்பயலாக்கும். சல்லிப் பயலாக்கும், உருப்படாத பயலாக்கும், அப்படியாக்கும் இப்படியாக்கும்னு கூப்பாடு போட்டாரு. உள்ளூர் சம்பந்தமே கூடாது. இந்தச் சில்லாவே கூடா துன்னு தூரா தொலையிலே மாப்பிள்ளை தேடிப் பிடிச்சாரு. மாப்பிள்ளைக்கு சொந்த ஊரு மதுரைப் பக்கம் எங்கேயோன்னு சொல்லிக்கிட்டாக. அவனுக்கு பம்பாயிலே வேலைன்னோ; இல்லை, கல்கத்தாவிலே இருக்கான்னோ சொன்னாக, மொத்தத்திலே, வடக்கே எங்கேயோ இருக்கான். அதுதான் தெரியுது!''

''திரிபுரம் அப்புறம் இந்த ஊருக்கே வரலியா?''

''வராம என்ன! வந்தா வந்தா. அவ அப்பா செத்த போது ஒரு சமயம் வந்தா. பிறகு ரெண்டு மூணு தடவை வந்தா...''

''அவ ஒண்ணும் சொல்லலையா?''

''அவ என்னத்தைச் சொல்லுவா! அவளுக்கு வந்து இறங்கியிருக்கிற ராங்கியும் கெருவமும், யாருகிட்ட கல கலப்பா அவபேசினா? ஏதோ, நல்லபடியா இருந்தால் சரிதான்'' என்றாள் பெரியவள்.

மேலும் தொடர்ந்தாள்:

''திரிபுரம் தனக்குக் கிடைக்காமப் போயிட்டா ளேங்கிற ஏமாற்றமும் வருத்தமும்தான் முத்துமாலையை ஒரே அடியா மாத்திப் போட்டுதுன்னு நான் சொல்லு

வேன். நம்ம அத்தை மக நமக்குத்தான்னு அவன் நம்பிக்கையோடு இருந்தான். அவ மேலே ஆசை வச்சிருந் தான். அந்த நம்பிக்கையிலே மண்ணு விழுந்து, ஆசை முறிஞ்சு போனதும், அவனுக்கு விரக்தி ஏற்பட்டுப்போச்சு. மாமன் பூமியா பிள்ளையும், பெரியப்பன் பாபநாசம் பிள்ளையும் அவன் உருப்படமாட்டான், சல்லிப்பய, வீணப்பயல் என்று மந்திரம் மாதிரி உச்சரிச்சுக்கிட்டே இருந்தாங்களா? அது வேறே உள்ளுக்குள்ளே வேலை செய்திருக்கும். திரிபுரத்துக்கு வேறே இடத்திலே கல்யாணமாகிப் போச்சு. இவனுக்கோ வேறே யாரும் பொண்ணு கொடுக்கத் தயாராயில்லை. சரி, இனிஒழுங்கா யோக்கியமா இருந்து என்னத்துக்கு; இவனுக முன்னா லேயே வீணப்பயலாவும் போக்கிரியாவும் நடமாடி இவங் களை ஆட்டம் காட்டலாமேன்னு அவன் வக்கிரிச்சுக் கிளம்பிட்டான். எனக்கு அப்படித்தான் பட்டுது'' என்று அம்மா முடித்தாள்.

தங்கராசு அவளை ஆமோதிக்கவும் இல்லை; அவள் எண்ணத்தை மறுத்துக் கூறவும் விரும்பவில்லை.

'அடிப்படைக் காரணம் எதுவாக இருந்தால் என்ன? முத்துமாலை வித்தியாசப்பட்ட ஒருவனாக வளர்ந்து விட்டான். மற்றவங்களுக்கு மாறுபாடான முறையிலேயே நடந்துகொண்டு வருகிறான்' என்று அவன் நினைத்தான்.

## 7

அன்று சாயங்காலம். தங்கராசு வீட்டுக்கு ஒருத்தி வந்தாள். தூக்குச் சட்டியும் கையுமாக. ''ஆச்சி, மகன் வந்திருக்காளே, வடை பஜ்ஜி எதுவும் வேணுமா'' என்று கேட்டுக் கொண்டு.

''வா, தனபாக்கியம்! இருக்கிறதை கொடுத்திட்டுப் போயேன்!'' என்றாள் பார்வதி அம்மாள்.

வந்தவள் சட்டியைத் திறந்து, வடைகளும் பஜ்ஜி களும், கொடுத்துவிட்டுக் காசுகள் வாங்கிப் போனாள்.

''தினம்கொண்டாந்து கொடுத்திட்டு போபாக்கியம்'' என்று அம்மா வழி அனுப்பினாள்.

அவள் போனதும், ''இது யாரு, இந்த ஊரிலே புதுசா வியாபாரம் பண்ண வந்திருக்காளா?'' என்று தங்கராசு கேட்டான்.

''இவதான் முத்துமாலை கூட இருக்கறவ'' என்று அம்மா சொன்னதும் அவன் திகைப்படைந்தான். அன்றொரு நாள் அம்மா, கெட்டலைந்த கழுதைஎவளோ என்று சொன்னாளே,அதுஇவள்தானா என அதிசயித்தது அவன் மனம். இவள் ஒண்ணும் மோசமாத் தெரியலியே என்றும் நினைத்தது.

அவள் சராசரிக் குடும்பத்தில் வளர்ந்து வாழ்கிற சாதாரணப் பெண் போல் தான் இருந்தாள். பகட்டோ, மினுக்கோ எதுவும் அவளிடம் இல்லை. நடையிலோ, பார்வையிலோகூட சந்தேகத்துக்குரிய குறிகள் ஒன்றும் தென்படவில்லை. பின்னே அம்மா அப்படிச் சொன்னாளே.

''இவ பேரு தனபாக்கியமா? எந்த ஊர்க்காரியோ?'' என்று சாதாரணமாகக் கேட்பவன் போல் கேட்டு வைத்தான்.

''எந்த ஊரோ கேடோ! இது மாதிரிக் கழுதைகளுக் கெல்லாம் எல்லா ஊரும் சொந்த ஊர் தான். திடீர்னு ஒரு நாள் முத்துமாலை இவளை கூட்டிக்கிட்டு வந்தான். ரயிலடியிலே பார்த்தேன்னு சொன்னான். அதிலேருந்து அவ இங்கே தான் இருக்கிறா. நல்லபடியா இருக்கா. தப்புத்தண்டாவா நடந்துக்கிட்டா முத்துமாலை

விட்டா வச்சிருப்பான்? வெட்டிப் பொங்கலிட்டுருவானே பாவி. அந்தப் பயமும் இவளுக்கு இருக்கும். இதிலிருந்து பாரு இடிவிழுவான் காரியத்தையின்னு, கூட இருந்தே அவன் குணத்தை, போக்கை எல்லாம் தான் கண்டுக்கிட்டிருப்பாளா சும்மாவா!'' என்றாள் அம்மா.

''அவன் தான் வடை பஜ்ஜி வியாபாரம் பண்ணும்படி சொன்னானாமா?''

''இல்லே இல்லே. அவன் இவளை அருமையாத்தான் வச்சிருக்கான். வரவர,அவன் நிலைமை மோசமாயிட்டுது. வரவு இல்லாமெ தாம் தூம்னு செலவு செய்தா,இருக்கிற சொத்துதான் எத்தனை நாளைக்கு வகும்? இருந்த சொத்துப் பூராவையும் வித்துத் தின்னாச்சு. ஒரு வீடு இருக்கு. அது மேலேயும் கடன் வாங்கியாச்சு, ஒரு நாள் வீட்டுத் திண்ணையிலேயே பலகாரக்கடை, டீ காப்பியோடு ஆரம்பிச்சான். இவ தான் ஆலோசனை சொல்லியிருப்பா. இவ பலகாரமெல்லாம் சுசிருசியா நல்லாச் செய்வா...''

''வடை நல்லாத்தானிருக்கு. ஆமவடை மொறு மொறுன்னு ருசியா இருக்கு. உளுந்த வடை மெத்து மெத்துன்னு பூப்போலே இருக்கு. அநேகமாக வீடுகளிலே செய்கிற உளுந்து வடை மெதுவாகவே அமைக்கிறதில்லே. கல்லு மாதிரித்தான் இருக்கும். இது ரொம்ப மெதுவாயிருக்கு...''

''எல்லாம் அறைக்கிறதிலே இருக்கு. சில பேரு கைக்கே பலகாரங்களிலே தனி ருசியும் வாகும் ஏற்பட்டிடும்.தனபாக்கியம் கை அப்படிப்பட்டகை'' என்று அம்மா தாராளமாக ஸர்டிபிகேட் வழங்கினாள்.

பரவால்லே, அம்மாவுக்கு இவ பேரிலே வெறுப்பு இல்லை. வெறுப்பு இருந்தால் அவளை நடையேற விட

மாட்டாள்; அவள் கைராசியைப் புகழ்ந்து பாராட்டவும் மாட்டாளே என்று மகன் எண்ணிக் கொண்டான்.

அம்மா விஷயத்தை மறந்து விடவில்லை. தொடர்ந்தாள். "வீட்டோடு ஆரம்பிச்ச பலகாரக் கடை நல்லாத்தான் நடந்தது. காலையிலே இட்டிலி, உப்புமா, காப்பி சாயங்காலம் வடை, பஜ்ஜி, காப்பின்னு ஒரே அமக்களம் தான். இவ அலுக்காம உழைச்சா, ஒரு வருஷத்துக்கு மேலேயே நடந்திருக்கும். பிறகு, கடையைமூடிட்டாங்க."

"ஏனாம்."

"வர்ற பணத்தை எல்லாம் செலவு பண்ணிக்கிட்டே இருந்தால், கடை எப்படி நடக்கும்? கடைக்கு சாமான்கள் வாங்கப் பணம் வேண்டாமா?"

ஊர்லே பல பேரு கடன் சொல்லி வாங்கித் திண்ணுருப்பாங்க. அப்புறம் கடனை அடைச்சிருக்க மாட்டாங்க."

"வழக்கமா அப்படி நடக்கிறதுதான். ஆனா முத்து மாலைகிட்டே அந்தக் கதை நடக்கலே. அவன் ஏசியும் பேசியும், அடிச்சும் மிரட்டியும் பாக்கியை எல்லாம் வசூல் பண்ணிப் போட்டான். கடையை ஒழுங்கா நடத்துறதுக்குக் கையிலே முதல் இல்லே. அது தான் காரணம். அதுக்குப் பிறகு தனபாக்கியம் அவ்வப்போது இதுமாதிரி பலகாரம் செய்து வீடு வீடாகப் போய் கேட்டு விக்கிற வேலையை செய்து வாறா. காலையிலே இட்டிலி வியாபாரம் உண்டு. தேவையானவங்க, வீடு தேடிப் போயி வாங்கி வருவாங்க. எப்படியோ கதை நடக்குன்னு வய்யி!" என்று முடித்தாள் அம்மா.

"முத்துமாலை பாடு கஷ்டம்தான்னு சொல்லு. கொஞ்சமாவது வசதி இருக்கும்னு நெனைச்சேன்" என்று தங்கராசு. முணு முணுத்தான்.

"அநேகம் பேரு எப்படி வாழ்க்கை நடத்துறாங்க என்பதே புரியவில்லை. வெளிப்பார்வைக்கு எல்லாம்

வெளிச்சமாத்தானிருக்கு, உள்ளுக்குள்ளே, ரொம்பவும் டல் அடிச்சுப் போயிருக்கும்கிறது நெருங்கிப் பார்த்தால் தான் தெரியுது' அவன் மனம் பேசிக்கொண்டது.

'நல்லவளா ஒருத்தி வந்து சேர்ந்ததும் முத்து மாலை அதிர்ஷ்டம் தான்' என்றும் எண்ணினான் அவன்.

அவள் வந்து சேர்ந்த கதையைப் பின்னர் தங்கராசு தெரிந்து கொள்ள முடிந்தது. ஒருவன் விஸ்தாரமாகச் சொன்னான். முத்துமாலை சொல்லியிருந்ததைத்தான் அவன் சொன்னான்.

ஒரு முக்கிய அலுவலாக ஏதோ ஒரு ஊருக்குப்போய் விட்டு முத்துமாலை ராத்திரி ரயிலில் வந்து இறங்கினான். பத்தரை மணி.

ஸ்டேஷனிலிருந்து இரண்டு மைல் தூரம் நடக்க வேண்டும் ஊருக்கு. ஆள் நடமாட்டம் இராத, வழியில் வீடுகள் குடியிருப்பு எதுவும் இராத, விளக்குகள் இராத பாதை ரஸ்தாதான்.

மற்றவர்களானால் ராத்திரி வேளையில், தனியே அந்த வழியாக வர பயப்படுவார்கள். வழியில் ஒரு ஓடை உண்டு. அந்த ஓடை பள்ளத்தில், பாலத்தடியில் திருடர் பதுங்கியிருப்பர். ரோட்டில் வருகிறஆட்கள், வண்டிகளை மறித்து வழிப்பறி செய்வர் என்ற பேச்சு வெகு காலமாக நிலை பெற்றிருந்தது. அவ்வாறு கொள்ளையடிக்கப்பட்ட தாக இடைக்கிடை செய்திகள் எழுவதும் வழக்கம்தான்.

கையில் பணம்,பொருள் எதுவும் எடுத்துவராதவனை வழிமறித்தால், அவனிடம் ஒன்றுமே இல்லை என்று கண்டு கொண்டதும் ஏண்டா ஒண்ணுமே எடுத்துவராமே வந்தே என்று இரண்டு அறைகொடுத்து அனுப்புவார்கள் திருடர்கள்; அப்படிச் செய்துமிருக்கிறார்கள் என்றும் ஊரில் பேசிக் கொள்வது வழக்கம்.

முத்துமாலை அதற்கெல்லாம் பயந்தவனா! என்ன? அவன், தோளில் கிடந்த துண்டை உதறித் தலைப்பா கட்டிக் கொண்டு, கால்கரண்டை வரை தொங்கிய வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, வேகமாக நடக்கலானான்.

சிறிது தூரம்தான் நடந்திருப்பான். அவனுக்குப் பின்னே யாரோ ஓடி வருவது போல் காலடி ஓசை கேட்டது. அவன் நின்றதும் அந்தச் சத்தம் நின்றது.

அவன் திரும்பநடக்கத் தொடங்கியதும், சரட்-சரட் என்று மணலில் அடி எடுத்து வைக்கும் சத்தம் மீண்டும் கேட்டது.

முத்துமாலை பேய் பிசாசுகளில் நம்பிக்கையில்லாதவன் தான். இருப்பினும், அந்த நேரத்தில் பேய்-பிசாசு நினைப்புதான் அவன் மனசில் எழுந்தது. பிறகு துணிந்து ''யாரது?'' என்று அதட்டலாகக் கேட்டான். நின்றான்.

ஒரு ஆள் நெருங்கி வருவது தெரிந்தது. இருட்டுத் தான் என்றாலும்,இருளில் பழகிவிட்ட அவன் கண்களுக்கு அது ''ஒரு பொம்பிளை'' என்று புலனாகியது.

இந்த நேரத்திலே யாருடா இது! மோகினிப் பிசாசு என்பார்களே, அதாக இருக்குமோ என்று துணுக்குற்றது அவன் மனம். ஆயினும் சுதாரித்துக் கொண்டு காறித் துப்பினான். ''யாரம்மா அது? எந்த ஊருக்குப் போகணும்?'' என்று கேட்டான்.

''இந்த ரோடு எந்த ஊருக்குப் போகுது ஐயா?'' என்று கேட்டாள் அவள். தீனமாக ஒலித்தது அவள் குரல்.

''சரியாப்போச்சு போ! எந்த ஊருக்குப் போற வழியின்னு தெரியாமத்தான் நடக்கிறியா? ஊர் தவறி, ராத்திரி நேரத்திலே, ஸ்டேஷன் தெரியாமல் இங்கே இறங்கிட்டியா? ராத்திரி தனியா இப்படி வரலாமா? அதுவும்

ஒரு பொம்பிளே. இந்த வழியிலே ராத்திரி நேரத்திலே ஆம்பிளைகளே நடக்க பயப்படுவாங்க. பொம்பிளை இப்படி வரலாமா?'' என்று முத்துமாலை அனுதாபத் தோடு பேசினான்.

அவள் முகத்தைப் பார்க்க வேண்டும் என்ற நோக் கோடு, இயல்பாக தன் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கிறவன் போல. மடியிலிருந்து ஒரு பீடியை எடுத்து வாயில் கவ்விக் கொண்டு, தீப்பெட்டியை எடுத்து தீக்குச் சியைக் கிழித்தான். வெடித்த வெளிச்சத்தில் அவளைச் சிறிது கவனிக்க முடிந்தது.

சாதாரணமான ஒரு பெண். வறுமையின் பாதிப்பு தெரிந்தது. சோகமும் பயமும் அவள் முகத்தில் குடியிருந்தன.

“நீ எங்கிருந்து வர்றே? இந்த ஸ்டேஷனிலே ஏன் இறங்கினே?'' என்று கேட்டான் முத்துமாலை.

அவள் ஒரு ஊரின் பெயரைச் சொன்னாள். அம்மா சாகக்கிடக்கிறாள். மகளை வைத்து எப்படியோ காப் பாற்றிவிட்டாள். அவளை எவன் கையிலாவது பிடித்துக் கொடுத்து, அவளுக்கு ஒரு பாதுகாப்பு ஏற்படுத்திவிட்டு நிம்மதியாகச் சாகவேண்டும் என்று ஆசைப்பட்டாள். அவளுடைய ஆசையை நிறைவேற்றித் தருவதுபோல் பாசாங்கு செய்தான் சகுனி மாமனான ஒருவன். அம்மா வுக்கு ஏதோ ஒரு வழியில் அண்ணன் என்று சொல்லிக் கொண்டு அடிக்கடி வருவான். மதுரையில் பழக்கடை வைத்திருப்பதாகச் சொன்னான். மதுரையில் தனக்குத் தெரிந்த நல்ல மாப்பிள்ளை இருப்பதாகவும், செலவு எது வுமே இல்லாமல் தன பாக்கியத்தைக் கட்டிக்கொடுத்து விடுவதாகவும், தனது பொறுப்பில் எல்லாவற்றையும் விட்டுவிடலாம் என்றும் அம்மாவிடம் இனிப்பாகப் பேசினான். அவளும் நம்பி, மகளை அவனோடு அனுப்பி விட்டாள்.

அவன் ஒரு எத்தன், குடி கெடுப்பவன். எத்தனையோ பெண்களை வஞ்சித்து, தான் பணமும் சுகமும் தேடிக் கொண்டிருப்பவன். அதெல்லாம் அவளுக்கு பிற்பாடுதான் தெரிந்தது. சகுனி மாமா அவளை நேரே மதுரைக்கு அழைத்துப் போகவில்லை. கன்னியாகுமரிக்குக் கூட்டிப் போனான். அங்கே அவளிடம் பசப்பி மயக்கி, அவளை உபயோகித்தான். அவனே தன்னைக் கட்டிக்கொள்வான் என்று தான் அவள் முதலில் நம்பினாள். ஏமாந்தாள்.

கிழவன் மாதிரி இருந்த எவனோ ஒருவனிடம் மாமா அவளை ஒப்படைத்தான். "நான் உன் அம்மாவிடம் கூறிய ஆள் இவர்தான், இவர் உன்னை நல்லபடியா வச்சுக்கிடுவார்; இவருக்கு நல்லவளாக நடந்து கொள்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டான். அந்த ஆளிடம் மாமா கணிசமாகப் பணம் வாங்கியிருந் தான் என்பதை அவன் சொல்லி அவள் தெரிந்து கொண்டாள்.

அவனும் நம்பகமானவன் அல்ல என்று அவள் சந் தேகித்தாள். இரண்டு மூன்று நாட்கள் கன்னியாகுமரியில் தங்கியபிறகு, அவன் அவளை அழைத்துக் கொண்டு குற்றாலம் போனான். பிறகு திருச்செந்தூருக்கு வந் தான். மதுரை போகலாம் என்று ரயிலேறினான் அவளோடு.

இவனும் மாமா மாதிரி தன்னை வேறு எவனுக்கோ விற்றுவிடத் திட்டமிட்டிருக்கிறான் என்றே அவளுக்குத் தோன்றியது. ஆகவே, அவனிடமிருந்து தப்பி ஓடுவதற்கு அவள் பிளான் பண்ணிக் கொண்டேயிருந்தாள்.

ரயிலில் அவன் அயர்ந்து தூங்கிவிட்டான். சமயம் பார்த்துக் கொண்டிருந்த அவள் இந்த ஸ்டேஷனில் ரயில் நின்றதும் ஒரு ஆள் இறங்குவதைக் கண்டதும், நடப்பது நடக்கட்டும் என்று துணிந்து இறங்கிவிட்டாள்.

"உங்களைத் தவிர வேறு யாரும் இறங்கலே. நீங்க போறபடி உங்க பின்னாடியே வரலாம்னு நினைச்சு வந்தேன். நீங்க வேகமா நடந்ததனாலே நான் ஓடி வர வேண்டியதாச்சு" என்றாள்.

"உன் பேரு தனபாக்கியமா?" என்று கேட்டான்.

"ஊம்" என்றாள் அவள்.

"ஊருக்குப் போய் சேர்ந்ததும் என்ன செய்யலாம் என்று எண்ணினே?"

"நான் ஒண்ணுமே எண்ணிப்பார்க்கலே. அந்தக் கிழக்குரங்கு கிட்டேயிருந்து தப்பிக்கணுமே, எப்படிடா தப்பிக்கலாம் என்கிற ஒரே நெனப்பிலேயே இருந்த தனாலே, வேறு எதைப் பத்தியும் யோசிக்க நேரமில்லே, மனசும் ஓடலே."

அவர்கள் நின்று நின்றும், மெதுவாக நடந்தும் பேசியவாறே முன்னேறினார்கள்.

"ராத்திரிப் பொழுது கழிஞ்சிட்டா, விடிஞ்சப்புறம் ஏதாவது வழி தேடிக் கொள்ளலாம். இந்த ஊரிலேயே இருந்து விட்டு வேலைகள் செய்யலாம். வேலைக்காரி தேவைப்படுற வீடுக இல்லாமலா போகும்? இந்த ஊரிலே இல்லேன்னு போயிட்டா, பக்கத்து ஊர்களிலே முயற்சி பண்ணலாம். கையும் காலும் திடமா இருக்கையிலே, உழைக்கவும் தயாராக இருக்கையிலே. பிழைப்பு நடத்த முடியாமலா போயிடும்?" என்று அவள் தன்னம்பிக்கை யோடு பேசினாள்.

அவளுடைய மன உறுதி முத்துமாலைக்குப் பிடித் திருந்தது. அவளுக்கு இருபது இருபத்திரண்டு வயது இருக்கும் என்று நினைத்தான்.

"உனக்கு வயசு என்ன ஆகுது?"

"இருபது முடிஞ்சிட்டுது."

"அதுக்குள்ளே எவ்வளவோ அனுபவங்கள்! இல்லையா?" என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. இருவரும் வீடு சேர்ந்தார்கள்.

பெரிய வீடாக இருப்பதை அவள் பார்த்தாள். "நான் இங்கே இந்தத் திண்ணையிலேயே படுத்துத்தூங்குறேன்" என்றாள்.

"வீட்டிலே எத்தனையோ அறைகள் இருக்கு. நீ ஒரு அறைக்குள்ளே படுத்து தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு பயம் இல்லாமல் தூங்கலாம். வீட்டிலே வேறே ஆள் யாருமே இல்லையேன்னு நீ பயப்பட வேண்டாம். என்னாலே உனக்கு எந்த விதமான தொந்தரவும் ஏற்படாது" என்று முத்துமாலை அறிவித்தான்.

"அய்யய்யோ!" என்று பதறி, தன் கையினால் வாயைப் பொத்திக் கொண்டாள் அவள். "உங்களைப் பற்றி நான் தப்பா எதுவும் நினைக்கலே. நீங்க நல்லவங்க என்கிறது இருட்டிலே இவ்வளவு தொலைவு தனியா நடந்து வரும் போதே நல்லாத் தெரிஞ்சிட்டுது. கெட்ட எண்ணம் கொண்டவங்கன்னா உங்களை மாதிரி கேட்டுக்கிட்டு சும்மா நடந்து வந்திருக்க மாட்டாங்க. நீங்க விலகி விலகியே நடந்தீங்க..."

"சரி எனக்குத் தூக்கம் வருது. விடியக்காலம் பேசிக்கிடலாம்" என்று அவளை ஒரு அறைக்குள் அனுப்பிவைத்தான் அவன்.

காலையில் அவள் சீக்கிரமே எழுந்து விட்டாள். வீட்டுக்குள்ளேயே கிணறு இருந்தது. அதில் நீர் இறைத்து வசதியாகக் குளித்தாள். மாற்றுடை அவளிடமே இருந்தது, ஒரு துணிப்பையில் எடுத்து வந்திருந்தாள்.

முத்துமாலை எழுந்திருக்கவில்லை. நல்ல தூக்கம்.

அவள் வாசல் தெளித்து, கோலம் போட்டாள். வீட்டைப் பெருக்கினாள். அடுப்படியை ஆராய்ந்தாள். தேவையான பொருள்கள் எல்லாம் இருந்தன. தயக்கமின்றி எடுத்து, காப்பி போட்டு. உப்புமாவும் தயாரித்து முடித்தாள்.

"என்ன, வாசனை வீட்டையே தூக்கிட்டுப் போகுதே!" என்ற வியப்போடு எழுந்த முத்துமாலை அடுக்கலைக்குள் எட்டிப்பார்த்து ஆச்சரியப்பட்டான்.

"பல் தேச்சுட்டு வாங்க. காப்பி சாப்பிடலாம்"என்று உபசரித்தாள் அவள். "உங்களுக்கு குளிக்க வெந்நீர் போடணுமா?" என்று கேட்டாள்.

"உனக்கு வேண்டிய வேலையை நீயே தேடிப்பிடிச்சுக்கிட்டே! இல்லையா?" என்று சிரித்தான் முத்துமாலை.

வெட்கமும் மகிழ்ச்சியும் விளையாடிய அவளுடைய முகம் வசீகரமாகத் தான் காட்சி தந்தது.

"சரி, நீ இஷ்டப்பட்டால், உனக்கு இங்கே இருக்க பயம் எதுவும் இல்லையானால், தாராளமா நீ இந்த வீட்டின் வேலைகளைச் செய்து கொண்டு இங்கேயே இருக்கலாம். வீட்டின் பின் பகுதி தனிக்குடித்தனத்துக்கு லாயக்கானது தான். எங்க அம்மா இருந்தபோது சில சமயம் யாருக்காவது வாடகைக்கு விட்டது உண்டு. அதுக்குப்பிறகு தான் யாரையும் வாடகைக்குக் குடி வைக்கலே. அந்தப் பகுதியிலே நீ தங்கியிருக்கலாம். என்னைப் பத்தி ஊரிலே பலவிதமாப் பேசுவாங்க. எச்சரிக்கையா இருக்கணும். உனக்கு மனசுக்குப் பிடிக்கிற காலம் வரை நீ இங்கே வசிக்கலாம். எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லே" என்று சொல்லிவிட்டு அவன் பல் விளக்கப் போனான்.

பிறகு உப்புமா தின்னு, காப்பி குடித்துவிட்டு, மிகுந்த மகிழ்ச்சியோடு பாராட்டினான். "தனபாக்கியம், உன் பழையகதை எப்படியும் இருந்து விட்டுப் போகட்டும். அதை நான் மறந்திட்டேன். என்னைப் பொறுத்த வரையிலே நீ நல்லவ. புதுசா வேலைக்கு வந்திருக்கிறே, அவ்வளவுதான். நீ உன் பழைய கதையை இந்த ஊரிலே யாருகிட்டேயும் சொல்லிக்கிட்டிருக்க வேண்டியதில்லே. அதனாலே நன்மை எதுவும் ஏற்படாது. உனக்குத் தேவையானது எதுவாக இருந்தாலும், அவ்வப்போது நீ என்கிட்டே கேட்டு வாங்கிக்கிடலாம். இந்த வீட்டை விட்டு எப்போ போகணுமினு தோணினாலும், என்னிடம் சொல்லிக்கிட்டே போகலாம். என்னாலே உனக்கு ஒரு தீங்கும் ஏற்படாது" என்று உறுதியாகக் கூறினான்.

அவளுக்குக் கண்களில் நீர் சுரந்தது. அவள் நன்றிப் பெருக்கோடு அவன் முன்னே விழுந்து கும்பிட்டாள்.

"சேச்சே என்ன தனபாக்கியம் இது!" என்று அவன் தடுமாறினான்.

இந்த விதமாகத்தான் அவர்களது தொடர்பு ஆரம்பித்தது. வெகு விரைவிலேயே நெருக்கமான உறவாகப் பின்னிப் பிணைந்து கொண்டது. அதற்காக அவனோ அவளோ வருத்தப்படக் கூடிய சந்தர்ப்பம் இதுவரை ஒன்று கூட ஏற்படவில்லை.

அவர்கள் இரண்டு பேரும் எட்டு வருஷங்களாகச் சேர்ந்து வாழ்கிறார்கள். அவர்களுக்குக் குழந்தை எதுவும் பிறக்கவில்லை. அதற்காக அவர்கள் வருத்தப்படவுமில்லை.

இதை அறிந்ததும், "முத்துமாலை பெரிய ஆளுதான், உண்மையிலேயே ரொம்பப் பெரியவன்" என்று தங்கராசு தனக்குள் சொல்லிக் கொண்டான்.

# 8

ராத்திரி, பன்னிரண்டு மணிக்கு மேல் இருக்கும்.

"கூகூ" என்று ஒரே கூச்சல்.

தங்கராசு விழித்துக் கொண்டான். அம்மா விழித்த படிதான் இருந்தாள்.

"என்னமோ ஒரே கூச்சலா இருக்கு.ஏதோ கலாட்டா போலிருக்கு!" என்றான்.

"தெக்குத்தெரு மூலையிலேதான் கேட்குது.என்னமும் சண்டையாயிருக்கும்."

தங்கராசு விளக்கை எரிய விட்டான். திண்ணைக்குப் போக அடி எடுத்தான்.

"ஏ ராசு, நீ ஏன் வெளியே போகப் போறே? பேசாம உள்ளேயிரு. அந்தக் குடிகாரமட்டை முத்துமாலை தான் ஏதோ வம்பிலே இறங்கியிருக்கான்.அவன் சீட்டி அடிக்கிற சத்தம் தான் அதிகமாக் கேட்டுது. இப்ப கூடக் கேட்குது. கவனிச்சியா?" என்று அம்மா பொரிந்து கொண்டிருந்தாள்.

பலரது இரைச்சலுக்கும் மேலாக ஓங்கி ஒலித்தது. முத்து மாலையின் "ஹ்விட்டோ ஹ்வீட்" சீட்டி.

"வேறே என்னமோ நடந்திருக்கணும் அம்மா. அது தான் பெரிய இரைச்சலா இருக்கு" என்று தங்கராசு சொன்னான்.

"என்னமும் இருந்துட்டுப் போகுது. விடிஞ்சா தானாத் தெரியும்"என்று அம்மா அவனைத் தடுத்தாள்.

அவள் அநாவசியமாகப் பயப்படுகிறாள், வீணாகப் பயப்படுத்துகிறாள்என்று அவன் எண்ணினான். ஆயினும், விளக்கை அணைத்து விட்டுப் படுத்தான்.

அவ்வேளையில் தெற்குத் தெரு மூலையில் பரபரப்பான ஒரு நிகழ்ச்சி நடந்து முடிந்திருந்தது.

அந்தத் தெருவின் கடைசி வீட்டில் கம்பி அளிபோடப்பட்டிருந்த திண்ணையில் வீட்டுக்காரி படுத்திருந்தாள். எவனோ திருடன் புகுந்து, அவள் கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடியிருக்கிறான். விழித்துக் கொண்ட அவள், "ஐயோ சங்கிலி போச்சே... திருடன், திருடன்...ஐயோ சங்கிலி திருடன்" என்று அலறலானாள்.

பக்கத்து வீடுகளில் உள்ள ஆண்கள் எழுந்து வந்தார்கள். திருடன் வைக்கோல் படப்புகள் இருந்த தோட்டத்தினுள் குதித்து ஓடினான். "ஏய், விடாதே-பிடி" என்று கத்திக் கொண்டு மற்றவர்கள் தெருவிலேயே நின்றார்கள். அவர்களுக்குப் பயம்

கூச்சலைக் கேட்டு அந்தப் பக்கமாக விரைந்து வந்தான் முத்துமாலை. வழக்கமான சீட்டியை தொடர்ந்து அடித்துக்கொண்டு, அவன் சகாக்களும் ஓடி வந்தார்கள்.

தோட்டத்துக்குள் திருடன் குதித்து ஓடினான் என்று தெரிந்ததும். முத்துமாலையும் அவன் ஆட்களும் உள்ளே பாய்ந்தார்கள். ஒருவன் "டார்ச் லைட்"வைத்திருந்தான். அதனுடைய ஒளி தாவித்தாவிப் பாய்ந்தது.

ஒரு படப்பின் பின்னால் பதுங்கி நின்ற திருடன் ஓடத் தொடங்கினான். தோட்டத்துக்கு அப்பால் பள்ளமான வயல் பரப்புகள் தான்.

வயல்களில் பயிர் கிடையாது. அறுவடை முடிந்து காய்ந்து கிடந்தது. ஓடுவதற்கு வசதி தான்.

அவன் ஓட, "டேய் மரியாதையா நின்னுரு. நாங்க துரத்திப்புடிச்சோம்னா உன்னை தொலிஉரிச்சிடுவோம். ஜாக்கிரதை!" என்று முத்துமாலை கத்தினான்.

"அடேய் பக்கத்திலே வந்தா ஆள் குளோஸ். நான் யாரு தெரியுமாடா? ஒரு கொலை பண்ணிட்டு ஜெயிலுக்குப் போய் இருந்திட்டு வந்தவன்டா. இன்னொரு கொலைக்கு அஞ்சமாட்டேன்" என்று திருடன் சவால் விட்டான்.

"ஓகோ, நீ தானா! வெளியே வந்ததிலேயிருந்து பெரிய சூரன் மாதிரி அலையிதியே. இன்னிக்கு மாட்டிக்கிட்டே. டேய், சுத்திவளைச்சு வாங்கடா" என்று முத்துமாலை கூவினான்.

இதற்குள் அவன் ஆட்கள் திருடனை நெருங்கிக் கொண்டுதானிருந்தார்கள். ஊர் ஆட்களும் விளக்குகள், கம்புகள் சகிதம் வந்தார்கள்.

திருடன் ஒரு கத்தியை எடுத்துக்காட்டிக்கொண்டே இருட்டை நோக்கி ஓடலானான்.

முத்துமாலை ஒரு அறிவிப்பு போல் என்று விசிலடித்தான். அதே வேகத்தில் அவனுடைய அரிவாள் முன்னே பாய்ந்தது. குறிபார்த்து அவன் வீசிய அரிவாள் திருடனின் காலில் பலமாக இறங்கியது.

"அம்மாடி" என்று கத்திக் கொண்டு திருடன் காலைப் பிடித்தபடி கீழே உட்கார்ந்து விட்டான்.

சகாக்கள் அவனைப் பற்றிக்கொண்டார்கள். ஒருவன் அவன் கைக்கத்தியைத் தட்டிப் பறித்தான். முத்துமாலை தன் அரிவாளை எடுத்துக் கொண்டான். அவனுடைய மடியைச் சோதித்து, தங்கச் சங்கிலியையும்எடுத்து விட்டான்.

மற்ற ஆட்களும் வந்து சேர்ந்தார்கள். திருடனைப் பிடித்து இழுத்துக் கொண்டு தெருவை அடைந்தார்கள். வழி நெடுக அவனுக்குச் சரியான பூசைக்காப்பு கிடைத்தது.

''அப்பா செயிலுக்குப் போயிட்டு வந்த சூரப்புலியே எந்த இடத்திலே வாலாட்டணும்னு உனக்கு யாரும் கத்துக் குடுக்கலியாக்கும். இதை மறக்காதே. இந்தா ' என்று சொல்லி முத்துமாலை கையை மடக்கிக் கொண்டு முஷ்டியால் அவன் முதுகில் கும்மென்று ஒரு குத்து விட்டான்.

''அம்மா நான் செத்தேன்!'' என்று திருட்டுப் பயல் அப்படியே கீழே உட்கார்ந்து விட்டான்.

வீட்டுக்கார ஐயாவும் அம்மாளும் நின்றார்கள். ''ஐயா இந்தாங்க! உங்க நகை. திருடனைப் போலீசில் ஒப்படைக்கிறதோ அல்லது அடிச்சுப் பத்தறதோ உங்க இஷ்டம்'' என்று அவரிடம் முத்துமாலை தெரிவித்தான்.

''நம்ம பொருளு நம்ம கைக்கு வந்துட்டுது. அந்தப் பயலுக்கு அரிவாள் வெட்டும், பட்ட அடியும் குத்தும் இந்தச் சென்மத்துக்கு போதும்னு தோணுது. கேசு கீசுன்னு போனாலும், வீண்தொரட்டு'' என்று இழுத்தார், ஐயர்.

''அதுவும் சரிதான். இந்தப் பயலை ராத்திரிக்கு இந்தத் தென்னமரத்தோடு சேர்த்துக் கட்டி வச்சிருப்போம். பல பலன்னு விடியற் நேரத்துக்கு அவுத்துப் பத்திருவோம்'' என்று ஒருவர் யோசனை சொன்னார்.

அவ்வாறே செயல்படுத்தப்பட்டது.

''வேய் செயிலுக்குப் போயிட்டு வந்த சூரப்புலியே! இந்த ஊர்பக்கம் இனி அடி எடுத்து வச்சே, அவ்வளவு தான். அடுத்ததடவை என் அரிவாள்உன் காலை நோக்கி

வராது. உன் கழுத்தைத்தான் பதம் பார்க்கும். ஞாபகம் வச்சுக்கோ'' என்று முத்துமாலை அறிவுறுத்தினான். பின் தன்வழியே போனான்.

பலர் மரத்தைச் சுற்றிக் காவல் இருந்தார்கள். அதி காலையில் அவிழ்த்து விட்டு, 'கொசுறு ஆகப்' பல அடி கள் கொடுத்து, ஊருக்கு வெளியே அவனை அனுப்பி வைத்தார்கள்.

அவன் நொண்டிக் கொண்டே போய்ச் சேர்ந்தான்

இந்த விவரம் மறுநாள் தங்கராசுக்குத் தெரிய வந்ததும், ''அடடா, நானும் வந்து பார்க்காமல் போனேனே!'' என்று வருத்தப்பட்டான்.

## 9

அம்மன் கோயில் கொடை வந்தது.

ஊர் பொதுத் திருவிழா அது. எல்லோரும் உற்சாக மாகக் கலந்து கொள்வார்கள்.

முத்துமாலை சில வருடங்கள் வரிப்பணம் கொடுக்க மறுத்து வந்தான். அவனுடைய அம்மா இறந்த தருணத் தில் ஊரார் அவனுக்குப் பாடம் கற்பித்து விட்டதிலி ருந்து. அவனும் ஒழுங்காகப் பணம் கட்டலானான். அத் துடன் விழாக் குதூகலத்தில் அவனும் ஆர்வத்தோடு கலந்து மகிழ்ந்தான்; மற்றவர்களுக்கும் மகிழ்ச்சி அளித் தான்.

கொடை நாட்களில், சில வருடங்கள் அவன் காளி வேடம் தரித்து ஆடிப்பாடி அமர்க்களப்படுத்தினான். பிறகு அவனாகவே அதை விட்டுவிட்டான்.

என்றாலும் கூட்டத்தில் அங்குமிங்கும் அலைந்து கார்வார் பண்ணி தான் இருப்பதைக் காட்டிக் கொள்ளுவது அவன் சுபாவமாக இருந்தது. அவனும் அவனைப் போன்ற சிலரும் சேர்ந்து கொண்டு விழாக்காலத்தில் வியாபாரம் பண்ண வருகிற மிட்டாய்க்கடைக்காரர்கள், ஊ பலகாரக் கடைக்காரர்கள், தேங்காய் பழம் விற்பனையாளர்கள், மற்றும் பல தரப்பட்ட சில்லறை வியாபாரிகள் அனைவரிடமும் காசு வசூலிப்பதை வழக்கமாக்கிக் கொண்டார்கள். மிட்டாய், பழம், இதர பொருட்களையும் இலவசமாகப் பெற்றார்கள். "எங்களுக்குக் கொடுக்கலேன்னு சொன்னால், ஏதாவது கலாட்டா ஏற்பட்டால், பொருள்கள் களவு போனால், அப்புறம் வருத்தப் படக் கூடாது, நாங்கள் கவனிக்க மாட்டோம். இப்ப நாங்க கண்காணித்து வர்றதனாலேதான் திருட்டுப் போகாமல் இருக்கு. இப்ப எட்டணா, ஒரு ரூபா கொடுக்கிறதுக்கு மூக்காலே அழுதா, அப்புறம் இருபது முப்பது நஷ்டமாகி லபோ லபோன்னு வாயிலும் வயித்திலும் அடிச்சிக்கிட்டுப் போவீங்க. ஆமா" என்று ஆலோசனை போலவும் மிரட்டல் போலவும் எடுத்துச் சொல்வார்கள்.

அவர்களையும், அவர்கள் பேச்சையும், போக்கையும் பார்க்கிற வியாபாரிகள், "இந்த அண்ணன்களுக்கு வாய்க்கரிசி போடலேன்னா இந்தத் தடிமாடன்களே கலாட்டா பண்ணவும், கடைகளைச் சூறையிடவும் ஆட்களை ஏவி விடுவாங்க போலிருக்கு. சிறுசிறு திருட்டுக்களையும் நடத்துவிப்பாங்க, இவங்கபேசுற தோரணையைப் பார்த்தாலே தெரியுதே" என்றுபயந்து போய், பணமும் பொருள்களும் கொடுப்பார்கள், கொடுத்து விட்டு,

"காளியாத்தாதான் இவனுகளைக் கேட்கணும்" என்று முணு முணுப்பார்கள்.

ஒரு தடவை இப்படிச் சாபம் கொடுப்பது போல் ஒரு கடைக்காரன் சொன்னது முத்துமாலை காதுகளில் விழுந்து விட்டது. கேட்டு அவன் கோபிக்கவில்லை. சிரித்தான்.

"திருவிழாக் கடையிலே நீங்க வச்சதுதானே வரிசையாக இருக்கு. அநியாயவிலை சொல்லி ஊர்க்காரங்களை நீங்க கொள்ளையடிக்கிறீங்க. உங்கக் கிட்ட வசூல் பண்ணும்படி காளி அம்மா தான் எங்களை ஏவியிருக்கிறா. அவ எங்களை கேட்கிறபோது கேட்டு கிடட்டும். அப்படிக் கேட்கிறதுக்கு முன் வந்தா, முதல்லே அவ உங்களைத்தான் தட்டிக் கேட்பாள்" என்று லெக்சரடித்து விட்டே அங்கிருந்து நகர்ந்தான்.

இந்த வருஷம் கொடை கோலாகாலமாக நடந்து கொண்டிருந்தது அம்மன் சப்பரம் "எழுந்திருந்து ஆவதற்கு" இரவில் வெகு நேரம் பிடிக்கும். அதுவரை ஜனங்கள் விழித்திருப்பதற்காகவும் மற்றும் திருவிழாக்கோலம் காட்டுவதற்காகவும் ஸ்பெஷல் நாதசுரம் நையாண்டி, மேளம், கரக ஆட்டம் எல்லாம் ஏற்பாடு செய்வது வழக்கம். வில்லுப் பாட்டும் நடைபெறும்.

கரகம் ஆடுவதற்கு இரண்டு பெண்கள் வந்திருந்தார்கள். கூட்டம் அவர்களைச் சுற்றிலும் வட்டமிட்டிருந்தது. "ஆடு! ஆடு" என்று ஓயாது கூச்சலிட்டு அவர்களை ஆடும்படி தூண்டிக்கொண்டேயிருந்தார்கள். தெருத்தெருவாக போய். முக்கிற்கு முக்கு நின்று, வெகுவாக ஆடிக் களைத்துப் போனார்கள் அவர்கள். இருப்பினும் ஒருசிலர் "ஏய் ஏன் நிக்கிறே? பணம் வாங்கலே நோட்டு நோட்டா? ஆடுங்கடி" என்று உத்திரவிட்டு அந்தப் பெண்களைக் கிண்டல் பண்ணலானார்கள்.

களைத்துச் சோர்ந்து போன அப் பெண்கள் கையெடுத்துக் கும்பிட்டார்கள். ''ஐயா சாமி! நாங்க ஆடமாட்டோமின்னு சொல்லலே. இதுவரை ஆடி ஆடி ஒரே களைப்பாயிருக்கு. கிறுகிறுன்னு வருது. ஒரு மணி நேரம் ரெஸ்ட் எடுத்துக்கிட்டு அப்பாலேஆடுறோம்'' என்றுபணிவாகச் சொன்னார்கள். அவர்களது குரலே அழுவது போல்தானிருந்தது.

''ஏயம்மாடீ, ரெஸ்டாமில்லே... இவொளுக்கு ரெஸ்டு, அதுவும் ஒரு மணி நேரமில்லா வேணுமாம்!'' என்று ரகளைக்கார வாலிபர்கள் கேலி பேசினார்கள்.

அந்தப் பக்கமாக வந்த முத்துமாலை ஆட்டக்காரிகள் கெஞ்சியதையும், வாலிபப் பையன்களின் பேச்சையும் கேட்டான். முன்னே வந்து, ''ஐயா தம்பிமாருகளா நீங்க ஒரே அடியா ஆட்டத்தை ரசிச்சுப்போடாதீங்க. வில்லுப் பாட்டு நாதஸ்வரம் இதுகளையும் ரசிக்கப்போங்கடே. அந்தப் பொண்ணு சொல்றதும் நியாயம் தானே? அவங்களும் மனுசப் பிறப்பு தானே. மிஷினு இல்லையே. ஓய்வுதேவையின்னு கேட்கிறதிலே என்ன தப்பு? கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்திட்டு அப்பாலே ஆடுவாங்க. அவங்க ரெண்டு பேரும் சாப்பிட்டாங்களோ இல்லையோ பாவம்!'' என்று கூறினான்.

பெண்கள் அவனைப் பார்த்து வணங்கினார்கள். ''சரி முதல்லே டீ குடியுங்க. அப்புறம் உங்களுக்கு எங்கே சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கோ அங்கே போயி சாப்பிடுங்க'' என்றான். அவனே டீ வாங்கிக் கொடுத்தான்,

''நன்றி, அண்ணாச்சி'' என்று கூறிக் கும்பிட்டார்கள் அவர்கள்.

அவன் தலையை ஆட்டிக் கொண்டே நகர்ந்தான் அவனைத் தேடிச் சில பேர் வந்தார்கள்.

"முத்துமாலை, இங்கேயா இருக்கே? உன்னை எங்கே யெல்லாம் தேடினோம்!" என்றார்கள்.

"ஏன், என்ன விசயம்?" என்று கேட்டு சாவகாசமாக ஒரு பீடியைப் பற்றவைத்தான் அவன்.

"இந்த நாதசுரக்காரன் ரொம்பரப்பாப் பேசுறான்"

"அகம்பாவம் பிடிச்சி அலையிதான்"

"சரியான மண்டைக் கனம். ஆளைப் பார்த்தாலே தெரியலே!"

"பெரிய நாதசுரச் சக்கிரவர்த்தியின்னு நெனைப்பு அவனுக்கு' அதனாலே தான் எடுத்தெறிந்து பேசுதான்."

"பளபளக்கிற பட்டை மேலே போர்த்திக்கிட்டா, காதிலே வெள்ளைக் கடுக்கனும் கையிலே செயினும் போட்டுக் கிட்டா, நாதசுரத்திலே, தானே விலைக்கு வாங்கி ஒரு மெடலையும் தொங்க விட்டுக் கிட்டா, பெரிய சங்கீத வித்வான் ஆயிருவானோ இவன்!"

இவ்வாறு ஆள் ஆளுக்கு ஒன்று சொன்னார்கள்.

"அமைதியாகச் சொல்லுங்கடே. என்ன நடந்தது. நாதசுரக்காரன் என்னமோ பேசிப்புட்டான்னு புரியுது? என்ன சொன்னான் அவன்? அவன் கிட்டே யாரு என்ன கேட்டா?" என்று நிதானமாகக் கேட்டான் முத்து மாலை.

அவர்கள் சளசளத்ததிலிருந்து அவன் இதைப் புரிந்து கொள்ள முடிந்தது—

அந்த நாதசுரக்காரன் மேல்மினுக்கி ஆசாமியாக, வெறும் காட்சி பொம்மை மாதிரி எத்திக்கிட்டு அலை கிறான். பேருக்குக் குழலை கையிலே வச்சுக்கிட்டு ஒய்யா ரமாப் பாக்கிறது. தளுக்காகச் சிரிக்கிறது. ரெண்டு ஊது

ஊதறது நிக்கறதுன்னு நேரம்போக்குறானே தவிர வாங்கின பணத்துக்கு நியாயம் பண்ணுறவனாஇல்லே. என்ன ஐயா, வாசிக்காமலே பொழுதை ஓட்டிக் கிட்டு வாறீகளேயின்னு ரெண்டு பேரு கேட்டாங்க. அவன் தங்கப் பல்லுடல் அடிக்கும்படி ஒரு சிரிப்பு சிரிச்சான். 'ஹே, இந்த ஊரு ரசிக மகாஜனங்க நிறைந்தசபை! அதுக்கு இந்த வாசிப்பு பத்தலையாங்காட்டியும்?' என்று விண்ணாரம் கொழிச்சான்.

''ஐயா நீங்க வாசிக்கிறதை வாசிச்சா கேட்கிறவங்க கேட்டிட்டுப்போறாங்க, ரசிக்கத் தெரிஞ்சவங்க ரசிக்கிறாங்க. நீங்க வாசிக்காமலே, ஆடாத சதிர்த்தாசி மாதிரி சும்மா தளுக்கி மினுக்கிக்கிட்டுப் பொழுது போக்கினா என்ன அர்த்தம்? வாங்கின பணத்துக்காவது சரியானபடி ஊதணுமில்லே?'' என்று ஒரு பெரியவர் முறைத்தார்.

அவன் மறுபடியும் 'ஹேங்!' என்று ஏளனமாக நகைத்தான். ''பணம்! மகாப் பெரிய சம்மானம் அள்ளிக் கொடுத்திட்ட மாதிரித்தான். இந்த ஊருக்கு இவ்வளவு போதும்'' என்று அலட்சியமாகப் பேசினான்.

''தண்ணி தாராளமாவே உள்ளே போயிருக்கும் போலிருக்கு?'' என்றான் முத்துமாலை. மற்றவர்களோடு நாதசுரக்காரன் நின்ற இடத்துக்குப் போனான்.

'அப்போது அம்மன் புறப்பாடு' ஆரம்பித்திருந்தது. சன்னிதியை வீட்டு சப்பரம் வெளியே வந்தாச்சு. நாதசுரக்காரன் வெறுமனே குழலை அலங்காரமாகப் பிடித்தபடி, பகட்டாக நின்றான். சிறிது வாசித்தான். பிறகு மவுனமானான்.

சப்பரம் முக்கியமான இடத்தில் வந்து நின்றது. ''நாதசுரம் நாதசுரம்!'' என்று குரல்கள் எழுந்தன.

“எப்ப வாசிக்கணுமின்னு எனக்குத் தெரியும்!” என்றான் நாதசுரக்காரன். பிறகு சிறிது வாசித்தான். தனது வாசிப்பில் தானே பெருமை கொண்டவனாய் சுற்றும் முற்றும்பார்த்தான். அவனுக்கு திருப்தி ஏற்படவில்லை.

“நாதசுரம் நாதசுரம்னு கத்தத் தெரியுதே தவிர, வாசிப்பை ரசிக்கிறவங்க யாரும் இருக்கதாத் தெரியலியே!” என்று பக்கவாத்தியக்காரனிடம் சொன்னான்.

“ரசிக மகாஜனங்கள் நிறைஞ்ச சபையிலே மட்டும் தான் வாசிப்பேன்; இப்படி திருவிழாவுக்கெல்லாம் ஊத வரமாட்டேன், அது நம்ம கொள்கையின்னு முதல்லேயே சொல்லியிருக்க வேண்டியது தானே? எதுக்காக இவ்வளவு ரேட்டுன்னு பணம் பேசி, அட்வான்சும் வாங்கினீரு? அப்படிப் பேசி வந்துட்டீரில்லையா? அப்போ ஒழுங்காக வாசிக்க வேண்டியதுதானே உம்ம கடமை? அதை விட்டுப் புட்டு எத்துவாளித்தனம் பண்றதும், எடக்குப் பேசுறதும், பல்லை இளிக்கிறதும்னு வந்தா, நாங்களும் எங்க குணத்தைக் காட்டத் துணிவோம்!”

கணீரிடும் குரலில் முத்துமாலைதான் அறிவித்தான்.

கூட்டம் விலகி அவனுக்கு வழி விட்டது. அவனையும், அவன் கூடவந்து நின்றவர்களையும் நாதசுரக்காரன் பார்த்தான். “நீங்க யாரோ?” என்றான்.

“நான் யாருங்கறது முக்கியமில்லே. இது ஊர் பொதுக்கோயில். கொடை பொதுத் திருவிழா. பொதுவான வரிப் பணத்திலேயிருந்துதான் சகல செலவுகளும் நடக்குது. வரிப்பணத்திலேயிருந்துதான் உமக்கும், நாதசுர வாசிப்புக்காகப் பணம் கொடுத்திருக்கு. நான் இந்த ஊர்க்காரன். இவங்களும் இந்த ஊர்க்காரங்கதான். அதாவது திருவிழா நடக்கிறதுக்காகப்

பணம் கொடுத்திருக்கிறவங்க. நீரு உம்ம கடமையைச் செய்யலே. அதனாலே நாங்க உரிமையோடு கேட்கிறோம்...''

''அப்படியா ஸேரி!'' நாதசுரக்காரனின் தங்கப் பல் பளிச்சிட்டது.

முத்துமாலைக்குக் கோபம் வந்தது. ''இந்த எடக்கு மயிரெல்லாம் இந்த ஊரிலே வச்சுக்கிடாதே தம்பி. உன் தங்கப் பல்லு... உதிர்ந்து போயிரும். உன் வாசிப்பிலே உனக்குக் கெர்வம் இருக்கிறது சரி. அதுக்காக ஒரேயடியா மண்டைகனமேறிப் போகாதே.அப்படிப் போனா உன் டாப் எகிறிப் போகும் எகிறி. ஒகோன்னானாம்!'' என்று கூவினான்.

தொடர்ந்து சொன்னான்: ''அம்பாள் வீதி வலம் புறப்பட்டாச்சு. நீயும் கூடவே வாசிச்சிக்கிட்டு வரணும். இந்த ஊர்க்காரங்க ரசிப்பை நீ ஒண்ணும் எடைபோட வேண்டியதில்லை. வாசிக்காமல் எத்தினே, நீ உன்குழல், மெடல், தங்கப்பல்லோடு உன் ஊருக்குத் திரும்பிக்கிட மாட்டே, ஊரைப்பத்திக் கேவலமாப்பேச உனக்கென்ன தைரியம்? நிதானமா நடந்துக்கோ தம்பி'' என்றான்.

அவனைச் சேர்ந்தவர்களும் அவன் போக்கினால் வசீகரிக்கப்பட்டவர்களும் பலமாகக் கைதட்டினார்கள்.

நாதசுரக்காரன் நிலைமையைப் புரிந்து கொண்டான். எல்லோருக்கும் பொதுவாக வணக்கம் தெரிவித்துவிட்டு, குழல் வாசிப்பில் ஈடுபட்டான். நல்ல முறையிலேயே வாசித்தான்.

சப்பரம் ஒரு தெருவில் பிரவேசித்ததும், முத்துமாலை அங்கிருந்து நகர்ந்தான். கோயில் பக்கமாக நடந்தான். சன்னிதிக்குப் போனான்.

கோயில் பிரகாரத்திலும் சன்னிதியிலும் ஆட்களே இல்லை. விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. வெளிச்சம் வெறுமையை நன்கு எடுத்துக் காட்டியது.

வெறுமை இல்லை என்று திடீர் அழுகைக் குரல் அவனுக்கு உணர்த்தியது. ஒரு குழந்தை பதறி அழுதது.

அவன் கவனித்தான்.

ஒரு ஓரத்தில் படுத்துத் தூங்கிக் கிடந்த குழந்தை பதறி விழித்ததும், தனிமையைக் கண்டு அஞ்சி அலறியது.

அவன் அதன் அருகில் போனான். யார் குழந்தை? யார் வீட்டைச் சேர்ந்தது? அவனுக்கு விளங்கவில்லை. சட்டையும் பாவாடையும், கழுத்தில் கிடந்த டாலர் செயினும், குழந்தையின் ஆரோக்கியமான உடம்பும், அது வசதியான வீட்டில் வளரும் பிள்ளை என விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தன. அவ்வூரில் யார் வீட்டிலும் அந்தப் பிள்ளையைக் கண்டிருப்பதாக அவனுக்கு ஞாபகமில்லை. வெளியூரிலிருந்து வந்த குழந்தையாக இருக்க வேண்டும். கொடைக்கு எவர் வீட்டுக்காவது வந்திருக்கக் கூடிய உறவினர் ஒருவரது மகளாக இருக்கலாம் என்று எண்ணினான்.

யாராக இருந்தாலும் சப்பரத்தின் அருகேதான் நிற்பார்கள். குழந்தையை எடுத்துப் போனால் அவர்கள் கண்டு கொள்வார்கள்; குழந்தையே கண்டு பிடித்தாலும் கண்டு பிடித்து விடும் என்று முடிவு செய்தான்.

அதன் அருகேபோய், "பாப்பா ஊங்கிட்டியா? சாமி பார்க்கப் போவமா? அம்மா அங்கேதான் இருக்கா" என்று அன்பு கனியும் குரலில் பேசினான்.

குழந்தைக்கு மூன்று வயது இருக்கும். தூக்கிக் கொள்ளும்படி கைகளை முன்னே நீட்டி உயர்த்தியது.

முத்துமாலை சிரித்துக் கொண்டே அதைத் தூக்கினான். "நல்லாத் தூங்கிட்டே. அதுதான் சாமி வெளியே போனது உனக்குத் தெரியலே. எல்லாரும் சாமி கூடவே போயிட்டாங்க" என்று பேசியவாறே நடந்தான்.

நல்லவேளை குழந்தை அழுகையை நிறுத்தி விட்டது.

"உன் பேரு என்ன கண்ணு?" என்று செல்லக் குரலில் கேட்டான்.

"மங்கை...மங்கயக்கயிசி" என்று மழலைக் குரலில் அது பேசியதை அவன் ரசித்தான். அதன் பேச்சை மேலும் கேட்க ஆசைப்பட்டான்.

"அப்பா பேரென்ன?"

"அப்பா" என்று அழுத்தமாக அறிவித்தது குழந்தை.

"அம்மா பேரு அம்மாவா?"

"இல்லே. தியிபுயிசுந்தயி"

"தியிபுயிசுந்தயி-ரொம்பவும் புதுமையான பேராக இருக்குதே!" என்று சொல்லிச் சிரித்தான் அவன். குழந்தையும் அவனோடு சேர்ந்து சிரித்தது. "நல்ல மாமா" என்று கூறி அவன் முகத்தில் முகம் வைத்து முத்தமிட்டது.

முத்துமாலைக்குப் புல்லரித்தது. அதி இனிமையை ருசித்தது போல் சந்தோஷம் ஏற்பட்டது. உள்ளம் கிளுகிளுத்தது.

"தியிபுயிசுந்தயி மக மங்கயக்கயிசி சர்க்கரைக் கட்டி, பலாச்சுளை. மல்கோவா மாம்பழம்" என்று கொஞ்சி. அதை முத்தமிட்டான்.

''ஓ, மாம்பயம் எனக்குப் பிடிக்குமே. இனிச்சுக் கிடக்கும். நீ வாங்கித் தாயியா மாமா?'' என்று இனிமையாகப் பேசியது குழந்தை.

அவன் ஒரு திருப்பத்தை நெருங்கும்வேளை. அதே திருப்பத்தில் இரண்டு பேர் வேகம் வேகமாக வந்தார்கள். பெண்கள் கூட ஒரு சிறுமியும் ஓடி வந்தது.

குழந்தையின் பேச்சைக் கேட்டும், எதிரே வந்தவர்களைக் கண்டும், ஒருத்தி முன்னே பாய்ந்தாள். ''இந்தா இருக்கு புள்ளெ. அம்மாடி, என் வயித்திலே பாலை வார்த்தே'' என்று கூறி அவசரமாகக் கைகளை நீட்டினாள்.

''அம்மா!'' என்று பாய்ந்தது குழந்தை. ''அக்கா என்னை விட்டுட்டுப் போயிட்டா'' என அழத் தொடங்கியது.

அவளைப் பார்த்து திகைத்துப் போய் நின்றான் முத்துமாலை. திரிபுரசுந்தரி! ஓ, இந்தப் பெயரைத் தான் குழந்தை அப்படிச் சொல்லியிருக்கிறது. எனக்கு அது புரியவில்லையே! எப்படிப் புரியும்? இவளை யார் இந்த ஊரில் இன்று எதிர்பார்த்தது!

''வா திரிபுரம், சௌக்கியம்தானா?'' என்று கேட்டான் முத்துமாலை.

குழந்தையை இழந்திருந்த பதட்டம். அது திரும்பக் கிடைத்து விட்ட பரபரப்பு, கழுத்திலே காதிலே கை கால்களிலே போட்டிருந்தவை எல்லாம் அப்படி அப்படியே இருந்த ஆனந்தம்-இப்படிப் பல ரக உணர்ச்சிகளினாலும் தன்னை மறந்த நிலையில் இருந்த திரிபுரம் இப்போது தான் அவனை கவனித்தாள்.

''ஓ நீங்களா!'' என்றாள். ''பிள்ளை எங்கே இருந்தது?''

''புள்ளை சுகமா ஒத்தையிலே படுத்துத் தூங்கிக்கிட்டிருந்தது. திடுக்கிட்டு முழிச்சு, பதறி அழுதது. நல்ல வேளையா நான் அந்தப் பக்கமா வந்தேன். வேறு யாரும் வந்திருந்தா என்ன ஆகியிருக்குமோ? திருவிழாக் கூட்டத்திலே யாரு எவருன்னு என்னத்தைச் சொல்ல முடியும்? கழுத்திலே சங்கிலி, காதுகளிலே ஜிமிக்கி, கைகளில் வளையல், கால்களில் கொலுசு எல்லாம்போட்டு பிள்ளையை இப்படித்தான் அலட்சியமா விடுறதாக்கும்?'' குறை கூறும் தொனியில் பேசினான் அவன்.

''இந்தப் புள்ளை மங்கை கூடவே இருந்தது'' என்று தன் அருகில் நின்ற சிறுமியைக் காட்டினாள் திரிபுரம். ''விளையாடி அலுத்த மங்கை தூங்கிப் போயிருக்கு. சப்பரம் புறப்பட்ட பரபரப்பிலே நாங்க எல்லோரும் போயிட்டோம். இந்தப் புள்ளையும் வந்துட்டுது. மங்கை நினைப்பு யாருக்கும் வரலே. அந்தத் தெருவிலே பாதி தூரம் போனதும் தான், மங்கையை காணோமேன்னு கேட்டேன். இந்தப் புள்ளையைச் கேட்டா, அது என் கூட வரலியேன்னு கையை விரிக்குது. பிறகு என்ன ஏதுன்னு விசாரிச்சா, அது கோயில்லே தூங்கிட்டுது; அப்புறம் நான் கவனிக்கலேன்னு சொல்லுது. எனக்கானா பயம். குலை நடுங்கிப் போச்சு. ஐயோ, புள்ளைக்கு ஏதுவும் ஆகியிராம இருக்கணுமேன்னு கும்பிட்டுகிட்டு, இந்த அக்காளையும் துணைக்குக் கூட்டிக்கிட்டு, ஓடியாறேன். இந்தப் புள்ளையும் எங்களோடவே ஓடியாந்தது. நல்ல வேளை, நீங்க கடவுள் மாதிரி குழந்தையைப் பாதுகாத்து எடுத்துக்கிட்டு எதிரே வாறீங்க'' என்று சொல்லி முடித்த திரிபுரம், குழந்தையைக் கொஞ்சலானாள். ''பயந்துட்டியாடா ராஜா? ரொம்ப பயந்துட்டியாடா?''

''இல்லே. அதுக்குள்ளாய இந்த மாமா வந்துட்டா. நல்ல மாமா'' என்றது குழந்தை.

திரிபுரம் முழுதலர்ந்த முகத்தோடு அவனைப் பார்த்தாள். புன்னகை பூத்தாள்.

''இந்த ஊருக்கு எப்ப வந்தே திரிபுரம்?''என்று தனது பழைய கேள்வியைத் திரும்ப யும் கேட்டான் அவன்.

''நேத்து வந்தேன்''

''எல்லோரும் சவுக்கியம் தானே?''

''ஊம்ம்''

''அவாள் வந்திருக்காளா?''

''அடுத்த வாரம் வருவாக...வீட்டுக்குப் போகலாமா, மங்கை? சாமியைக் கும்பிட்டுப் போட்டு அப்படியே போவோம்'',என்று குழந்தையைப்பார்த்தாள் அவள்.

''சரி போங்க. நான் இந்தப் பக்கம் போறேன். புள்ளை பத்திரம். திரும்பவும் எங்காவது தனியாய் போயிறாமே'' என்று சொல்லி அந்த இடத்திலேயே நின்று விட்டான் முத்துமாலை.

''நாளைக்கு வீட்டுக்கு வாங்களேன். பார்த்து எவ்வளவோ நாளாச்சு. வருவீகளா?'' என்றாள் அவள்.

''உம். வாறேன் வாறேன்!''

''நாளைக்கு கண்டிப்பா வரணும். வாங்க அத்தான்'' என்று அழைப்புக்கு அழுத்தம் கொடுத்தாள் திரிபுரம்.

''கண்டீப்பா வயணும்''என்று மொழிந்தது குழந்தை.

''சரி கண்ணு. அவசியம் வாறேன்'' என்று சொல்லி விட்டு திரும்பவும் கோயிலை நோக்கி நடந்தான் அவன்.

# 10

மறுநாள் தனபாக்கியம் விசேஷமாக சுகியன் தயாரித்திருந்தாள். அருமையாக ருசித்தது. அதில் பத்து எடுத்துக் கட்டிக் கொண்டு முத்துமாலை மங்கையையும் திரிபுரத்தையும் பார்ப்பதற்காகப் போனான்.

திரிபுரசுந்தரி பளிச் சென்று பட்டாடையோடு விளங்கினாள். "அத்தான் வாங்க" என்று முகமலர்ச்சியோடு வரவேற்றாள்.

"மாமா வந்தாச்சி" என்று கூவிக் கொண்டு ஓடிவந்த மங்கை அவன் கால்களைக் கட்டிக் கொண்டது.

"இது உனக்கு மாமா இல்லேடி, அப்பா முறை" என்று திரிபுரம் சொன்னாள்.

"உக்குங்...மாமாதான்...நல்ல மாமா" என்று குழைந்தாள் மங்கை.

முத்துமாலை சிரித்தான். குழந்தையிடம் ஒரு சுகியனைக் கொடுத்து விட்டு, பாக்கியை திரிபுரத்திடம் தந்தான்.

"இது என்னது?" என்று உருட்டி உருட்டிப் பார்த்தது குழந்தை.

"சுகியன். தின்னு பாரு இனிச்சுக்கிடக்கும்"

குழந்தை அதை ருசி பார்த்தது. பிறகு ரசித்துக் தின்றது.

"என்ன, எப்படி இருக்கீங்க? ஏன் நின்னுக்கிட்டே இருக்கீங்க? உட்காருங்க" என்று திரிபுரம் உபசரித்தாள்.

வேறு ஒரு பெரிய பெண் எட்டிப் பார்த்தது. பன்னிரண்டு வயது இருக்கும். அவளுடன் ஒரு பையன் வந்தான். எட்டு வயது இருக்கலாம்.

''இவ தான் மூத்தவ, காந்திமதி. அடுத்தது நடராசன், மூன்றாவது தான் மங்கை'' என்று அவள் அறிமுகப் படுத்தினாள்.

பிள்ளைகள் ஆரோக்கிய மினுமினுப்புடனும், விலை உயர்ந்த உடைகளின் பளபளப்போடும் விளங்கின.

பணத்துக்குக் கவலையில்லை, செழிப்பா வாழ்றாங் கன்னு தெரியுது என்று முத்துமாலையின் மனம் கணித்தது.

திரிபுரம் ஆளுக்கு ஒரு சுகியன் கொடுத்து விட்டு, மீதியை உள்ளே கொண்டுபோய் வைத்தாள். பெரிய பெண்ணுக்குச் சில உத்திரவுகளிட்டுவிட்டு வெளியே வந்தாள்.

''இப்போ எந்த ஊரிலே இருக்கீங்க?'' என்று கேட்டு வைத்தான் முத்துமாலை.

''பம்பாயிலே தான். ஆனா ஒரு இடத்திலே இருக்க முடியிறதில்லே. டில்லி, கல்கத்தா, மெட்ராஸ் அங்கே இங்கேயின்னு சுத்திக்கிட்டே இருப்பாங்க. மெட்ராஸிலே ஒரு வீடு வாங்கி, எங்களை அங்கேய வச்சிட்டு, தான் வழக்கம் போல பிசினஸை கவனிக்கலாம்னு நினைச்சிருக்காங்க. வீடுகூடப் பார்த்தாச்சு.''

''அப்ப இந்த ஊருக்கு வந்து தங்கறதா எண்ணம் இல்லையாக்கும்?''

''வடக்கேயே பெரிய ஸிட்டிகளிலே இருந்து பழகிப் போச்சு. இங்கே வந்தா பிள்ளைகளுக்கும் பிடிக்காது. அவுகளுக்கும் பிடிக்காது.''

''அம்மாவுக்குப் பிறகு இந்த வீடு; இங்கே இருக்கிற நிலம், எல்லாம்?''

''அதை எல்லாம் வித்திட வேண்டியதுதான். இந்த ஊரிலே என்னத்துக்கு வீடும் நிலமும்? அம்மா இருக்கப் போய்த்தான் இந்த ஊருக்கு வரவேண்டியிருக்கு. அம்மாவுக்குப் பிறகு யாரு இங்கே வரப்போறா?'' என்றாள் அவள்.

''ஏன், ஊரோடு இருக்கிற சொந்தக்காரங்களையும் பிடிக்கலையாக்கும்?''

பதில் பேசாது சிரித்த திரிபுரம் அவனை ஒரு பார்வை பார்த்து விட்டு, உள்ளே போனாள்.

இந்தப் பார்வைக்கு என்ன அர்த்தமோ என்று நினைத்தான் அவன்.

மங்கை அவனிடம் ஒட்டிக் கொண்டு சிரித்து விளையாடியது. அவனும் குழந்தையோடு விளையாடியவாறே, ''யாருக்குப் பிடிச்சாலும் பிடிக்காமப் போனாலும் உனக்கு என்னைப்பிடிச்சிருக்கு,இல்லையா?'' என்றான்.

சிறிது நேரத்தில் திரிபுரம் காப்பி எடுத்து வந்தாள். மகளை காப்பி தயாரிக்கும்படிதான் ஏவியிருந்தாள். காப்பி டம்ளரை அவன் அருகில் வைத்துவிட்டு, ''உம் சாப்பிடுங்க'' என்றாள்.

''இப்ப எதுக்கு காப்பி?'' என்றான். பிறகுஎடுத்துக் குடித்தான்.

''காந்தி போட்டதா? நல்லாத்தான் போட்டிருக்கா?'' என்று பாராட்டுரை வழங்கினான்.

''நீங்க உங்க போக்கு எதையும் மாத்திக்கிடலேன்னு தெரியுது. நிலத்தை எல்லாம் வித்துட்டீகளாமே? அந்தப்

பணத்தையும் சுட்ட மண்ணாச்கியாச்சு, இல்லையா? அதை வச்சுக்கிட்டு ஊரை விட்டு வெளியேறி, ஊத்துக்குடி, மதுரை, இதுமாதிரி எங்கேயாவது போயி, ஒரு கடை வச்சிருக்கலாமில்லா? பணம் சேர்ந்திருக்கும். அதை விட்டுப் போட்டு பணத்தையும் பாழாக்கி, உடம்பையும் கெடுத்து, கெட்ட பேரும் வாங்கிக்கிட்டு இதெல்லாம் என்னத்துக்கு?''

அவள் அனுபவப்பட்ட பெரியமனுஷி தோரணையில் பேசினாள்.

முத்துமாலை பெருமூச்செறிந்தான். ''யாராரு எப்படி எப்படி வாழணுமின்னு ஏற்பட்டிருக்கோ, அப்படி தான் ஒவ்வொருத்தன் வாழ்கையும் அமையும். நான் பெரிசா திட்டம் போட்டுகிட்டு பணத்தோடு பட்டணம் போயிருந்தாலும் பாழாகணும்னு இருந்தால், இருக்கிற பணம் பாழாகித்தான் போகும். நான் இப்படி இருக்கேனே என்றதுக்காக நான் என்னைக்குமே வருத்தப் பட்டதில்லை. இனிமேலா வருத்தப்படப் போறேன்? நீ ஊரைவிட்டுப் போனதினாலே பணமும் பவிசுமா, சீரும் சிறப்புமா இருக்கிறதாத் தெரியுது. சந்தோஷமா இருக்கணும். அதுதான் முக்கியம். சரி, அவாள் என்ன பிசினசு பண்ணுதாக?'' என்றான்.

''என்னென்னவோ பண்ணுறாங்க. அதெல்லாம் எனக்குத் தெரியாது.''

''எப்போ இந்த ஊருக்கு வருவாக?''

''அதுவும் தெரியாது. திடும்னு புறப்பட்டுப் போவாங்க. ரெண்டு மூணுநாள் வரமாட்டாங்க, திடீர்னு வந்துநிப்பாங்க. எங்கே போறேன்னும் சொல்லமாட்டாக. கேட்கவும் கூடாது. அவங்க குணத்தை புரிஞ்சுக்கிட்ட பிறகு நானும் கேட்கறதில்லே. வீட்டோட கிடக்கிற எனக்கு அதெல்லாம் தெரிஞ்சுதான என்னஆகப்போகுது. கேட்கிறதெல்லாம் வாங்கித் தந்திருவாங்க. பணமும்

கொடுத்திட்டுப் போவாக. அப்புறம் என்ன?'' என்று பிடிப்பில்லாமல் பேசினாள் திரிபுரம்.

''இந்தத் தடவை இந்த ஊருக்கு அவாள் வரும்போது பார்த்துப் பேசணுமின்னு நினைக்கிறேன். போன தடவை வந்தப்போ நான் அவாளைப் பார்க்கவே இல்லே. அப்போ நீங்கள்ளாம் வந்துட்டுப் போயி அஞ்சாறு வருடம் இருக்குமே. இருக்காது?''

''அஞ்சு வருசம் ஆச்சு. அடிக்கடி எங்கே வரமுடியுது? ஒரு தடவை வந்திட்டுப் போறதுன்னு சொன்னா எவ்வளவு சிரமமா இருக்குது!''

''அதுவும் சரிதான்'' என்றான் முத்துமாலை. சட்டென்று எழுந்து கொண்டான். ''சரி, நான் வாறேன்... மங்கை, போயிட்டு வாறேன்'' என்று கிளம்பினான்.

''டா-டா'' என்று விரல்களை அசைத்தது குழந்தை. ''சீரியோ! பை பை'' என்றது.

அதில் எதுவும் அவனுக்கு விளங்கவில்லை. ''பிள்ளைகள் சீக்கிரமே புத்திசாலிகள் ஆகிவிடுகின்றன இந்தக் காலத்திலே'' என்று எண்ணியவாறே வெளியேறினான்.

—திரிபுரம் ரொம்பப் பெரியவளாயிட்டா. எனக்கே போதிக்க முன்வந்திருக்கிறா. பணமும் பவிசும் ஆட்களை ரொம்பவும் மாத்திப் போடும்கிறது சரிதான்...

அவனுக்குக் குடிக்க வேண்டும்போல் வந்தது. அப்போதே குடித்தாக வேண்டும். வழக்கமா ராத்திரி தான் குடிப்பான். திரிபுரத்தைப் பார்த்தபிறகு அவள் பேச்சைக் கேட்ட பிறகு, அவனுக்கு ஒரு வறட்சி ஏற்பட்டது. கசப்பு முட்டி வந்தது. நெஞ்சு எரிவது போலிருந்தது. குடித்தால் தான் அது தணியும்.

குடிக்கப் போனான். ராத்திரி வருகிற வரை குடித்துக் கொண்டேயிருந்தான். இருட்டியதும், முத்துமாலையின்

சீட்டி ஒலி அன்று மிக அதிகமாகக்கேட்டது. பாட்டுகளும் தீவிரமாக முழங்கின. வழக்கமாக அவன் அடிக்கடி பாடாத பாட்டு ஒன்று இரவு பூராவும் திரும்ப திரும்பப் பொங்கி வழிந்தது அவனிடமிருந்து—

அவள் போனாளே
பறந்து போனாளே!—என்னை
மறந்து போனாளே—விட்டுப்
பிரிந்து போனாளே—ஐயோ
போயே போனாளே!

தெருக்களைச் சுற்றிச் சுற்றி வந்தான். அமைதியை இழந்து ஆத்மா ஏங்கி அலறுவது போல் ஓலமிட்டான்.

எட்ளடிக்குச்சுக்குள்ளே—ஐயா
எத்தனை நாளிருப்பேன்—நான்
எத்தனை நாளிருப்பேன்—இன்னும்
எத்தனை நாளிருப்பேன்!

தனது வீட்டுக்குள்ளே தூக்கம் கலைந்து புரண்டு புரண்டு தங்கராசு அதிசயித்தான். 'இன்னிக்கு முத்து மாலைக்கு என்ன வந்துட்டுது? ஏன் இந்தப் போக்குக்குப் போறான்?'

'அவனுக்கு மனசுக்குள்ளே என்னவோ நேர்ந்திருக்க வேணும்' என்று தங்கராசுக்குத் தோன்றியது. 'நான் அவனைப் பார்த்துப் பேசியும் நாளாயிட்டுது; நாளைக்கு அவனிடம் கேட்கணும்' என்று எண்ணிக் கொண்டான்.

# 11

மறுநாள் ராத்திரி.

தங்கராசு முத்துமாலைக்காகக் காத்திருந்தான். அவன் கோட்டைத் தெருவுக்கு வந்ததும் இவன், ''முத்து மாலை, கொஞ்சம் நில்லு'' என்று குரல் கொடுத்தான்.

முத்துமாலை நின்றான். திண்ணை அருகில் வந்தான். ''என்ன வீட்டிலே எல்லோரும் வந்தாச்சா?'' என்று விசாரித்தான்.

''இன்னும் வரலே.''

''கொடைக்குக்கூட வரலியா? நீ காயிதம் போட லையோ?''

''போட்டேன் போட்டேன். அவ புறப்பட்டு வரலே... மெதுவா வாறா! இங்கே வந்துதான் என்ன செய்யப் போறா? பொறந்த வீட்டிலே, கூட ரெண்டு வாரம் இருந்துட்டுத்தான் வரட்டுமே!''

''அது சரி...''

''கொடையிலே உன் ஆக்கினைகள்ளாம் ஏக தட புடலா இருந்துதே?'' என்றான் தங்கராசு, சிரித்துக் கொண்டே.

முத்துமாலை சும்மா சிரித்தான்.

''நீ பெரிய ஆளுதான் முத்துமாலை''

''என்ன பெரிய ஆளு! ஒரு சின்னப் பொம்பிளை கூட புத்தி சொல்லும்படியா இருக்கு நம்ம நிலைமை!''

அவன் குரலில் அலுப்பும் சலிப்பும் கசப்புடன் கலந்து ஒலித்தன. ''நேத்துப் பூரா எனக்கு மனசே சரியில்லாமப் போச்சு!''

''ஏன், என்ன விசயம்?''

''திரிபுரசுந்தரி ஊருக்கு வந்திருக்கா. வீட்டுக்கு கூப்பிட்டா. போனேன். உபதேசம் பண்ண ஆரம்பிச்சிட்டா. இப்படி கெட்ட பேரு எடுத்துக்கிட்டு ஊரைச் சுத்துறதை விட, ஊரை விட்டே போயி, எங்காவது மளிகைக் கடை வச்சுப் பிழைக்கலாம்னு வழி காட்டினா...ஊம்ம் நம்ம பிழைப்பு இந்த லெச்சணத்திலே இருக்கு''

ஓகோ, இதுவா சமாச்சாரம் என்று கொக்கரித்தது தங்கராசுவின் மனம். ''அப்படியா அவ வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆனா, பார்க்கலே. நீ பாத்திட்டியா! எப்படி இருக்கிறா!''

''அவளுக்கென்ன? முன்னாலே ராணி மாதிரி இருந்தாள்னா, இப்போ மகாராணி மாதிரி நடந்துக்கிறா. தோரணைக்கு ஒண்ணும் குறைவில்லே, புருஷன்காரன் பணம் நிறையவே சம்பாதிக்கிறான்னு தெரியுது. பட்டுகளுக்கும் நகைகளுக்கும் குறைச்சல் இல்லே...''

''இருக்கலாம். சந்தோஷமா இருக்கிறாளாமா?'' என்று தங்கராசு கேட்டான்.

''வசதிகளோடு வாழையிலே,தேவையானது எல்லாம் கிடைக்கையிலே, கையிலே ரொக்கப் பணம் வச்சுக் குலுக்க முடிகையிலே சந்தோஷம் இல்லாமலா போயிடும்? சந்தோஷமாத்தான் இருப்பா!''

''அப்படி இல்லே முத்துமாலை.! சந்தோஷங்கிறது இதுக்கெல்லாம் அப்பாற்பட்டதுன்னு உனக்குத் தெரியாதா என்ன? இதெல்லாம் இருந்தும் பலபேரு சந்தோஷமா இருக்க முடிகிறது இல்லே, இதெல்லாம்

எதுவும் இல்லாமலிருந்தும் கூட, சில பேரு எப்பவும் சந்தோஷமா இருக்கிறாங்க, இல்லையா?''

''அப்போ திரிபுரம் பணம், பவிசு, பகட்டுகளோடு வாழ்ந்தாலும் உண்மையிலே சந்தோஷமாக இல்லேன்னா சொல்றே?'' என்று ஆச்சர்யத்தோடு கேட்டான் முத்து மாலை.

''அப்படித்தான் தோணுது. அவளுக்கு ஏதோ மனக் குறை இருக்கத்தான்வேண்டும். தன்னுடைய குறைகளை, கவலைகளை, பிரச்னைகளை யாரிடமும் சொல்ல முடியாமல், தனக்குள்ளேயே எண்ணி எண்ணி குமுறிக் குமைந்து, குமைந்து அவளுக்கு நரம்புத்தளர்ச்சி நோயே வந்திருக்கு. ஹிஸ்டீரியா அடிக்கடி தலைகாட்டுதாம். மன சின் வறட்சியை, ஏமாற்றத்தை மூடி மறைக்கத்தான் அவள் பட்டும் பகட்டுமா, சந்தோஷமா இருப்பது மாதிரியான மேல்மினுக்கோடு வெளிச்சமிட்டுத் திரி கிறான்னு எண்ண வேண்டியிருக்கு!''

முத்துமாலை யோசனையில் ஈடுபட்டான்.

''அவளுக்கு என்ன குறை இருக்கப் போகுது தங்க ராசு?'' என்று வியப்பாகக் கேட்டான் முத்துமாலை.

''புருஷனைப் பற்றியதுதான். அவன் என்ன பண்ணி, எப்படிப்பணம் சேர்க்கிறானோ? இவளை எப்படி நடத்து கிறானோ? பணம் கொடுத்திட்டாப் போதுமா? உண்மையான அன்பும் ஆசையும் காட்ட வேண்டாமா? எங்கெங்கோ போறான் வாறான். வேறே பொம்பளைக உறவு இருக்கும். எத்தனையோ இருக்கலாம். இதை எல் லாம் திரிபுரம் வெளியே சொல்றது இல்லை!''

''ஒகோ! இப்படி ஒரு நிலைமை இருக்குதா!''

''இந்த ஊருக்குஅவள் வரணும்னு ஆசைப்பட்டாலும் அவன் அவளை அனுப்புறதில்லே. அந்தப் பட்டிகாட்டுக்கு

என்ன போக்கு என்று அடக்கி விடுகிறான். இங்கே இருக்கிற வீட்டையும் நிலத்தையும் வித்துப் பணமாக்கிக் கிட்டு வான்னு சொல்லித்தான் இப்போ அவன் அவளை அனுப்பியிருக்கான். நான் உசிரோடு இருக்கிற வரை எது ஒண்ணையும் பேச முடியாது. நான் கண்ணை மூடின பிற்பாடு என்ன வேண்டுமானாலும் பண்ணிட்டுப் போன்னு திரிபுரத்தின் அம்மா கண்டிப்பாச் சொல் லிட்டா. அவ என் அம்மாவிடம் சொல்லித்தான் இவ் வளவு விஷயமும் எனக்குத் தெரியும்'' என்று தங்கராசு விவரித்தான்.

''மெட்ராசிலே வீடு வாங்கப் போறதாச் சொன்னா. அங்கேயே வசிக்கப் போறோம். இந்த ஊரு எங்களுக்குப் பிடிக்கலேன்னு சொன்னா...''

''இங்கே உள்ள வீட்டையும் நிலத்தையும் வித்து அந்தப் பணத்தை வரப் பற்றணும்கிற நெனைப்பிலே தான், மெட்ராசிலே வீடு வாங்கிப் போடுவோம்னு அவன் சொல்லியிருப்பான். பணம் கிடைச்சதும் அவன் என்ன பண்ணுவானோ! அவன் என்ன பிசினஸ் பண் றான்னு யாருக்குத் தெரியுது? சரியான ஃப்ராடுப் பேர் வழியா இருந்தாலும் இருப்பான்''

''இருப்பான் இருப்பான்!'' என்றான் முத்துமாலை. ''எவனும் எப்படியும் இருந்துட்டுப் போறான். நம்ம பாதையிலே குறுக்கிடாமல் இருந்தால் சரிதான்'' என்றும் கூறினான். பிறகு போனான்.

அதன் பிறகு வெகுநேரம் வரையில் முத்து மாலைக்கு திரிபுரசுந்தரியின் நினைப்பே உள்ளத்தை அலைக்கழித்தது.

—அப்படியானால் அவள் சந்தோஷமாக இல்லையா? அவள் புருஷன் குணங் கெட்ட குப்பானாக இருப்பான்

போலிருக்கு. அவள் பேச்சில் இருந்தே அது ஒரு மாதிரி விளங்கியதே!

அவள் ஊரோடு இருந்திருந்தால், அவன் ஆசைப் பட்டது போல் அவனையே கல்யாணம் செய்து கொண் டிருந்தால், திரிபுரத்தின் வாழ்க்கை சந்தோஷம் நிறைந் ததாக இருக்குமா என்றொரு எண்ணம் அவன் உள்ளத்தில் தெரித்தது.

அப்பவும் அவளுக்குச் சந்தோஷம் கிட்டியிருக்காது என்று சொல்லணும். நானும் ஒரு வகையில்—வேறொரு தினுசில் குணம் கெட்ட குப்பானாகத்தானே இருக்கி றேன்! அவளுக்கு இப்போதாவது பட்டுக்கும் நகை களுக்கும் ருசிருசியான சாப்பாட்டுக்கும் வழி கிடைத் திருக்கிறது. அந்த விதத்தில் அவளுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற் பட்டு வருகிறது. என்னோடு அவளுடைய வாழ்க்கை இணைந்திருக்குமானால், இந்தவகை திருப்தியும் அவ ளுக்கு ஏற்பட்டிருக்காது.

முத்துமாலை சிரித்துக் கொண்டான்,

—திரிபுரத்தின் மன நிலையும் எளிதில் திருப்தி காண முடியாத ஒன்றுதான். அவள் எனக்கு மனைவியாக வந்திருந்தால், தான் திருப்தியடையாமல் போவதுடன், சதா தொண தொணத்தும் புழுபுழுத்தும் எனது நிம்மதி யையும் கெடுத்துப் போடுவாள். அப்பவும் அவளுக்கு மனநோய் வராமல் போகாது. உள்ளத்துநோயுடன் உடல் நோயும் வந்து சேரும். அவளே எனக்கு ஒரு நோய் ஆகிப் போவாள். மனைவி என்பவள் ஒருவனின் வாழ்க்கையை அரிச்சு பொக்காகப் போகும்படி பண்ணுகிற ஒரு நோய் தான்; தீராத நோய்தான். நல்லவேளை. நான் தப்பிச்சேன்...

இந்த நினைப்பு அவனுக்குச் சிரிப்பு உண்டாக்கியது. பலமாக சத்தம் போட்டுச் சிரித்தான் முத்துமாலை.

இரவில் அது மூலைக்கு மூலை இடியின் உறுமல் மாதிரிப் புரண்டு ஒலித்தது.

வீட்டுக்குள் தூக்கம் பிடிக்காமல் புரண்டு படுத்த தங்கராசு நினைத்துக் கொண்டான். 'முத்துமாலை புதுசா என்ன ஹ்யூமரைக் கண்டு கொண்டானோ தெரியலே, இப்படி ரசித்துச் சிரிப்பதற்கு. அவன் விசித்திர மான ஆசாமியாத்தான் இருக்கான்!'

அவன் அம்மா "எதுக்குத்தான் கரிமுடிவான் இந்தப் போக்குப் போறானோ! அவனுக்குப் பைத்தியம்தான் பிடிக்கப் போகுது கூடிய சீக்கிரம்!" என்று முணு முணுத்தாள்.

## 12

அம்மன் கோயில் கொடை நடந்து முடிந்து மூன்று நாட்கள் ஆகியிருந்தன.

கோயிலின் முன்னே போடப்பட்டிருந்த பெரிய கொட்டகைப் பந்தல் இன்னும் பிரிக்கப்படவில்லை. சிரத்தையோடு சிங்கார வேலைப்பாடுகள் செய்யப் பெற்றிருந்த அலங்காரப் பந்தல், தட்டு தட்டாக (படிப்படியாக) அடுக்கி, நடுவில் ஒரு "தெப்பக்குளம்" (சதுர அமைப்பு) தென் இரு பக்கத்திலும் "கிணறுகள்" (வட்ட அமைப்புகள்) கொண்டு, பார்ப்பதற்கு வெகு அழகானது.

ஒரு வாரம் கோயில் முன்னால் அழகுப் பந்தல் நிற்கட்டுமே என்று விட்டு வைத்திருந்தான் பந்தல்காரன்.

உடனடியாக வேறு இடத்தில் பந்தல் போட வேண்டிய அவசியமும் இல்லை அவனுக்கு. அதனால், சாவகாச மாகப் பிரிக்கலாமே என்று எண்ணியிருந்தான்.

கோயில் மீண்டும், பக்தர்களின் வருகை இல்லாமல் வெறிச்சிட்டுத் தோன்றலாயிற்று. ராத்திரி வேளையில் தான் முத்துமாலையும் அவனுடைய நண்பர்களும் அங்கே கூடுவார்கள். பகலில் ஆள் நடமாட்டம் இராது.

பதினோரு மணி சுமாருக்கு பூசாரி வருவான். கதவைத் திறப்பான். ''நெவித்தியம்''(நைவேத்தியம்) என்று ஏதோ ஆக்குவான். அப்போது மடப்பள்ளியில் புகை வரும். கிணற்றில் தண்ணீர் எடுத்து, அம்மன் சிலை, இதர சில்லறைத் தேவதைகளின் சிலைகள், பலிபீடம் எல்லாவற்றையும் குளிப்பாட்டுவான். பூமாலைகள் சாத்துவான்.

காக்கைகள் வந்து அருகில் உள்ள வேப்பமரக் கிளைகளில் பொறுமையாக உட்கார்ந்திருக்கும்.

பூசாரி பலி பீடத்தில் சிறிது சொற்றை வைத்து, நீர் தெளித்து ''நெவித்தியம் பண்ணி'' விட்டு, அந்தச் சோற்றைச் சிதறிப் போடுவான். அதைத் தின்பதற்குக் காக்கைகள் பாயும். இந்தப் பரபரப்பு தவிர வேறு எந்த விதமான பரபரப்பும் இராது அங்கே, சாதாரண நாட்களில்.

செவ்வாய்க்கிழமை என்றால், ஒரு சில பெண்கள் தலை காட்டுவார்கள். கோயில் திறந்திருந்தால் உள்ளே போய்க் கும்பிடுவார்கள். இல்லாவிடில், பிரகாரத்தைச் சுற்றி வந்து, அடைத்த கதவின் முன் நின்று அம்மனை நினைத்துக் கும்பிட்டு விட்டுப் போவார்கள்.

இதெல்லாமே பன்னிரண்டு மணிக்குள் முடிந்து போகும். நடுப்பகலுக்கு மேலே அந்தக் கோயிலின் பக்கம் யாருமே தலை காட்ட மாட்டார்கள்.

அது போன்ற சமயத்தில் தான் அந்த நிகழ்ச்சி நடந்தது. பிற்பகல் இரண்டரை மூன்று மணி அளவுக்கு.

பந்தல் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. தற் செயலாகத் தூரத்திலிருந்து அதைப் பார்க்க நேர்ந்த ஒருவன் 'தீ தீ' என்று கூப்பாடு போட்டான். 'அம்மன் கோயில்லே தீ' என்று கத்தினான்.

அவனுக்குச் சிலர் துணை சேர்ந்தார்கள். 'தீ தீ' என்று கூவிக் கொண்டு கோயில் பக்கம் ஓடினார்கள். அந்தக் கூச்சலும் திமு திமு ஓட்டமும் மற்றும் பலரைக் கவர்ந்திழுக்க, பலரும் விரைந்தார்கள். பெரும் கூட்டம் சேர்ந்து விட்டது.

பந்தல் முற்றிலும் எரிந்து, மூங்கில்கள் வெடித்துச் சிதறுவதை வேடிக்கை பார்க்கத்தான் முடிந்தது அவர் களால். அங்கே தண்ணீர் வசதி எதுவுமில்லை, மொண்டு வீசித் தீயை அணைப்பதற்கு. மேலும் நன்கு காய்ந்த பிரப்பம் பாயும் மூங்கிலும். வேகமாகத் தீ பரவிப் படர்ந்து சாம்பலாக்கி விட்டது. அரை மணி நேரத்துக் குள் எல்லாம் முடிந்து போயிற்று.

தீ எப்படிப் பிடித்தது? யாராவது வைத்திருப்பார் களா? யார் பந்தலில் தீ வைத்திருக்கக கூடும்? இப்படி ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டார்கள். விளக்கம் தான் கிடைக்கவில்லை.

இவ்வளவுக்கும் முத்துமாலை வீட்டில் படுத்து சுக மாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அம்மன் கோயில் பந்தல், தீப்பிடித்து எரிகிறது என்ற தகவல் காதில் விழுந் ததுமே, தனபாக்கியம் அவனை எழுப்பினாள்.

பகலில் உறக்கத்தின்போது முத்துமாலையை விழிப் புற வைப்பது அரும் பெரும் காரியமாகும். அவன் சரி யான கும்பகர்ண வாரிசு இவ்விஷயத்தில்.

ரொம்ப நேரம் உருட்டிப் புரட்டி, தட்டி சத்தம் போட்டு எழுப்பிய பிறகு அவனுக்கு விழிப்புக் கண்டது. "ஏன் இப்ப காட்டுக் கூப்பாடு போட்டு என்னை எழுப்புதே? வீடா தீப்புடிச்சிக்கிட்டுது?" என்று எரிந்து விழுந்தான்.

அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள்: "வீடு பத்தி எரியலே. அம்மன் கோயில் பந்தல்தான் எரியுது!"

"என்னது பந்தல்லே, தீயா?" என்று பதறி எழுந்தான் முத்துமாலை. "நேத்தே பந்தலைப் பிரிக்கும் படி சொன்னேன். ரெண்டு நாள் கழிச்சுப் பிரிக்கேனேன்னு சொன்னான். சவத்துப் பயலுக்குப் பொறந்த பய எவன் அதிலே தீவெச்சான்?" என்று முனகிக்கொண்டு வேகமாக நடந்தான்.

எரிந்து கருகிய சாம்பலையும், புகையும் சில மூங்கில் கழிகளையும் தான் அவன் கண்டான். கும்பலையும் பார்த்தான். என்ன செய்வது என்று புரியாமல் சும்மா சுற்றி வந்தான்.

"என்ன முத்துமாலை இப்படி நடந்து போச்சு? தீ எப்படிப் பிடிச்சிருக்கும்? எவன் வச்சிருப்பான்?" துக்கம் விசாரிப்பது போல் ஆளுக்கு ஆள் அவனிடம் கேட்டார்கள்.

அவனுக்கு எரிச்சல் வந்தது. "எனக்கென்ன தெரியும்! நானும் உங்களை மாதிரித்தான். எவன் தீ வச்சானோ? அவன் விளங்கமாட்டான்!" தனது ஏலாத்தனத்தை எரிச்சலோடு சாபம் கொடுத்து வெளிக்காட்டிக் கொண்டான்.

ஊர்காரர்கள் எதுவும் செய்ய இயலவில்லை. என்றாலும், எல்லோராலும் தாராளமாகப் பேச முடிந்தது. முன்பு எப்பவோ எங்கெங்கோ பிடித்து எரிந்த தீ விஷயங்களை சுவாரஸ்யமாக விவரித்தார்கள்.

—பாளைங்கோட்டையிலே தசரா சமயம், ஒரு தடவை ஒரு அம்மன் கோயில் முன்னாலே இப்படித் தான் பெரிய கொட்டகைப் பந்தல் மத்தியானம் பன்னிரண்டரை மணிக்கு, தீ புடிச்சு எரிஞ்சது. எப்படிப் புடிச்சுதுன்னு கடைசிவரை கண்டு பிடிக்கவே முடியலே, பள்ளிக் கூடம் விட்டு, பையன்கள் சாப்பாட்டுக்கு வீடு திரும்புகிற நேரம். அதனாலே படிக்கிற பையன்கள் கூட்டம் நிறையவே சேர்ந்திட்டது. திடீர்னு தீ எப்படிப் புடிச்சுருக்க முடியும்னு ஆராச்சியிலே இறங்கி விட்டானுக. படிக்கிறவங்க இல்லையா? ஆகவே புத்தி வேலை செய்தது பாஸ்பரஸ் என்பதை கொண்டாந்து யாரோ பந்தலில் போட்டுவிட்டுப் போயிருப்பான்; ஈரம் உலர்ந்ததும் அது தானாகவே குபீர்னு பற்றிக் கொள்ளும்; அது தான் பந்தலையும் தீப்புடிக்கவச்சிருக்கும்னு சொன்னாக. பாஸ்பரஸ் என்கிறதை எப்பவும் தண்ணீரிலே தான் போட்டு வச்சிருப்பாங்களாம்.

''அது மாதிரி இங்கேயும் பாஸ்பரஸ் வந்து வேலை பண்ணியிருக்கும்கிறீரா!'' என்று கிண்டலாகச் சொன்னான் முத்துமாலை.

''இல்லே. முன்னாலே நடந்த விஷயம் இப்போ நினைப்பிலே வந்து', சொன்னேன். பாஸ்பரஸ் என்கிற சமாச்சாரம் பற்றி எத்தனை பேருக்குத் தெரியும்? அதைச் சுலபமா வாங்கிவர முடியுமா? அப்படி அதை வாங்கி, சும்மா விளையாட்டா பந்தலிலே ஏன் போடணும்? இதை எல்லாம் பத்திப் பையன்கள் எண்ணிப்பார்க்கலியேங்கிறதுக்காகச் சொன்னனேன்'' என்றார் அதைச் சொன்ன ஆசாமி.

''எல்லாரும் பேசத்தான் ஆசைப்படறாங்க. விஷயம் இருக்கோ இல்லையோ, சொல்கிற விஷயத்துக்கும் சந்தர்ப்பங்களுக்கும் பொருத்தம் இருக்குதோ இல்லையோ, எல்லாம் தெரிஞ்வங்க மாதிரி எதையாவது சொல்லி

வைக்க வேண்டியது. இது தான் ரொம்பப் பேருடைய போக்கு ஆக இருக்கு!'' என்று கூறிவிட்டு முத்துமாலை வேறுபக்கம் நகர்ந்தான்.

அங்கே இது அவன் காதில் விழுந்தது.

''பக்கத்து ஊர் கோயில் தேரு தீப்புடிச்சு எரிஞ்சது இதேமாதிரித்தான். ராத்திரி தீ நல்லாப் பத்திக்கிட்டுது. ஆட்கள் கூடி, தண்ணியை அள்ளி அள்ளிக் கொட்டினாங்க. ஒருவன் சைக்கிளில் ஓடி, டவுன் தீயணைக்கும் மோட்டாருக்குச் சொல்லி, அதுவும் வந்தது. ரொம்ப நேரத்துக்குப் பிறகு தீயை அணைச்சாச்சுன்னு சொல்லி எல்லாரும் போனாங்க. ஆனா தீக்கங்குக உள்ளே சந்து பொந்துகளிலே இருந்திருக்கு. தேரு வேலைப்பாடு அப்படி. குடைஞ்சு குடைஞ்சு, கடைஞ்சு திறையிட்டு, எப்படி எப்படியோ செஞ்சிருக்காணுக. சிரமமான வேலைப்பாடு நல்ல வைரம் பாய்ந்த மரக்கட்டை. உள்ளூற கங்கு இருந்து கனிஞ்சு திரும்பவும் தீ எவ்வி எவ்வி மேலே வந்திட்டுது. தேரு பூரா குளோஸ். ஒரு ராத்திரியும், பகல்லே பாதி நேரமும் எரிஞ்சு கம்ப்ளீட்டா சாம்பலாகிப் போச்சு. தீ எப்பிடிப் புடிச்சுது, தேருலே யாரு தீ வச்சிருப்பாங்கன்னு விசாரிச்சாங்க. பிறகு விசயம் எப்படி முடிஞ்சுது தெரியுமா? யாரோ சின்னப்பையனுக தேருக்குள்ளே தேன்கூடு இருந்ததை பார்த்தாங்களாம். தேன் எடுக்க ஆசைப்பட்டாங்க. அதுக்காக புகை மூட்ட விரும்பி, ஓலைகளையும் மட்டைகளையும் கொளுத்தி தேரு ஓட்டைக்குள்ளே போட்டிருக்காங்க. தேன் கூட்டை எடுத்த பிறகு, தீ அணைஞ்சிட்டுதுன்னு எண்ணிக்கிட்டுப் போயிட்டானுக. ஆனா நெருப்பு உள்ளே இருந்திருக்கு. அது கனிஞ்சு எரிஞ்சு, தேருலேயும் பத்திக்கிட்டுது. அருமையான மரக்கட்டை பாருங்க. நல்லா நின்னு எரிஞ்சிருக்கும்.

தீ, படிக்க எவ்வளவோ காரணங்க, எவனாவது பீடி பிடிச்சிட்டு, அதை அணைக்காம வீசி எறிஞ்சிருக்கலாம்,

அது பந்தலில் விழுந்துபத்திக் கொண்டிருக்கலாம்''என்று அபிப்பிராயப்பட்டார் ஒருவர்.

"நீ என்னடே நெனைக்கிறே முத்துமாலை?'' என்று ஒருவர் அவனிடம் கேட்டார்.

''எனக்கு எதுவுமே தோணலே அண்ணாச்சி, ஆனா இது ஊருக்கு நல்லதில்லேன்னு படுது. கொடை கொடுத்த நாலாம் நாள் பந்தல் பத்தி எரியணும்னு சொன்னா தீ தானாப் பிடிக்காது. எவனாவது வச்சுத்தான் பிடிச்சிருக்கணும். எவன் எதுக்காக வச்சிருப்பான்கிறது புரியலே. விளையாட்டா சின்னப்பயலுக வச்சிருந்தாலும் சரி, விபத்தாக கட்டை பீடி விழுந்து தீப்புடிச்சிருந்தாலும் சரி. வினையாக எவனும் திட்டமிட்டுச் செஞ்சிருந்தாலும்.சரி, இது நல்லதுக்கில்லே. அப்படிச் செஞ்சுருப்பது யாருன்னு நம்மாலே கண்டுபிடிக்க முடியலியே, அது தான் எனக்கு வருத்தமா இருக்கு. குத்தம் செஞ்சிட்டு தண்டனை பெறாமல் தப்பிக்க முடிஞ்சிருது பாருங்க. அந்த அநியாயத்தை என்னாலே சகிக்க முடியலே!'' முத்துமாலை இதைக் கூறிவிட்டு தலைகுனிந்து நடந்தான்.

## 13

வழக்கம் போல் முத்துமாலை ராத்திரி நேரங்களில் குடித்தான்; தெருக்களைச் சுற்றினான், அடிக்கடி சீட்டி அடித்தான். என்றாலும் அவன் உள்ளத்தின் ஆழத்திலே எதுவோ இடிந்து விழுந்துகொண்டிருந்தது போன்ற உணர்வு அவனுக்கு ஓயாது இருந்தது. வழக்கமான உற்சாக வெறி அவனைவிட்டு விலகிச் செல்வது போல்

அவனுக்கே பட்டது. அர்த்தம் புரிந்து கொள்ளமுடியாத ஒரு கலக்கம் அவனுள் சதா அரிக்கலாயிற்று.

கொடைக்குப் பிறகு திரிபுரசுந்தரியைக் கண்டு பேச நேர்ந்ததும், அவளுடைய வாழ்வின் நிலைமையை அறிந்து கொள்ள நேர்ந்ததும், முத்துமாலையின் உள்ளத்தில் அதிர்வுகளை உண்டாக்கியிருந்தன. அத்துடன் அம்மன் கோயில் பந்தல் எரிந்து சாம்பலாகிப் போனதும், அப்படிச் செய்தவனைக் கண்டுபிடிக்க இயலாமலிருப்பதும் அவனை வெகுவாகப் பாதித்திருந்தன. "சே, என்ன வாழ்க்கை! என்ன மனுஷங்க" என்று அவன் அடிக்கடி கசப்போடு கூறிக் கொண்டான்.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு அவனுடைய மனக் கசப்பை அதிகரிக்கச் செய்யும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

அவனும் அவனுடைய சகாக்களும் அம்மன் கோயிலில் உட்கார்ந்து சீட்டாடிக்கொண்டிருந்தார்கள். இரவு பதினோரு மணிக்கு மேலிருக்கும். ஒருவன் ஓடிவந்தான்.

"முத்துமாலை, நீங்கள்ளாம் உடனே புறப்பட்டு பெரிய கோயிலுக்கு வரணும். சீக்கிரம்" என்று அவசரப் படுத்தினான்.

"என்னடே, என்ன விசயம்?"

"ரெண்டு பேரு காரிலே வந்து, கோயிலுக்குள்ள சின்ன வாசல் வழியாக நுழைஞ்சாங்க. விளக்கு எதுவும் வச்சுக்கிடலே. எனக்கு என்னமோ சந்தேகமா இருக்கு" என்று வந்தவன் அறிவித்தான்.

மற்ற அனைவரும் விருட்டென்று கிளம்பினார்கள். முத்துமாலை அரிவாளை எடுத்துக்கொண்டான். நண்பர்களிடமும் கத்தி, கைத்தடி, டார்ச் லைட் எல்லாம் இருந்தன.

வேகமாகப் போகிற போதே, வந்தவன் கூறிக் கொண்டு நடந்தான்: "அரை மணி நேரத்துக்கு முந்தி மேலத்தெரு வழியாக ஒரு காரு போச்சு.டாக்சி ஏதாவது இருக்கும். யாரு வீட்டுக்காவது ஆளுக வரும்னு நினைச்சேன். பத்து நிமிசத்துக்குப் பிறகு நான் வாய்க்கால் பக்கமா வந்தேன். காரு பெரிய கோயில் கிட்டே நின்னு கார் லைட்டை போட்டுப் பார்த்திட்டு அணைச்சிட்டாங்க. ரோடிலே வந்த போது கூட லைட்டுக எரியலே. நான் ஒரு மரத்து மறைவிலே நின்று பார்த்தேன். ரெண்டு பேரு மெதுவா உள்ளே போனாங்க, சின்னக் கதவு இருக்குல்ல, அது வழியே..."

"சரி சரி, அவங்க யாருன்னு தான் பார்த்திடலாமே" என்று முத்துமாலையும் மற்றவர்களும் வெகு வேகமாக நடந்தார்கள்.

இருட்டுக்காலம் தான். ஆயினும் மங்கிய ஒரு வெளிச்சம் நிலவியது.

"எவனாக இருந்தாலும் சரி,ராத்திரி இருட்டுக்குள்ளே திருட்டுத்தனமா கோயிலிலே புகுந்திருப்பவங்க நல்ல எண்ணத்தோடு நுழைஞ்சிருக்க மாட்டாங்க. அதனாலே முதல்லே நாம செய்ய வேண்டியது, கார் சக்கரங்களில் காற்றைத் திறந்து விட்டிரணும். வெளியே வந்த உடனே காரிலே ஏறி ஓடிவிடாதபடி அது தடுக்கும்" என்று முத்துமாலை வழி வகுத்தான்.

கோயில், ஊரை விட்டுச் சிறிது தூரம் தள்ளி ஒரு தோப்பினுள் ஒதுங்கியிருந்தது. கோயில்பக்கம் நடப்பது ஊருக்குள் தெரியாது. அதிலும், இருட்டு. ஊரில் எல்லா வீடுகளிலும் ஏழுமணிக்குள்ளேயே கதவுகள் அடைக்கப்பட்டு விடுவதனால், தெருக்கள் வெறிச்சிட்டே கிடந்தன.

அவர்கள் சீக்கிரமே கோயிலை அடைந்தார்கள்.

ஆளுக்கு ஒரு சக்கரமாகச் சீண்டி, காற்றைத்திறந்து விட்டார்கள்.

"அவனுக திட்டிவாசல் வழியாத்தான் வருவானுக. வேறுவழி கிடையாது. மதில் சுவரு ரொம்பஉசரம். ஏறிக் குதிக்க முடியாது. மேலும், அவனுகளுக்கு சந்தேகம் எதுவும் ஏற்பட்டிருக்காது. எவன் இந்த வேளையிலே இங்கே வரப்போறான்கிற தைரியத்தோடுதான் வேலை பண்ணுவாங்க. நாம ரொம்ப ரெடியா நிற்கணும்" என்று முத்துமாலை மெதுவான குரலில் பேசினான். யார் எந்த இடத்தில் நிற்கணும், என்ன செய்ய வேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொடுத்தான்.

நேரம் மிக மிக மெதுவாக ஊர்வது போலிருந்தது. அவர்களுக்கு தனிமை, இருட்டு. சில பூச்சிகள் ரீங்கரித்த வண்ணம் இருந்தன. சிறிது தொலைவில் ஒரு தவளை சாவுக்குரல் இழுத்து இரவின் அமைதியைக் கெடுத்தது. பாம்பின் வாயில் வசமாகச் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும் அது.

நேரம் கடந்தது. எவ்வளவு நேரம் ஓடியிருக்கும் என்று அவர்களுக்குத் தெரியாது.

கோயிலுக்குள் ஓசைகள் எழுந்தன, திட்டி வாசல் திறந்து கொண்டது.

முதலில் ஒருவன் வெளியே வந்தான். உள்ளேயிருந்து ஒருவன் கனமான பொருளை நீட்ட, இவன் கஷ்டத்தோடு அதை வாங்கிக் கீழே வைத்தான். பிறகு மற்றொன்று தரப்பட்டது. அதையும் பெற்றுக்கொண்டான். இப்படி ஐந்து தடவை கொடுக்கல் வாங்கல் நடந்தது. முதல் இரண்டும் சற்றுப் பளுவானவை, மற்ற மூன்றும் அவ்வளவாகக் கனம் இல்லாதவை என்பதை அவர்கள் கொடுத்து வாங்கிக் குனிந்து வைத்த தன்மையிலிருந்தே

பதுங்கியிருந்தவர்கள் புரிந்து கொண்டார்கள். அவை சிலைகள் என்றும் தெரிந்து கொண்டார்கள்.

முத்துமாலைக்கு ஆத்திரம் பொங்கியது. சிலைகளைத் திருடிச்செல்லும் முயற்சியா? அவன் ரத்தம் கொதித்தது. இருப்பினும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். மொத்தம் எத்தனை பேர் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா?

உள்ளேயிருந்து இரண்டு பேர் வந்தார்கள். ஒருவன் காரில் வந்த கூட்டாளியாக இருக்க வேண்டும். இன்னொருவன்?

அவன் திட்டி வாசலின் கதவை இழுத்துச் சாத்தி, கொக்கி போன்ற வளைந்த கம்பி ஒன்றை உபயோகித்து அதைப் பூட்டினான்.

இவன் கோயில் தொழிலாளி என்று ஊர்க்காரகளுக்குப் புரிந்தது. பணத்துக்கு ஆசைப்பட்டு இந்த வேலையில் அவனும் சேர்ந்திருக்கிறான்.

முத்துமாலை 'ஹ்விட்டோ ஹ்வீட்' என்று சீட்டி அடித்தான்.

தொழிலாளி திடுக்கிட்டு அங்குமிங்கும் பார்த்தான். மற்றவர்களும் நிமிர்ந்து நோக்கினார்கள்.

முத்துமாலையும் நண்பர்களும் வேகமாகச் செயல்பட்டார்கள். பாய்ந்து, மூன்று பேரையும் லபக்கென்று பிடித்துக்கொண்டார்கள்.

''கோயில் சிலையைத் திருடிப் போகவா வந்தீங்க, அயோக்கிய ராஸ்கல்களா'' என்று முத்துமாலை கத்தினான். அவன் பிடியில் சிக்கியிருந்த நபரின் கழுத்தில் ஒரு பேயறை; முதுகில் 'கும்-கும்மா' குத்துக்கள் தயக்கமில்லாமல் கொடுத்தான்.

மற்றவர்களுக்கும் சரியானபடி கிடைத்தது.

"டார்ச் லைட்டை அடியப்பா, இவனுக மூஞ்சி அழகைப் பார்க்கலாம்" என்று முத்துமாலை சொன்னான்.

திருட வந்தவர்கள் திமிறி விடுபட முயன்றது பலிக்கவில்லை. அவர்கள் தப்புவதற்கு முயன்றபோதெல்லாம் அடியும் குத்தும்தான் கிடைத்தன.

லைட்டின் பிரகாசமான ஒளி அவர்கள் முகத்தைத் தடவியது. அவர்களுடைய கண்கள் கூசின.

"எலே, மாடசாமி, உனக்கு ஏமிலே இந்தப் புத்தி? நம்ம ஊர் கோயில் சிலைகளைக் களவாடிக்கிட்டுப் போக நீயே துணை வந்தியா?" என்று சீறினான் முத்துமாலை.

மற்றவர்களின் கைகள் மாடசாமியை விசாரித்தன.

"ஏ, இவங்க வேட்டிகளை அவிழ்த்துஇவங்க கைகளை இறுக்கிக் கட்டுங்க" என்று உத்தரவிட்டான் முத்துமாலை.

காரில் வந்தவர்கள் நாகரிகமானவர்கள். ஒருவன் கோட்டு அணிந்திருந்தான். இருந்தாலும், வேட்டிதான் கட்டியிருந்தான். இன்னொருவன் ஸ்லாக் ஷர்ட் போட்டிருந்தான். மாடசாமி வெறும் உடலில். துண்டைத் தலைப்பா கட்டியிருந்தான், இடுப்பு வேட்டியை தார்ப் பாய்ச்சிக் கட்டியிருந்தான்.

அவர்கள் கைகள் நன்கு இறுக்கிக் கட்டப்பட்டன.

"ஐயாமார்களே, நீங்க வாலாட்ட முடியாது. ஏதாவது இசகுபிசகா நடக்க முயன்றா, இந்தா பார்த்துக்கிடுங்க" என்று தனது சுடலைமாடன் அரிவாளைமுன்னே தூக்கிக் காட்டினான் முத்துமாலை.

"சுப்பய்யா, நீ ஓடிப்போயி, ஊரிலே எல்லா வீட்டுக் கதவையும் தட்டி விசயத்தைச் சொல்லு. கோயில்லே

திருட்டு நடந்திருக்கு, சிலைகளைத் திருட வந்து, திருடியும் போட்டாங்க, அவங்களைப் புடிச்சுவச்சிருக்கோம்னு சொல்லு. பெரியவங்க எல்லாம் இங்கே உடனேவரும்படி சொல்லு'' என்றான்.

''அவன் போகவேண்டாம். சிலையை எடுத்துப் போக வந்தது தப்புதான். நீங்கதான் புடிச்சிட்டீங்களே? உங்க சிலைகள் உங்களுக்குக் கிடைச்சுப்போச்சு. வேணும்னா கொஞ்சம் ரூபா தந்திடுறேன், எங்களைப் போகவிடுங்க'' என்றான் 'கோட்டுவாலா'.

''அது எப்படி முடியும்?''

''முத்துமாலை இவரு நம்ம ஊரு மாப்பிள்ளை. அதுதான் ஊராருக்கு விசயம் தெரியவேண்டாம்னு பாக்காரு.'' என்று ஒரு தகவலை அறிவித்தான். முதலாவதாக அவர்களைத் தேடி வந்து சேதி சொன்னவன்.

''யாரு?''

''நம்ம ஊரு பூமியா பிள்ளைக்கு மருமகன். அவரு மக திரிபுரத்தின் மாப்பிள்ளை...''

''என்னது?'' என்று அதிர்ந்தான் முத்துமாலை. ''முருகா, இவன் மூஞ்சியிலே லைட்டை அடி!'' என்றான்.

டார்ச் ஒளி அந்த ஆளின் முகத்தைப் பளிச்சென்று எடுத்துக் காட்டியது. பூமியை நோக்கித் தாழ்ந்த அந்த மூஞ்சியிலே காறித்துப்ப வேண்டும்போல் வந்தது முத்துமாலைக்கு. தரையில்தான் துப்பினான்.

''சுப்பய்யா, ஓடு எல்லாவீட்டிலும் சொல்லு- பூமியா பிள்ளை மருமகன்... கந்தபிள்ளை, இவன் பேரு உமக்குத் தெரியுமா?''

''நாரம்புநாதன்...''

''வாரியக்கொண்டை! நாறும்பூநாதன்... பேருக்குக் குறைச்சல் இல்லே'' என்று எரிச்சலோடு முணுமுணுத்

தான் முத்துமாலை. தொடர்ந்தான்; "சுப்பய்யா, ஊர்ப் பெரியவங்ககிட்டே இதையும் சொல்லு. சீக்கிரம் போ... பூமியாபிள்ளை வீட்டிலும் தகவல் சொல்லிட்டு வா. ஓடு!"

சுப்பய்யா ஓடினான். முத்துமாலை அப்புறம் எதுவும் பேசவில்லை. திரிபுரத்தின் புருசனா இவன்? இவன் பணம் சம்பாதிக்கிறது இந்த வழியிலேதானா! சிலை திருடறது, கடத்தல் பண்றது... அயோக்கிய ராஸ்கல்...

அவன் மனம் புழுங்கிக் குமைந்தது.

சிறிது நேரத்திலேயே அந்த இடம் பரபரப்பின் களமாக மாறியது. ஒருவராய், பலராய், கும்பலாய் ஓடிவந்தார்கள். ஜனங்கள், விளக்குகள் எடுத்து வந்தார்கள். அந்த இடத்தின் அமைதி ஆரவாரத்தில் அமிழ்ந்து மறைந்தது.

வந்தவர்கள் அனைவரும் கட்டுண்டு, தலைகவிழ்ந்து. மண்மீது உட்கார்ந்திருந்த இரண்டு பேரையும், நின்ற மாடசாமியையும் பார்த்தார்கள். வாயில் வந்தபடி ஏசினார்கள், மாடசாமியை சிலர் அடிக்கவும் செய்தார்கள். சிலைகள், காட்சிப் பொருள்கள் போல், அவர்கள் பக்கத்தில் இருந்ததையும் கவனித்தார்கள்.

"கோயில் சிலைகளைத் திருட உங்களுக்கு எப்படித்தான் மனசு வந்ததோ? இப்படி எத்தனை ஊர் கோயில்களிலே திருடி இருக்கிறீங்களோ, பாவிகளா!" என்று கைகளை நதட்டி முறித்து அவர்களைப் பழித்தார்கள்.

பெரியவர்களும், சின்னவர்களுமாய், ஆண்களும் பெண்களுமாய், ஊரே அங்கே திரண்டு விட்டது.

முத்துமாலை நடந்ததைச் சொன்னான்.

"இவங்களை என்ன செய்யலாம்னு யோசனை சொல்லுங்க, கோயில் சிலைகளைத் திருடி வித்துப் பிழைக்கிற

துக்கென்றே ஒரு கும்பல் வேலை செய்யுது. அவங்களுக்கு அதிலே நல்ல பணமும் கிடைக்குது. இந்த ஆளும் அந்தக் கோஷ்டியிலே ஒருவன்னு தெரியுது. மாடசாமி இவங்க கையாள். இவங்க மூணு பேரையும் போலீசிலே ஒப்படைக்கிறதுதான் நல்லதுன்னு எனக்குப்படுது. இரண்டு பேரிலே இவன் பூமியாபிள்ளை மருமகனாம்...''

பெரியவர்கள் தலையாட்டினார்கள். 'ஆமா, 'உம் உம்' என்று ஒலிகுறிப்புகளும் தெறித்து விழுந்தன.

இந்தச் சமயத்தில் எதிர்பாராதது நடந்தது. திரிபுரம் மங்கையைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தாள். அவள் கூட மூத்த பெண்ணும் பையனும் மூச்சிறைக்க ஓடி வந்தார்கள்.

அவர்களுக்குக் கூட்டம் வழி விட்டது. அவள் கூட்டத்தின் நடுவில் வந்து நின்று எல்லோரையும் பார்த்தாள். தன் புருஷனையும் பார்த்தாள். ஊர்க்காரர்களைக் கும்பிட்டாள். ''உங்க எல்லாரையும் கும்பிடுறேன். இந்தப்பிள்ளைகள் முகத்தைப்பாத்து, இதுகளுக்காகவாவது, இதுகளோட அப்பாவை மன்னிச்சுருங்க...''

''அதெப்படி மன்னிக்க முடியும்?'' என்று வெடித்தான் முத்துமாலை. ''செய்த குத்தத்துக்கு தண்டனை வேண்டாமா?''

''அவங்களை முதல்லேயே அடிச்சிருப்பீங்க, அது மட்டுமில்லே. இந்த ஊர்க்காரங்க மத்தியிலே, இப்படிக் கையும் களவுமாய் பிடிபட்டு நிக்கிற அவமானமே அவங்களுக்கு ஒரு தண்டனைதான். இன்னும் போலீஸ்லே காட்டிக் குடுத்து, கேசு நடத்தி, ஜெயில் தண்டனை வேறே வாங்கிக் கொடுக்கணுமா? இந்தச்சின்னப்புள்ளைக தலைமேலே கெட்ட பேரும் சமூக தண்டனையும்சேராமக் காப்பாத்துங்க. உங்க காலிலே விழுந்து கெஞ்சிக் கேட்கிறேன்...''

திரிபுரம் முத்துமாலையின் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தாள். அழுதாள்.

அவனுக்கு மிகுந்த சங்கடமாகி விட்டது. அவளுக்காக இரக்கப்பட்டான். என்ன செய்வது? இவனை என்ன செய்வது? திகைத்துத் தடுமாறினான்.

சில பெரியவர்கள் மனமிரங்கினார்கள். போகுது, குத்தம் பெரிசுதான். இருந்தாலும், அவங்க முயற்சியிலே வெற்றி பெற விடாம நீங்க தடுத்திட்டீங்க, அது ரொம்பப் பெரிய விஷயம் இந்த பொண்ணு அழுறதைப் பாக்கையிலே மனசுக்குக் கஷ்டமாத்தான் இருக்கு. அவளுக்காகவும் இந்தச் சின்னப்புள்ளைகளுக்காகவும் அவனை மன்னிச்சுடுவோம். போலீசிலே ஒப்படைக்கவேண்டாம். கோயில் திருப்பணிச் செலவுக்காக இவங்க ஐநூறு ரூபா கொடுத்துடணும். மாடசாமி இனி இந்த ஊர்லே இருக்கப்படாது. அந்தஆளுக கூட வேணும்னாலும் போகட்டும் என்று தீர்ப்பாகச் சொன்னார்கள். "என்ன முத்துமாலை நீ என்ன சொல்றே?" என்று கேட்டார்கள்.

"உங்கள் விருப்பம்' என்றான் அவன்.

அவ்வாறே செயல்படுத்தப் பட்டது. நாறும்பூநாதன் கோட்டு பையிலிருந்த பர்ஸை எடுத்து ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளை உருவி அவர்களிடம் கொடுத்து விட்டான்.

தலை குனிந்தவனாய் காரை நோக்கிப் போனான். காரின் டயர்களில் காற்று இல்லை என்பதை அறிந்ததும், சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டான்.

பிறகு, அவனும் அவன் கூட்டாளியும் சேர்ந்து ஒவ்வொரு டயருக்கும்காற்றடித்ததையும், மவுனமாகக் காரில் ஏறி உட்கார்ந்து காரை ஸ்டார்ட் செய்து கொண்டு கிளம்பியதையும் எல்லா ஜனங்களும் வேடிக்கையாகப் பார்த்தார்கள்.

"என்னாங்க, வீட்டுக்கு வாங்களேன். விடிஞ்சதும் போகலாம்" என்று திரிபுரம் கூறியதை நாறும்பூ கவனிக்கவேயில்லை. மங்கை. "அப்பா, அப்பா, நான் கூட வரட்டுமா?" என்று பிரியமாய்க் கேட்டதும்அவன் செவிகளில் ஏறவில்லை.

"நாங்களும் உங்க கூட வாரோம்" என்றாள் திரிபுரம்.

அதற்குதான் அவன் வாய் திறந்தான். "வேண்டாம் லெட்டர் போடுவேன். அப்போ வந்தால் போதும்" என்றான். போய் விட்டான்.

இது பயமுறுத்தலா, பிரியத்தோடுசொன்னதா என்பது அவளுக்குப் புரியவில்லை; முத்துமாலைக்கும் விளங்கவில்லை.

அவன் திரிபுரத்துக்காக ரொம்பவும் வருத்தப்பட்டான். அவனால் வேறு என்ன செய்ய இயலும்?

## 14

முத்துமாலை உள்ளத்தினுள் ரொம்பவும் நொறுங்கிப் போனான். 'சீ, என்ன மனுசங்க, என்ன வாழ்க்கை' என்ற அலுப்புச்சொற்களை அடிக்கடி மனசிலும், வெளிப்படையாகவும் உச்சரித்தான்.

திரிபுரசுந்தரியின் இறந்த கால வாழ்க்கையும், நிகழ் காலமும் எப்படிப்பட்டதாக இருந்திருப்பினும், இனி அவளுடைய எதிர்காலம் ஒளி நிறைந்ததாக இருக்காது

என்று அவனுக்கு நிச்சயமாகத் தோன்றியது. அவள் புருஷன் அவளுடைய ஊரில் அவமானப்பட்டதற்காக அர்த்தமற்ற கோபமும் எரிச்சலும் கசப்பும் கொண்டு, அவளைப் பழிவாங்குவது போல் செயலாற்றுவான் என்றே அவன் மனசுக்குப்பட்டது. அவளுக்காக அவன் மிகுதியும் அனுதாபப்பட்டான்.

அந்த ஊர் அம்மன் கோயிலில் திருவிழாப் பந்தல் தீப் பற்றி எரிந்து சாம்பலாகி விட்டதும், அதைத் தொடர்ந்து பெரிய கோயிலில் சிலைகளைத் திருடும் முயற்சி நடைபெற்றதும் முத்துமாலையை வெகுவாகப் பாதித்தன. இது ஊருக்கு நல்லதில்லை, எல்லாம் கேடு காலத்துக்குத்தான் என்று அவன் மனம் குழம்பித் தவித்தது. அவனுக்கு எதிலுமே பிடிப்பில்லாமல் போய், அவனுள் ஒரு வெறுமை உணர்வு கப்பிக் கொண்டது. இவ்வளவு நிகழ்ச்சிகள் நடந்தபோதும் தங்கராசு ஊரில் இல்லை. மனைவியை அழைத்து வருவதற்காக வெளியூர் போயிருந்தான். ஊர் திரும்பியதும் அம்மா கைதையாகச் சொன்னாள். அடடா, நான் இல்லாமல் போயிட்டேனே என்று அவன் வருத்தப்பட்டான்.

அன்று ராத்திரி அவன் முத்துமாலையைச் சந்தித்தான். ''தூங்கி வழிகிற இந்த ஊரிலும் பரபரப்பான சம்பவங்கள் அவ்வப்போது நிகழ்ந்து கொண்டு தானிருக்குன்னு சொல்லு!'' என்று தமாஷ் பண்ண முயன்றான்.

ஆனால் முத்துமாலை உற்சாகமாக இல்லை. ''ப்சா. என்னத்துக்குத்தான் இப்படி எல்லாம் நடக்குதோ?'' என்றான். அதில் விரக்தியும் வேதனையும் கலந்திருந்தன.

''நாரம்புநாதன் இனிமேல் திரிபுரத்தை கூட்டிக்கிட மாட்டான். அவன் இஷ்டம் போல் வடக்கேயே தங்கி விடுவான்னு பொம்பிளைகளெல்லாம் பேசிக்கிடுதாளாம். அம்மா சொன்னா.'' என்று தங்கராசு கூறினான்.

''அந்த அயோக்கியன் அப்படியும் செய்வான், அதை நினைக்கையிலே தான் என் மனசு சங்கடப்படுது'' என்று முத்துமாலை வருத்தப்பட்டான்.

''அப்படி நடக்கணும்னு இருந்தா நடந்திட்டுப் போகுது! யாரு என்ன பண்ண முடியும்? எனக்குத் தெரிந்த ஒரு பெரியவர் அடிக்கடி சொல்லுவாரு—புருச னோடு வாழ முடியாம தன் வீட்டோடு வந்துவிட்ட மகளைப் பத்திப் பேசையிலே தான் சொல்லுவாரு. வீட்டிலே இருந்துட்டுப்போறா. சாப்பாட்டுக்கு தயக்க மில்லே. நிலம் விளைஞ்சு நெல்லு வரும். குடியிருக்க வீடு இருக்கு. செலவுக்குப் போதுமானபடி பணமும் இருக்கு. பின்னே என்ன? ஏன் வீணாக் கவலைப்படணும்? குமரி என்கிற குறை இல்லாதபடி கல்யாணம் நடந்தாச்சு. மலடு என்கிற வசை ஏற்படாதபடி பிள்ளைக பிறந்தாச்சு. அது போதும்னு சொல்லுவாரு. திரிபுரத்துக்கும் இது பொருந்துமே'' என்றான் தங்கராசு.

முத்துமாலை பெருமூச்செறிந்தான். ''ஒவ்வொருத்தர் வாழ்க்கையும் எப்படி எப்படியோகழியுது!இதெல்லாம் ஏன் இப்படியிருக்குன்னு புரிஞ்சுக்கிடவும் முடியலே...''

சிறிது நேரம் ரெண்டு பேரும் மவுனமாகவே நின்றார்கள்.

தங்கராசுதான் பேசினான்: ''முத்துமாலை, இன்னும் ரெண்டு நாளிலே நான் திரும்பவும் வேலைக்குப் போயிருவேன்.பிறகு இந்த ஊருக்கு எப்போ வருவேனோ எனக்கே தெரியாது. வருஷக் கணக்கிலே ஆனாலும் ஆகலாம்!''

''அடுத்த தடவெ நீ இங்கே வாறபோது நான் இருக்கேனோ என்னவோ! உன்னை நான் திரும்பவும் பார்க்க முடியாமலே போயிரலாம்!'' இதை முத்துமாலை விளையாட்டாகப் பேசவில்லை என்பதை அவனுடைய குரலே அறிவித்தது.

''ஏன், வேறே எந்த ஊருக்காவது போய்விடத் திட்டமிட்டிருக்கியா?'' என்று நண்பன் கேட்டு வைத்தான்.

''இந்த ஊரை விட்டு என்ன, இந்த உலகத்தை விட்டே நான் போய்விடலாம்...''

''என்னடே முத்துமாலை, உனக்கு தொண்ணூறு வயசா ஆச்சு! கிழவன் மாதிரி பேசுதியே?''

''சாவுக்கு வயசு ஒரு கணக்கா? பழம் உதிரப் பூ உதிரப் பிஞ்சு உதிரன்னு எல்லாம் உதிர்ந்துக் கிட்டுத் தானே இருக்கு!''

''அதுக்காக?''

''இந்த உலகத்திலே இருந்து நான் என்ன தான் செய்யப் போறேன்னு எனக்குள்ளேயே ஒரு சலிப்பு வளர்ந்து வருது. சாமியாரு பள்ளிக் கூடத்திலே நாம படிச்சபோது அறநெறி வகுப்பிலே ஞானப்பிரகாசம் சாமியார் அடிக்கடி சொல்வாரே, அது என் ஞாபகத் திலேயே இருக்கு. இறைவனால் நேசிக்கப்படுகிறவர்கள் இளம் பிராயத்திலேயே இறந்து போகிறார்கள் என்பார். நான் இறைவனாய் நேசிக்கப்பட வில்லைன்னு எனக்குத் தோணும். அப்படி இருந்தால் தான் நான் ரொம்பச் சின்ன வயசிலேயே செத்துப் போயிருப்பேனேயின்னு நான் நினைத்துக் கொள்வேன்...''

''முத்துமாலை நீ ஏன் இதுமாதிரி எல்லாம் நினைக் கணும்? சந்தோஷமான விஷயங்களை நினைச்சுப்பாரு. எல்லோரும் சந்தோஷமா இருக்கும்படியான காரியங் களைச் செய்யணும்னு ஆசைப்படுவியா, அதை விட்டுப் போட்டு...''

முத்துமாலை திடீரென்று புறப்பட்டு விட்டான். ''சரி நல்லபடியா போயிட்டு வா. எங்கே இருந்தாலும் என்னை நினைச்சுக்கோ. இதுதான் நம்ம கடைசிச் சந்திப்போ என்னமோ!'' என்று சொல்லிப் போனான்.

இருட்டில் அவன் மறைகிற வரை, அவன் போவதையே பார்த்துக்கொண்டு நின்றான் தங்கராசு. அவனுள்ளும் ஏதோ ஒரு குழப்பம், தெளிவில்லாத ஒரு வேதனை, சூழ்ந்து கனப்பதை உணர்ந்தான். நெடுமூச்சியிர்த்தான்.

முத்துமாலைக்கு ''மனசு சரியில்லை'' என்ற நோய் பற்றிக் கொண்டது! எதிலும் சலிப்பும் வெறுப்பும். எதுவுமே பிடிக்கவில்லை, ஒன்றுகூட அவனுக்கு திருப்தி அளிக்கக் கூடியதாகத் தோன்றவில்லை.

அந்த ஊரில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்காரர்களையும் அவர்களது வாழ்க்கை முறைகளையும் அவன் எண்ணாத நேரமில்லை. அப்படி எண்ணிப் பார்க்கிற போது, அவனுடைய மனம் மேலும் மேலும் குழம்பித் தவித்தது. ஏன் மனிதர்களுடைய வாழ்க்கை இப்படி இருக்கிறது? எதற்காக எல்லோரும் இவ்வாறு கஷ்டப்பட நேரிடுகிறது என்ற ரீதியில், விடை கிடைக்காத கேள்விகள் அவன் உள்ளத்தில் அலைமோதிக் கொண்டிருந்தன.

ரொம்பப் பேர் சாப்பாட்டுக்கும் அவசியமான செலவுகளுக்கும் பணம் இல்லாமல் தவிக்கிறார்கள். காசு காசாக எண்ணி எண்ணிச் செலவு செய்ய வேண்டிய நிலையில் திண்டாடுகிறார்கள். அதே வேளையில் நாறும் பூநாதனைப் போன்றவர்கள் நூறு ரூபாய் நோட்டுடன் அலட்சியமாக செலவு பண்ண முடிகிறதே! ஐநூறு ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொன்னதுமே, அவன் அஞ்சு நோட்டுக்களை உடனே எடுத்துக் கொடுக்க முடிந்ததே! என்ன திமிர், எவ்வளவு அலட்சியம்...

இந்த நினைப்பு முத்துமாலையை ஓயாது அலைக்கழித்தது.

அந்த இடத்திலிருந்து கிளம்பிப் போனவன் எங்கே போனானோ என்ன செய்தானோ என்றும் நினைக்காமல் இருக்க முடியவில்லை அவனால்.

எங்கே போவான்? இதே மாதிரி ஒதுக்குப்புறமான கோயில் இருக்கக் கூடிய ஊர் எதையாவது தேடித்தான் போயிருப்பான். கூட்டாளிகள் அங்கங்கே இருப்பார்கள். பணம் திரட்ட வேணுமல்லவா?

தொடர்ந்து அவன் மனம் திரிபுரத்துக்காக வருத்தப் படும். அவனுள் இன்னது என்று புரிந்து கொள்ள முடியாத ஒரு வேதனை கவிந்து வளரும்.

"தங்கராசு குறிப்பிட்டது போல, நாரம்பு திரிபுரத்தை அழைத்துக் கொள்ளாமலே இருந்து விடுவானோ?" என்ற சந்தேகமும் அடிக்கடி தலை தூக்கியது.

அப்படி நடந்தால், திரிபுரமும் "வாழா வெட்டி" என்ற பட்டத்தைப் பெறுவாள். இந்த ஊர் வாழாவெட்டி களுக்கு பேர் போனது! இப்பவே பலபேர் அந்த நிலையில் இருக்கிறார்கள். பத்தோடு பதினொண்ணு; அத்தோடு இதுவும் ஒண்ணு என்று திரிபுரமும் சேர்ந்து கொள்ளு வாளோ என்னமோ!

அந்தநிலை ஏற்பட்டால், அதுக்கு அவளா பொறுப்பு என்று கேட்டது முத்துமாலையின் மனம். பெண்களே குற்றம் செய்து விட்டதுபோல் தான் ஊர்காரர்கள் பழிக் கிறார்கள்; பரிகாசம் பண்ணுகிறார்கள். உண்மைக் காரணம் வேறாகத்தான் இருக்கும். புருஷன்காரன், மாமியார், அவர்கள் சொந்தக்காரர்கள், அவர்களுடைய குணங்களும் போக்குகளும் என்று பலப்பல கோளாறுகள் இருக்கும்...

அதை எல்லாம் எண்ணி எண்ணி மனம் குழம்பினான் முத்துமாலை. அவனது மனக் கலக்கத்தை அதிகப்படுத்து வது போலவே ஊரிலும் சம்பவங்கள் நிகழ்ந்தன.

# 15

"கொஞ்சம் செயலாக இருந்த" சிவன் அணைந்த பெருமாள் பிள்ளை தன் மகள் வளர்மதிக்கு சீரும் சிறப்புமாகக் கல்யாணம் நடத்தி வைத்தார். சந்தோஷமாகத் தான் எல்லாம் செய்தார்.

அவருடைய வீடு ஒளி நிறைந்த இல்லம் என்று சிலர் கிண்டலாகக் குறிப்பிடுவது வழக்கம். காரணம், அவர் தன் பெண்களுக்கு வளர்மதி, வெண்ணிலா, இளம் பிறை, பூர்ணிமா, சந்திரா என்று பெயர்வைத்திருந்தார். ஆறுவது பெண் பிறந்தால் அதுக்கு என்ன நிலவு என்று அவர் பெயர் சூட்டுவாரோ என்று அறிய சிலர் ஆவலாக இருந்தார்கள். ஆனல் சந்திராவுக்குப் பிறகு அவருக்குக் குழந்தை எதுவும் பிறக்கவில்லை.

அவருடைய பெயரை அணைந்த பெருமாள் என்று அழகாக உச்சரிப்பதற்குப் பதிலாக, அணஞ்ச பெருமாள் என்றே எல்லோரும் சொல்லி வந்தார்கள். "டிம் அடிச்ச பெருமாள்" என்று வம்பர்கள் குதர்க்கம் பண்ணுவதும் உண்டு. அந்த இருட்டைப் போக்கடிப்பதற்காகத்தான் அவர் தன் மகள்களை எல்லாம் நிலா ஆக்கியிருக்கிறார் என்று முத்துமாலை அடிக்கடி கூறுவான்.

அணஞ்ச பெருமாள் தன் மகள்களை அன்பாக, மிகுந்த பிரியத்தோடு, வளர்த்து வந்தார். எனவே, மூத்த மகளுக்கு தடபுடலாகத் திருமணம் செய்து வைத்ததில் அதிசயம் எதுவும் இல்லைதான்.

ஆனால், கல்யாணமாகிப் போன மறுமாதமே வளர்மதி பிறந்த விட்டுக்கு வந்து சேர்ந்ததுதான் ஊரா

ருக்கு அதிசயமாகப்பட்டது. அப்புறம் கசமுச என்று பேச்சு பரவியது.

மாப்பிள்ளையோடு சண்டை போட்டுக் கொண்டு அவள் வந்துவிட்டாள் என்று சிலர் சொன்னார்கள். மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள்தான் சண்டை பிடித்து அவளை விரட்டிவிட்டார்கள் என்று வேறு சிலர் சொன்னார்கள்.

"மாமியார்க்காரி சரியான தாடகை. மாப்பிள்ளை அம்மா சொல்லை கேட்டு நடக்கிற அப்பிராணி. இரண்டு பேரும் சேர்ந்து இந்தப் பெண்ணை பாடாய்படுத்தியிருக்காங்க. இதுதான் என்ன செய்யும், பாவம், ஊரைப் பார்த்து வந்திட்டுது" என்று ஒரு பெரியம்மா ஒலி பரப்பினாள்.

அதில் உண்மை இருந்தது என்பதை அணைந்த பெருமாள் பிள்ளையைக் கண்டு பேசியவர்கள் உணர்ந்தார்கள். மாமியார் இசக்கி அம்மாள் சரியான காளியாகத்தான் இருந்தாள் என்று தெரிந்தது. எடுத்ததுக்கெல்லாம் மருமகளை குறை கூறினாள்.வசை பாடினாள். அவளைப் பெற்றவளையும், பெண்ணை வளர்த்து விட்டிருக்கிற லெட்சணத்தையும் பழித்துப் பேசினாள். ஆரம்பத்தில் "உன்னை விறகுக்கட்டையாலே அடிச்சா என்ன? விளக்குமாத்தாலே ரெண்டு போடு போட்டா என்ன?" என்று வாயினால் கொடை கொடுத்தவள், பிறகு கையில் கிடைத்ததைக் கொண்டு அந்தப் பெண்ணுக்கு "பூசைக் காப்பு" கொடுக்கத் துணிந்தாள்.

"கூறுகெட்ட கோப்புரம்! ஒரு எழவு வேலையும் தெரியலே. நல்லபடியா, வாய்க்கு ருசியா ஆக்கி வைக்கக் கூடத் தெரியாத பொம்பிளை.என்ன பொம்பிளை? எங்க தலையிலே கொண்டாந்து கட்டிட்டாங்க இந்த முண்டத்தை. சதிர்தாசி மாதிரி சிங்காரிச்சுக்கிட்டு,

குலுக்கி மினுக்கதிலே குறைச்சல் ஒண்ணும் இல்லே. வேலை வெட்டி செய்றதிலே அந்த அக்கறை இருக்கணு மில்லே?'' என்று அவள் நாள்தோறும் ''ஆயிரத்தெட்டு அர்ச்சனை'' பண்ணுவதும், மருமகள் தலையில் குட்டு வதும், கன்னத்தில் இடிப்பதும், முதுகில் அறைவதும் அதிகரித்து வந்தது.

மாப்பிள்ளை குமரகுரு அம்மா செய்கிற ஆக்கினை களையும் அதட்டல்களையும் பார்த்தும் கேட்டும் திருதிரு என்று விழித்துக் கொண்டிருந்தானே தவிர, மனைவிக்கு பரிந்து பேசுவதற்கு வாய் இல்லாதவனாக இருந்தான். அம்மா முறுக்கேற்ற முறுக்கேற்ற, அவள் சொல்படி ஆடு கிறவனாகவும் ஆனான்.

''அம்மா சொல்வதும் சரிதானே? உனக்கு சோறு சமைக்கத் தெரியலே. வெறும் ரசம் வைக்கக் கூடத் தெரி யலே. சாம்பார்னு நீ பண்றது சப்புனு இருக்கு. சிலநாள் குழம்பிலே உப்பு அதிகமாப் போயிருது; சில நாளைக்கு உப்பு காணாமப் போகுது. பசியோடு உட்காரும் போது, சாப்பாடு வாயிலே வைக்க விளங்காம இருந்தால் மனு சனுக்கு எப்படி இருக்கும்?'' என்ற ரீதியில் தொண தொணக்கலானான்.

பிறகு, அம்மாவும் மகனும் சேர்ந்து கொண்டு 'பிறந்த வீட்டிலேயிருந்து அரிசி கேளு. பணம் வாங்கிட்டு வா. எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்கிவா' என்று தொல்லை கொடுத்தனர். வளர்மதி பிறந்த ஊருக்கு வந்து சேர்ந்தாள். அவள் தேய்பிறையாய் கரைந்து போயிருந்ததைக் கண்டு அனுதாபப்படாத ஊரார் உற வினர் எவரும் இல்லை.

ஒரு மாதம் வீட்டில் இருந்து உடம்பைத் தேற்றிக் கொண்டு புருஷன் வீட்டுக்குப் போன பெண்ணை மாமி யார்க்காரி சுடுசொல் கூறித்தான் வரவேற்றாள். 'அங்கே

எந்த மாப்பிள்ளைக்கு ஆசைப்பட்டு இத்தனை நாள் இருந்தே? உடம்பிலே சூடு சொரணை இருந்தா இப்படி இருப்பியா, சவத்து மூளி' என்றெல்லாம் ஏசினாள்.

வளர்மதி பொறுமையாக அனைத்தையும் சகித்துக் கொண்டுதான் நாளோட்டினாள். அந்த வீட்டில் மாடாக உழைத்தாள். இருந்தாலும், மாமியாரை திருப்திப்படுத்த முடியவில்லை.

'வாசலில் நின்று அவனையும் இவனையும்பார்க்கிறா. சன்னல் வழியாக எவன் எவனையோ பார்த்துச் சிரிக்கிறா. பால்காரன் கிட்டே பல்லை காட்டிக் குழையுதா. காய்கறி விற்க வாறவன் கிட்டே எல்லாம் இளிச்சு இளிச்சுப் பேசுதா' என்று குற்றப் பட்டியலை நீட்டிக் கொண்டே போனாள் அந்த நீலி.

ஒரு நாள் சோறு குழைந்து விட்டது என்று சொல்லி, கொள்ளிக்கட்டையை எடுத்து மருமகளுக்குச் சூடு போட்டாள் மாமியார். அதுக்குக் கூட கணவன் குமரகுரு தலையிட்டு அவளை கண்டிக்கவில்லை.

இன்னொரு தடவை, அடுப்பில் பாலை பொங்க விட்டு விட்டாள் என்று அகப்பையால் தாக்கினாள். வளர்மதி குமரகுரு விடம் முறையிட்ட போது, 'நீ ஒழுங்காக் கவனிச்சு வேலைகளை செய்றதுக் கென்ன? நீ வேலையிலே கெட்டிக்காரி ஆகணும் கிறதுக்காகத்தான் அம்மை இப்படிப் பண்ண வேண்டி ஏற்படுது' என்றான் அந்த சத்புத்திரன்.

அந்த அப்பாவிப் பெண் தனது நிலையை எண்ணி அழுது புழுங்கினாள்.

அப்படி அழுவதற்குக் கூட அந்த வீட்டில் அவளுக்கு உரிமை அளிக்கப்பட வில்லை. 'மூதேவி மூதேவி! இப்படி எப்ப பார்த்தாலும் அழுதுகண்ணீர் வடிச்சுக்கிட்டிருந்தா இந்த வீடு எப்படி உருப்படும்? விடிஞ்சாலும் அடைஞ்

சாலும் மூஞ்சியை கொண்டை முடிஞ்சு போட்டது போல தொங்க விட்டுக் கிட்டுத் திரிஞ்சா இந்த வீட்டிலே சீதேவி எட்டிப் பார்ப்பாளா? விடியா மூஞ்சி! ஊம். அவன் தலை எழுத்து. ராசா மாதிரி இருக்கவனுக்கு இப்படி ஒரு தரித் திரம் வந்து சேர்ந்திருக்கு. எட்டு வீட்டு அக்கா ஒண்ணா வந்து குடியிருக்கிற இந்த மோறைக்கட்டையை அவனுக்குப் பிடிக்கலேன்னு சொன்னா, அதிலே என்ன குத்தம் இருக்கு?'' என்று பொரிந்து கொட்டினாள் மாமியார்.

அவள் ஓயாது இவ்விதம் பொரிந்து கொட்டியதால் அக்கம் பக்கத்தினர் அவளுக்கு 'பொரி அரிசி' என்று பெயர் சூட்டியிருந்தனர் என்பது வளர்மதிக்குத் தெரிய வந்தது. ஆயினும் அதை ரசிக்கும் மன நிலையில் அவள் இல்லை

மாமியார்க்காரியின் ராட்சச தர்பார் அதிகரித்துக் கொண்டு போயிற்றே தவிரக் குறைவதாயில்லை. மகனுக்குக் கல்யாணம் பண்ணி வைத்து மருமகளை பேயாய் படுத்த வேண்டும் என்று தவமிருந்து அவள் இஷ்டசித்தி பெற்றவள் போல் நடந்து கொண்டாள்.

"இப்படி என்னை ஆட்டிப்படைக்கணும்னு காத்திருந் தவள் போல் நடந்து கொள்கிறாளே! எடுத்ததுக் கெல் லாம் குறை கூறி, எப்பவும் ஏசிப்பேசி என் சந்தோஷத் தையும் குலைச்சு, தன் அமைதியையும் கெடுத்துக் கொள் கிறாளே பாவி, இதை விட மகனுக்கு என்னை பெண் பார்த்து கல்யாணம் பண்ணி வைக்காமலே இருந்திருக் கலாம்'' என்று வளர்மதி எண்ணுவதும் இயல்பாயிற்று.

'முப்பந்தலை இசக்கி' என்று அந்த வட்டாரத்தில் பிரசித்தி பெற்ற பேய்த்தெய்வம் பற்றி வளர்மதி கேள் விப்பட்டிருந்தாள். அந்தக் கொடூரமான பிடாரியின் அவதாரம்தான் மாமியார் இசக்கி அம்மை என்று அவள்

கருதினாள். இதை அவள் யாரிடம் சொல்ல முடியும்? தன் மனசிடம் தான் அடிக்கடி கூறிக்கொண்டாள்.

ஒரு நாள் நடுப்பகலில் மாமியார், ஏதோ அல்ப காரணத்துக்காக—எண்ணெய் செம்பை கீழே போட்டு விட்டாள் என்று (அதில் என்ணெய் சில சொட்டுகளே இருந்த போதிலும்)— வளர்மதியின் தலைமயிரைப் பிடித்து இறுக்கி, அவள் மண்டையை சுவரில் 'ணங்குணங் கென்று' ஓசை எழும்படி மோதினாள்.

''சீத்துவம் கெட்ட மூதி, வழிச்சு நக்கித் தின்கலே? உருட்டிப் புரட்டி வயிறு வீங்கும்படி தின்கிறவளுக்கு இந்தச் செம்பைப் புடிக்கிறதுக்கு வலு இல்லாமலா போச்சு? சாமானை எல்லாம் நாசமாக்க வந்த மூதேவி'' என்று ஏசிக்கொண்டே தாக்கினாள் அவள். ''போ, வெளியே போடி எச்சிக்கலை'' என்று மருமகளைப் பிடித்து வெளியே தள்ளினாள்.

வளர்மதி திண்ணையிலேயே உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். பகல் உணவுக்கு வீட்டுக்கு வந்த குமர குரு அவளைப் பார்த்தவாறே உள்ளே போனான். ஏன், என்ன விஷயம் என்று கேட்க அவனுக்கு வாய் இல்லை; மன தைரியமும் கிடையாது, உள்ளே போய் அம்மாவின் குற்றச்சாடடுகளைக் கேட்ட பிறகுதான் அவன் வாயைத் திறப்பான். அது அவனது சுபாவமாக உறைந்திருந்தது.

அன்றும் அப்படித்தான் நடந்தது. அம்மா முறுக்கிய ஸ்குரு அந்த பொம்மையை வேகமாக முடுக்கிவிட்டது. வெளியே எட்டிப் பார்த்து, 'நீ இந்த வீட்டுக்கு சரிப்பட மாட்டே. உன் அப்பா வீட்டுக்கேபோய்ச்சேரு. உம், உடனேயே கிளம்பு' என்று கத்தினான்.

வளர்மதி அப்படியே புறப்பட்டு விட்டாள். அந்த வீட்டில் அவளுக்கு சாப்பாடு வேண்டியிருக்கவில்லை. 'இல்லே, நீ சாப்பிட்டு விட்டுத் தான் போகணும்' என்று தாங்கித் தடுப்பதற்கு அங்கே ஒருவரும் இல்லை,

பிறந்த ஊருக்கு அப்படி வந்து சேர்ந்தவளை ஊர்க் காரர்கள் அவரவர் இயல்புப்படி,மனம் போன போக்கில், விமர்சித்தார்கள்.

முத்துமாலை அந்தப் பெண்ணுக்காக மிக வருந் தினான். 'அது தலையெழுத்து இப்படி இருக்கு. அதுக்கு யாரு என்ன பண்ணமுடியும்?' என்றே பெரியவர்கள் அபிப் பிராயம் ஒலிபரப்பினார்கள்.

அவர்களின் ஏலாத்தனத்தை எண்ணிப் பெருமூச்சு உயிர்த்தான் முத்துமாலை. 'அந்தப் பொட்டைப்பயல் குமரகுருவை ஒரு நா இல்லாட்டி ஒரு நா சரியான கேள்வி கேட்கணும்.அவனை மாதிரிப் பயல்களுக்கு புத்தி புகட்டுற விதத்திலே புகட்டணும்' என்று மனசுக்குள் கறுவிக் கொண்டான்.

# 16

விடிந்தும் விடியாமலுமிருந்த வைகறையில், யாரோ ''அண்ணாச்சி, அண்ணாச்சியோவ்'' என்று கூப்பிட்டு, கதவைத் தட்டுவதை உணர்ந்த தனபாக்கியம் வாரிச் சுருட்டி எழுந்தாள். ''யாரது?'' என்று கேட்டாள்.

முத்துமாலை நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

''நான்தான் மதினி,ராமதுரை''என்ற பதில் வந்ததும் ''வாய்யா''என்று கூறியவாறே அவள் கதவை திறந்தாள். ''என்ன விசேஷம், விடியத்துக்கு முன்னாலே அண்ணாச்சி யைத் தேடி வந்திருக்கே?'' என்று விசாரித்தாள்.

ராமதுரை வீட்டுக்குள் வந்தான். "ஒரு அவசர காரியம். அண்ணாச்சி இன்னும் எழுந்திருக்கலியா?" என்று அங்குமிங்கும் பார்த்தான்.

முத்தொளி சிந்தி சுவரோடு ஒட்டியிருந்த சிறு விளக்கை அவள் தூண்டி விட்டாள். வெளிச்சம் மங்கலாகப் பரவியது.

"அண்ணாச்சியை எழுப்பணுமா? அவ்வளவு அவசரமா?"

"ஆமா மதனி...உடனே எழுப்பினா நல்லது..." தயங்கித் தயங்கிப் பேசினான் அவன்.

அவன் குரலும் பார்வையும், ஏதோ நடக்கக்கூடாதது நடந்திருக்கிறது என்று எண்ணச் செய்தன. அவள் அறைக்குள்ளே போய், முத்துமாலையை எழுப்பினாள். "எதிர்த்த வீட்டு துரை வந்திருக்கான். எதுக்கோ உங்களை கூப்பிடுமான்" என்று அவள் சொன்னது வெளியே நின்றவனின் காதுகளிலும் நன்றாக விழுந்தது.

முத்துமாலை நீட்டி நெளிந்து எழுந்து உட்கார்ந்தான். "என்ன துரை, இங்கே வா" என்று அழைத்தான்.

ராமதுரை அவன் அருகில் சென்று உட்கார்ந்து, ரகசியக் குரலில் பேசினான். "அண்ணாச்சி, நீலா இப்படிப் பண்ணுவான்னு நான் நினைக்கவேயில்லே...மோசம் பண்ணிப்போட்டா. வீட்டிலே அவளைக் காணலே..."

"வாய்க்காலுக்குப் போயிருப்பா, வரக் கொஞ்சம் நேரமாயிருக்கும். இதுக்குப் போயி..." என்று பரபரப்படையாமல் இழுத்தான் முத்துமாலை.

"இல்லே அண்ணாச்சி. நீலா பிளான் பண்ணித்தான் இப்படி செஞ்சிருக்கணும். வீட்டை விட்டே போயிட்டா. ராத்திரி பத்து மணி வரை வேலை எல்லாம் செஞ்சிக்

கிட்டு இருந்தா. நான் வழக்கம் போலே படுத்துத் தூங்கிட்டேன். தினசரி அவ வேலைகளை எல்லாம் முடிச்சிட்டுப் படுக்கிறதுக்கு பத்து,பத்தரை ஆயிரும். அம்மா கூடத்தான் படுத்து உறங்குவா. ஒண்ணரை ரெண்டுமணி இருக்கும். அம்மாதான் என்னை எழுப்பினா, நீலாவை காணோம்னு சொல்லி கண்ணீர் வடிச்சா. புறவாசல் கதவு சும்மா சாத்தியிருந்தது. உள் தாப்பா போட்டிருக்கலே. விளக்கை ஏத்திக்கிட்டு அம்மாவும் நானும் பின் பக்கம் போய்ப் பார்த்தோம். வீட்டைச் சுத்தி வந்து பார்த்தோம். ஆளே இல்லை. அப்புறம் தூக்கம் ஏது? விளக்கை வச்சுகிட்டு, குறுகுறுன்னு உட்கார்ந்திருந்தோம். அம்மா அழுதுகிட்டேயிருக்கா. வாய்விட்டு ஒப்பாரி வைக்கக் கூடிய விஷயமா இது? மவுனமா கண்ணீர் வடிச்சபடி முடங்கிக் கிடக்கா. இப்படி பண்ணிப்போட்டுதே சின்னச்சவம்! படக்குன்னு பாடையிலே போயிருந்தாலும் நிம்மதியாயிருக்குமே! இப்போ தன் பேரு, குடும்பப் பேரு, எல்லாரு பேரையும் சந்தி சிரிக்கும்படி செய்திட்டாளே என்று முணுமுணுத்தபடி கிடக்கா...''

முத்துமாலை நன்கு விழிப்புற்றவனாய் நிமிர்ந்து உட்கார்ந்து, அவன் சொல்வதைக் கேட்டான். பிறகு விசாரித்தான்.

''நீ என்ன நினைக்கிறே? வீட்டுப் பக்கத்திலே எவனாவது அடிக்கடி வாடை புடிச்சுக்கிட்டுத் திரிஞ்சானா? நீலா கண்ணு எவனையாவது சுத்தி அலைஞ்சுகிட்டிருந்துதா? உனக்கு யார் பேரிலாவது சந்தேகம் இருக்குதா?''

ராமதுரை பெருமூச்சு விட்டான். சிறிது நேரம் மவுனமாக இருந்தான். ''மூக்கன் பயல் அலைஞ்ச அலைச்சல் சரியில்லே. சில நாளாகவே எனக்கு டவுட்டு இருந்தது. நீலாவும் அவனைப் பார்க்கிறப்ப எல்லாம்

சிரிக்கிறதும் சினிமாப் பாட்டு பாடுறதுமா இருந்தது...'' என்று இழுத்தான்.

''எந்த மூக்கன் பய?''

''ஆசாரிப் பையன். சிவப்பா, உயரமா, கொஞ்சம் தடியா ..நம்ம தெருவிலே அடிக்கடி லாத்துவானே...''

''ஓ அவனா? சரி சரி...''

''சில நாளிலே நீலாவும் இன்னும் ரெண்டு மூணு பேரும் டூரிங் சினிமாவுக்குப் போறது உண்டு. அப்போல் லாம் மூக்கன் பயலும் படம் பார்க்க வருவான்னு சிலபேரு சொன்னாங்க. இவங்க பக்கம் வந்து பேச்சுக் கொடுக் கிறது, சிரிக்கிறதுன்னு...எப்படியோ, அண்ணாச்சி ரெண்டு பேருக்கும் சிநேகம் ஏற்பட்டிருக்கும்னு எனக்குத் தோணுது...''

''இப்போ என்ன செய்யணுமின்னு விரும்புறே? என்னை ஏன் தேடி வந்தே?'' என்று முத்துமாலை கேட் டான்.

''எனக்குத் தோணுது, நீலாவும் மூக்கன் பயலும் சேர்ந்துதான் போயிருக்கணும். எங்கே போயிருப்பாங்க? டவுனுக்குப் போயி, ராத்திரி எங்காவது லாட்ஜிலே தங்கியிருப்பாங்க. பகல்லே அல்லது அதிகாலையிலே பஸ் புடிச்சு மதுரை, குற்றாலம்னு போனாலும் போவாங்க...நாம டவுனுக்குப்போகணும். பஸ் ஸ்டாண்டி லேயே துப்புக் கிடைச்சாலும் கிடைக்கும். நீங்க என்கூட வந்தா எனக்கு ஒரு தைரியம் ஏற்படும். அந்த மூக்கன் பயலை எங்கே கண்டாலும் மடக்கி...''

''சரி, புறப்படு'' என்று உடனே கிளம்பினான் முத்து மாலை.

"பல்லு விளக்குங்க. காப்பி சாப்பிட்டுட்டுப் போக லாம்" என்று தனபாக்கியம் கூறவும், "காப்பி போட்டி ருக்கியா என்ன?" என்று முத்துமாலை கேட்டான்.

"இதோ அஞ்சு நிமிசத்திலே ரெடியாயிரும்" என்று அடுக்களைப் பக்கம் திரும்பினாள் அவள்.

"வேண்டாம் பாக்கியம். அதுக்கெல்லாம் நேரம் இல்லே" என்று சொல்லிவிட்டு வெளியேறினான் முத்து மாலை.

ராமதுரை அவன் பின்னாலேயே நடந்தான்.

அவர்களது 'நல்லகாலம்' பஸ்ஸுக்காக அதிக நேரம் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அதே போல டவுன் பஸ் நிலையத்திலும் சந்தர்ப்பம் அவர் களுக்கு உதவியது.

அவர்கள் வந்த பஸ் நிலையத்தினுள் புகுந்த வேளை யில், திருச்செநதூர் செல்கிற பஸ் வெளியேவந்து கொண் டிருந்தது. மெதுவாகத்தான் வெளியேறியது. தற்செய லாக அந்த பஸ்சினுள் முத்துமாலையின் பார்வை பாய்ந்தது. அதனுள் மூக்கன் இருப்பது தெரிந்தது. "ஏ துரை' அந்த பஸ்சிலே மூக்கன் பய இருக்கானே" என் றான் அவன்.

ராமதுரையும் கவனித்தான். "பொம்பிள்ளைகள் பக் கத்திலே நீலா மாதிரி ஒருத்தி இருப்பது தெரியுது. அந்த மூதியாத்தான் இருக்கும். இப்ப நாம என்ன செய்யலாம்" என்று பதட்டம் காட்டினான் அவன்.

முத்துமாலை அவன் கையைப் பற்றினான். "அவச ரப்படாதே. அவங்க நம்மைப் பார்க்கலே. அதனாலே பயமில்லை. இடைவழியிலே எங்கேயும் இறங்கிட மாட் டாங்க. நேரே திருச்செந்தூருக்குத்தான் போவாங்க. நாம அடுத்த பஸ்சிலே போவோம். அங்கே யாரும் அவங்களைத் தேடிவருவாங்க என்கிற எண்ணமே அவங்

களுக்கு ஏற்படாது. அதனாலே பயமில்லாம கவலையில்லாம ஜாலியா கோயிலுக்குப் போவாங்க கடற்கரையிலே நிப்பாங்க. எப்படியும் நாம அவங்களைப் புடிச்சிரலாம்'' என்று முத்துமாலை தெரிவித்தான்.

அரைமணி நேரத்துக்குப் பிறகுதான் திருச்செந்தூருக்கு அடுத்த பஸ் என்று தெரிந்ததும், இரண்டுபேரும் ஓட்டலுக்குப் போய் சிற்றுண்டி சாப்பிட்டு வந்தார்கள். பஸ்சில் வசதியாக இடம் பிடித்துக் கொண்டார்கள்.

பயணத்தின் போது ராமதுரை நீலாவை திட்டிக் கொண்டே வந்தான். ''மூக்கன் பயலுக்கு சரியானபடி பாடம் கத்துக்கொடுக்கணும். அவனைப் பார்த்ததுமே கழுத்திலே துண்டைப்போட்டு முறுக்கி புடரியிலே ரெண்டு கொடுத்து...'' என்ற ரீதியில் முணமுணத்தபடி இருந்தான்.

அவனுடைய ஆத்திரம் ஓரளவுக்குத் தணியட்டும் என்று முத்துமாலை பொறுமையாக இருந்தான். திருச்செந்தூரை நெருங்கியபோது பேசலானான்; ''துரை இப்போ ஆத்திரப்படறதிலேபிரயோசனமில்லே. ஆரம்பத்திலேயே இவ்வளவுக்கு முத்தவிடாம கண்காணிச்சு நடவடிக்கை எடுத்திருக்கணும். இப்போது இவ்வளவு தூரத்துக்கு ஆயிட்ட பிறகு, அவள் துணிஞ்சு திட்டம் போட்டு அவனோடு கூட வீட்டை விட்டு வெளியேறி வந்துவிட்ட பிற்பாடு ஏசுறதிலேயும், உன் மனசை நீயே குழப்பிக்கிடுறதிலேயும் லாபம் இல்லே. நீலா அந்தப் பயலோடு ஓடி வந்து, ராத்திரியை அவன்கூடக் கழிச்சுப்போட்டு, ஜாலியா ஊர் சுத்தவும் துணிஞ்சிருக்காள்னா, அவளுக்கு அவன் மீது பற்றுதலும் பிரியமும் நிறையவே ஏற்பட்டுருக்குன்னு தான் அர்த்தம். அவளையும் அவனையும் மிரட்டியும் உதைச்சும் பிரிச்சிடலாம். நீலாவைத் திரும்பவும் வீட்டுக்குக் கூட்டி வந்து உதைச்சு கார்வாரு பண்ணறதும் கஷ்டமில்லே. உடம்பினாலும், உள்ளத்தினாலும்

களங்கப்பட்டவளாத்தான் அவ இருப்பா. ஊரிலேயும் கெட்ட பேரு தான் நிலைக்கும். அதனாலே அவளுடைய வாழ்க்கையும் பாதிக்கப்படும். அவளுக்குக் கல்யாணம் ஆகிறதும் பெரிய பிரச்னையாகத் தான் ஆகிப்போகும். மூணு நாலு வருசம் கழியட்டும், மூடி மறைச்சு, தூர தொலையிலே மாப்பிள்ளை பார்த்து கல்யாணம் பண்ணிக் கொடுத்திடலாம்னு நினைச்சாலும், அதிலும் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படும். கல்யாணத்தை கலைக்கிறதுக்குன்னே உண்மை விளம்பின்னு எவனாவது மொட்டைக் கடுதாசி எழுதிப் போடுவான். மூட்டை கட்டிக்கிட்டு ஊரு தேடிப்போயி, மாப்பிள்ளை விட்டுக்காரங்ககிட்டே பெண்ணைப்பத்தி வத்திவச்சிட்டு வாறதுக்கு நம்ம ஊரிலே ஆளுக ரெடியா இருப்பானுக...''

''ஆமாமா. இதுக்கு முன்னாடியும் அப்படியெல்லாம் செஞ்சிருக்கானுக தான். அது சரி, நீங்க என்ன செய்யலாமுங்கிறீக அண்ணாச்சி?''

''பணபலம் இருந்தா எதையும் வெற்றிகரமா சாதிச்சிடலாம். ஓடிப்போன பெண்ணை வீட்டுக்கு அழைச்சிட்டு வந்து, எதுவுமே நடக்காதது போல் சமாளிச்சு, நல்ல இடத்திலே கல்யாணம் பண்ணிக் கொடுத்து விடலாம். அப்படியும் நடக்கத்தான் செய்யுது. அல்லது, பணம் எதுவும் இல்லாம, உழைச்சுப் பிழைக்கிற அன்றாடங் காய்ச்சிகள் மத்தியிலும் இது மாதிரி விவகாரங்கள் பெரிய பிரச்னை ஆவதில்லே. வீட்டை விட்டு வெளியேறி அவனும் அவளும் சேர்ந்து, வாழ்றவரை வாழ்வாங்க. இல்லேன்னா பிரிஞ்சு போவாங்க. அவள் வேறொருத்தனை தேடிக்கிடுவா; அவன் இன்னொருத்தியை சேர்த்துக்கிடுவான். நம்ம மாதிரி ரெண்டுங்கெட்டான் நிலையிலே இருக்கிறவங்க-மத்தியதர வர்க்கம்னு பெரிசா பேர் பண்ணப்படுதே, அவங்க-மத்தியிலேதான் விவகாரம், வில்லங்கம் எல்லாம்...''

முத்துமாலை என்னதான் சொல்ல விரும்புகிறான் என்று புரிந்து கொள்ள இயலாதவனாய் ராமதுரை அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நான் என்ன நினைக்கிறேன்னா, நீலாவுக்கு மூக்கனைப் புடிச்சிருக்கு, அவன் பேரிலே அவளுக்கு ஆசை வளர்ந்திருக்கு. அதே மாதிரி அவனுக்கு அவ மீது ஆசை, பின்னாலே என்ன நிகழும், எப்படி முடியும்கிறதைப் பத்திக் கவலைப்படாம, ரெண்டுபேரும் வீட்டை விட்டு. ஊரை விட்டு, உற்றார் உறவினரை விட்டுவிட்டு வெளியே போகிற அளவுக்கு ஒருவரை ஒருவர் விரும்பி இருக்கிறாங்க. அவங்க வாழ்க்கையை, அவங்க எதிர்காலத்தை, அவங்களே அமைச்சுக்கிடட்டும்-அதிலே எதிர்ப்படுகிற இன்ப துன்பங்களை,லாப நஷ்டங்களை அவங்களே எதிர் கொள்ளட்டும்னு விட்டுட வேண்டியதுதான். அந்தப் பெரிய மனசு உனக்கு வேணும்...''

''நீலாவும் மூக்கனும் கல்யாணம் பண்ணிக்கிடட்டும்னு விட்டுறவா? அப்படியா சொல்லுதீங்க அண்ணாச்சி?''

''நீலா எவனாவது ஒருத்தனைக் கல்யாணம்பண்ணிக்கிட்டு வாழ வேண்டியவள் தானே? முன்னைப்பின்னே தெரியாத எவனோ ஒருத்தனை கட்டிக்கிட்டு வாழறதை விட அவளா விரும்பித் தேர்ந்து கொண்ட, அவளுக்கு நல்லாத் தெரிஞ்ச மூக்கனோடு சேர்ந்து வாழறதுனாலே என்ன கெட்டுப் போகப் போகுது?''

முத்துமாலையின் பேச்சு ராமதுரைக்கு அதிர்ச்சி தந்தது. ''அது எப்படி அண்ணாச்சி முடியும்? அவன் சாதி என்ன, நம்ம சாதி என்ன? ஊரிலே காறித்துப்ப மாட்டாங்களா? நம்ம சொந்தக்காரங்க நம்மளை மதிப்பாங்களா?'' என்று படபடத்தான்.

''இப்ப ரொம்பத்தான் மதிக்கிறாங்களாக்கும்!'' என்று சொல்லிச் சிரித்தான் முத்துமாலை. ''தங்கச்சிக்கு

கல்யாணம் பண்ணி வைக்கத் திராணியில்லாமல் இருக்கான்னு புறம் பேசு தானுக, நீலா மரம் மாதிரி வளர்ந்திட்டா-குதிரு மாதிரி வளர்ந்து நிக்கறா—இருபத்து நாலு இருபத்தஞ்சு வயசாகியும் கல்யாணமாக வழியில்லே என்று பொம்பிளைகளும் ஆம்பிளைகளும் பேசுறாங்க பழிக்கிறாங்க. யாராவது உதவி செய்ய முன் வந்தாங்களா?''

''இருந்தாலும் மூக்கன் ஆசாரிப் பையன்...''

''நாம பத்தரை மாத்து சைவப் பிள்ளைமாராச் சேன்னு மனசு கெடந்து அடிச்சுக்கிடுதாக்கும்? ஏ, துரை இதில் எல்லாம் அர்த்தமே கிடையாது. பணமும் சொத்தும் இருக்கவங்க பெருமை கொழிச்சுக்கிடலாம். அதிலே அவங்க மதிப்பை காணலாம். அதைவிட்டுத் தள்ளு. ஊர் சிரிக்குமே, கேலி பேசுமேன்கிறதும் பெரிய விசயம் இல்லே. சிரிச்சால் சிரிச்சிட்டுப் போட்டுமே. கொஞ்ச காலத்துக்குச் சிரிக்கும். அப்புறம் மறந்து விடும். இல்லாட்டி அதுக்கு எண்ணியும் பேசியும் சிரிக்கதுக்கு வேறே புது விசயம் வந்துடும்!'' என்றான் முத்துமாலை.

ராமதுரை பேசாமல் வெளியே பார்த்தபடி இருந்தான்.

''ஊர்க்காரங்க சிரிப்பும் சொந்தக்காரங்க பழிப்பும் பணம் நிறைய வச்சிருக்கிறவங்களை எதுவும் செய்வதில்லே. அதே மாதிரி இல்லாதவங்களையும் ஒண்ணும் பண்ணுவதில்லை. மத்தியதரங்களைத்தான் அது பாடாப்படுத்தும். பெரிய பண்ணை புன்னைவளம பிள்ளை மகள் ரஞ்சிதம், முதலிப் பையன் ஒருவன் கூடப் போயிட்டா. அவங்க ரெண்டு பேரும் புருஷன் பெண் சாதியா நம்ம ஊருக்கு திரும்பி வந்தாங்க. யாரு என்ன பண்ண முடிஞ்சுது அவங்களை? இப்பவும் ஊரோடு ஜம்னு தான் இருக்காங்க. கூலி வேலை செய்து பிழைக்கும்

பிச்சையா மகள் பாப்பா கொத்தனார் மகனை கல்யாணம் பண்ணிக்கிட்டா. ஊரும் உறவும் என்ன செஞ்சு போட்டுது? அதெல்லாம் ஏன்? நான் இல்லையா? இருட்டோடு வந்த எவளோ ஒருத்தியான தனபாக்கியத்தை சேர்த்துக்கிட்டு ஊர் நடுவிலேயே வாழ்க்கை நடத்தலையா? ஊரு உறவு, பழிப்பு சிரிப்புன்னு யோசிச்சுக்கிட்டிருந்தா, நம்ம சந்தோஷங்களை நாமே காவு கொடுக்க வேண்டிய கட்டங்கள்தான் நிறைய வரும்.''

முத்துமாலையின் உபதேசம் ராமதுரையை சிந்திக்க வைத்தது. அவன் மவுனத்தில் ஆழ்ந்தான். அவன் யோசிக்கட்டும் என்று முத்துமாலையும் விட்டுவிட்டான்.

இரண்டு பேரும் பஸ்ஸிலிருந்து இறங்கியதும் மெது நடையாகக் கோயில் பக்கம் போனார்கள். வழியில் ஒரு ஓட்டலில் 'வயிற்றுப்பாட்டை' கவனித்துக் கொண்டார்கள்.

''நேரே நாம கோயிலுக்குப் போவோம். கடற்கரையாண்டி கோயில் மண்டபத்திலே காற்று ஜிலுஜிலுன்னு வரும். சுகமாயிருக்கும். அங்கே உட்கார்ந்தபடி வாறவங்க போறவங்களை கவனிப்போம். நம்ம புள்ளிக்காரங்களும் அங்கே எப்படியும் வந்து சேருவாங்க'' என்று முத்துமாலை சொன்னான்.

கோயிலுக்கு வந்ததும் ராமதுரை சொன்னான், ''வந்ததோ வந்தோம்.சாமி தரிசனமும் பண்ணிரலாமே'' என்று.

''ஆகா, பண்ணினாப் போச்சு!'' என்று உள்ளே போனான் முத்துமாலை.

பிறகு இருவரும் பிரகாரம் சுற்றி வந்தார்கள். உள் பிரகாரம் வெளிப் பிரகாரம் இரண்டையும்தான். ''வள்ளி ஒளிஞ்சக் குகையைபார்த்து வைக்கலாமே'' என்று திரும்பி அங்கே போவதற்கான வழியில் நடந்தார்கள்.

மீண்டும் சந்தர்ப்பம் அவர்களுக்கு உதவியது. நீலாவும் மூக்கனும் வள்ளிக்குகையை பார்த்துவிட்டு அவர்களும் நேரே வந்து மாட்டிக் கொண்டார்கள்.

''வாங்க வாங்க! ரொம்பவும் எதிர்பாராத சந்திப்பு'' என்று உற்சாகமாக வரவேற்றான் முத்துமாலை.

இவர்களை அங்கே எதிர்பார்த்திராத நீலாவும் மூக்கனும் திடுக்கிட்டுத் திகைத்துத் திகிலடித்துப் போய் நின்று விட்டார்கள். நீலா மூக்கனின் முகத்தைப் பார்த்தாள். அண்ணனைப் பார்த்தாள். முத்துமாலையின் முகத்தை ஏறிட்டுப் பார்த்து விட்டு அவன் கண்களை சந்திக்க முடியாதவளாய் தலை குனிந்தாள்.

மூக்கன் கலவரமடைந்தவனாய் திரு திரு என்று விழித்தபடி நின்றான். அவன் பார்வை கடலின் பக்கமே நிலைத்திருந்தது.

முத்துமாலைதான் சீண்டினான். ''முருகன் வள்ளி திருவிளையாடல் மாதிரி நீலாமூக்கன் திருவிளையாடலா? எந்த மட்டிலே நிக்குது? முருகன் லீலை வள்ளி திருமணத்திலே முடிஞ்சிது. மூக்கன் லீலை நீலா திருமணத்தை எட்டிப் பிடிச்சாச்சா? என்னமோ சொல்லுவாங்களே? நல்ல வார்த்தையில்லா?... ஆங்... ஆங், தேன்நிலவு யாத்திரை நடக்குதோ இப்போ?''

நீலாவின் கண்கள் கலங்கின. நீரைச் சிந்தின.

ராமதுரை கோபத்தோடு அவளையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான் ''நீலிக்கு அழுகை எவரெடியா இருக்கும்னு சொல்லுவாங்க. செய்றதை செஞ்சுபோட்டு அழுகை வேறையா? பாசாங்குக்காரி. நல்லா நடிக்கத் தெரிஞ்ச ஏமாத்துக்காரி. எத்தனை நாளாகட்டீ இப்படித் திட்டம் போட்டிருந்தே? அம்மை மூஞ்சிலேயும் எம்மூஞ்சிலேயும் இப்படிக் கரியை அள்ளிப் பூசணும்னுட்டு?...'' என்று பொரிந்து தள்ளினான்.

நீலா அழுது கொண்டே நின்றாள். மூக்கனுக்கு ஒன்றும் ஓடவில்லை.

அது ஆள் நடமாட்டம் இல்லாத ஒதுக்குப்புறமாக இருந்ததால், வேடிக்கை பார்க்கும் கும்பல் கூடவில்லை.

அண்ணன்காரன் பேசவேண்டியதை எல்லாம் பேசட்டும் என்று காத்துக் கொண்டிருந்த முத்துமாலை, ஒரு அளவு வந்ததும் இவ்வளவு போதும் என்று எண்ணியவனாய் குறுக்கிட்டான்.

''சரி துரை, நடந்தது நடந்துபோச்சு. அதுக்காக அலட்டிக்கிட்டிருப்பது வீண் வேலை. இனிமேலே நடக்க வேண்டியதைப் பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வருவது தான் விவேகம்'' என்றான். தொடர்ந்து: ''அம்மா நீலா, வீட்டைத் துறந்து, ஊரையும் உதறி விட்டு வந்தாச்சு, அடுத்தாப்லே என்ன செய்றதா உத்தேசம்?'' என்று நீலாவை நோக்கினான்.

அவள் வாயை திறக்காமல் நிற்கவும், மூக்கனைப் பார்த்துக் கேட்டான்:''நீ ஏதாவது பிளான்வச்சுக்கிட்டுத் தானே இவளை கூட்டிக்கிட்டு வந்திருப்பே? இனி இரண்டு பேரும் என்ன பண்ணப் போறீங்க? எந்த ஊரிலே வாழ்க்கை நடத்தப் போறீங்க?''

மூக்கன் மாற்றி மாற்றி ஒவ்வொருவர் முகமாகப் பார்த்தான். ''அதைப்பத்தி எல்லாம் இன்னும் தீர்மானிக்கலே!'' என்றான்.

''அதுதான் தப்பு.ஒரு பெண்ணை இழுத்துக்கிட்டு ஓடிப் போறதை விடப் பெரிய தப்பு, தன்னை நம்பி, தன் கூட வந்தவளுடைய எதிர்காலத்தைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் அவ வாழ்க்கைக்கு உறுதி-அளிக்காமல்-அவளை அந்தரத்திலே விட்டு விடுவது. நீலா உன் பேச்சைக் கேட்டு, உன்னை நம்பி, உன் மேலே ஆசை வச்சு, உன் கூட வந்திட்டா. அவளைக் கடைசிவரை வைச்சுக்.

காப்பாத்த வேண்டிய பொறுப்பு உனக்கு வந்திட்டுது. அஞ்சுநாள் ஆறுநாள், அல்லது ஒரு மாசம், ஜாலி பண்ணிட்டு அவளை உதறிவிடலாம்னு நீ உன் மனசிலே எண்ணியிருந்தால் அது பெரிய அயோக்கியத்தனம். அவளுக்குச் செய்கிற மகத்தான துரோகம். அவளுடைய எதிர்காலத்தை-ஒரு பெண்ணின் வாழ்க்கையை-கொலை பண்ணிய குற்றமும் ஆகும். உங்க உறவு இவ்வளவு தூரம் முற்றிக் கனிஞ்சிட்டதுனாலே, நீங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக் கொண்டு வாழ்க்கை நடத்துவது தான் நியாயம் ஆகும். நீங்க இப்பவே நம்ம ஊருக்குத் திரும்பி வரணும்கிற அவசியம் எதுவும் இல்லே. தூத்துக் குடியிலோ, மதுரையிலோ, அல்லது உங்க மனசுக்குப் பிடிச்ச ஒரு நகரத்திலே போய் வசிக்கலாம். நீங்க எப்படிப் பிழைப்பீங்களோ,அது உங்க சாமர்த்தியத்தைப் பொறுத்தது. ஆனா, மூக்கா! ஒண்ணை மனசிலே வச்சுக்கோ, நீலாவை கைவிட்டு விடலாம்னு நினைக் காதே. உன்னை நம்பி எல்லோரையும் எல்லாத்தையும் துறந்திட்டு வந்திருக்கிற இந்தப் பெண்ணை ஏமாற்றி, இவளை அலைக் கழிய விட்டிராதே...''

''அப்படி எல்லாம் செய்ய மாட்டேன், ஐயா'' என்று உணர்ச்சியோடு கூறி, கை எடுத்துக் கும்பிட்டான் மூக்கன்.

''அப்ப சரி. இங்கேயே இவளுக்கு நீ தாலி கட்டி விடு. நாங்களே சாட்சியாக இருப்போம்'' என்றான் முத்து மாலை.

நாலு பேரும் ஒரு கடைக்குப் போய், தாலிச் சங்கிலி வாங்கினார்கள்.கோயிலில் வைத்து மூக்கன், நீலாவுக்குத் தாலி கட்டினான். சாமியை கும்பிட்டுவிட்டு,ஓட்டலுக்குப் போய் விருந்து உண்டார்கள்.

''நீலா, நீயாகத் தேடி அமைத்துக் கொண்ட வாழ்க்கை இது.என்றைக்கும் நீ சந்தோஷமா இருக்கும்படி

பார்த்துக் கொள். மூக்கா, உனக்குச் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லியாச்சு. எங்கே இருந்தாலும், என்ன தொழில் செய்தாலும்,மன நிறைவோடு சந்தோஷமாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்க. எங்களுக்குக் கடிதம் எழுத மறக்க வேண்டாம். சரி, நாங்க வாறோம்'' என்று விடைபெற்றான் முத்துமாலை.

ராமதுரையும் சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

புதுமணத் தம்பதிகள் கண்கலங்க வணக்கம் தெரிவித்தார்கள்.

''இது இப்படி முடியும்னு நான் நினைக்கவேயில்லை'' என்று ராமதுரை முத்துமாலையிடம் சொன்னான்.

''காலம் வழி அமைத்துக் கொடுக்கிறது. வாழ்க்கை தன் போக்கில் முன்னேறுகிறது'' என்றான் முத்துமாலை.

''அம்மாவை எப்படி சமாதானப்படுத்தப் போறேனோ எனக்கே தெரியலே'' என்று நெடுமூச்சுயிர்த்தான் துரை.

''எல்லாம் காலப்போக்கில் சரியாகிவிடும்'' என்று முத்துமாலை ஆறுதல் கூறினான்.

# 17

முத்துமாலையும் ராமதுரையும் பஸ் நிலையத்தை நோக்கிப் போய் கொண்டிருந்தார்கள்.

எதிரே வந்த இருவரைப் பார்த்ததும், "ஹே, இவங்க கூட கோயிலுக்கு வாராங்களா!" என்று கிண்டலாகக் குறிப்பிட்டான் துரை.

"நானும் நீயும் கோயிலுக்கு வந்திட்டுப்போறோமே; மத்தவங்க வாறதிலே என்ன ஆச்சர்யம் இருக்கு?" என்றான் முத்துமாலை

"அதுக்கில்லே. இவங்களை உங்களுக்குத் தெரியாது? நம்ம ஊரு அணஞ்ச பெருமாள் பிள்ளை மருமகன் குமரகுருவும், அவனோட அம்மா இசக்கியம்மாளும்தான். இவங்க ஒரு பெண்ணை வாழவிடாமல் துரத்தி அடிச்சு புண்ணியம் சம்பாதிச்சிருக்காங்களே! இப்போ கோயிலுக்கு வந்து என்ன வரம் கேட்கப் போறாகளோன்னு நினைச்சேன்."

"ஓகோ" என்று நீட்டி இழுத்த முத்துமாலை எதிரே வந்துகொண்டிருந்த அம்மாளையும் மகனையும் கூர்ந்து நோக்கினான். அவர்கள் அருகில் வந்ததும், "வாங்கம்மா... வாங்க தம்பி" என்று 'ரொம்பத் தெரிந்தவன் மாதிரி விசாரித்தான்.

அவர்கள் தயங்கி நின்றார்கள். "ஆமா, நீங்க யாரு, தெரியலியே?" என்று அந்த அம்மாள் வார்த்தைகளை மென்றாள்.

"சிவபுரம் முத்துமாலை. உங்க சம்பந்தகாரரு ஊரு தான்."

"ஊம்ம்" என்று அவனை மேலும் கீழும் பார்த்தாள் அம்மாள். குமரகுருவும் கவனித்தான்.

"முருகனை தரிசிக்க வந்தீகளாக்கும்?" பரிகாசம் லேசாக தொனித்தது அவன்பேச்சில்.

"உம்ம்" என்று சொல்லி நகரத் தொடங்கினாள் இசக்கி அம்மாள்.

"நல்ல காரியம்தான். உங்க மாதிரி பக்தர்கள் வரப் போய்த்தான், கடவுளு கண்ணை மூடிக்கிட்டாரு. உலகத்திலே நடக்கிற அக்கிரமங்களை பார்க்க அவருக்கு மனமில்லைன்னு தோணுது. கடவுளு கண்ணை மூடிக்கிட்டு இருக்கிறதனாலே, மனுசங்க மேலும் மேலும் அநியாயங்களையும் அக்கிரமங்களையும் செஞ்சுக்கிட்டே இருக்காங்கன்னு தோணுது..."

குமரகுரு இப்போது முறைத்தான். "என்னவே வழியை மறிச்சுக்கிட்டு உளறிக் கொட்டுதீரு? நீரு யாரு?" என்று அதட்டினான்.

முத்துமாலை குறும்புத்தனமாகச் சிரித்தான். "பரவால்லியே. உனக்கு ஆம்பிளை மாதிரி அதட்டிப் பேசக் கூடத் தெரியுமா? முழுப் பொட்டைப்பயலா ஆயிடலேன்னு சொல்லு!" என்றான்.

"ஏய், என்ன குடிச்சிட்டு கிடிச்சிட்டு வந்திருக்கியா?" குமரகுருவுக்குக் கோபம் வந்தது.

"நான் குடிக்கிறவன் தான். ஆனா இப்ப குடிக்கலே. ஆனா நீ குடிகெடுக்கிற மடையன். குடியும் குடித்தனமுமா வாழ வேண்டிய அப்பாவிப் பொண்ணோட வாழ்க்கையை குட்டிச்சுவராக்கின வீணன். உன் அம்மா ஒரு தாடகைன்னு ஊரிலே சொல்றாங்க. அவ சரியான கூனியின்னும் தெரியுது. ரெண்டு பேரும் சேர்ந்து வளர்மதியை

வாழவிடாமப் பண்ணியிருக்கீங்க. அதை விடக் கல்யா ணமே பண்ணிக்காம இருந்திருக்கலாம். ஒரு பெண்ணை வயிறு எரியப் பண்ணிப் போட்டு, நீங்க சாமி கும்பிட புண்ணிய ஸ்தலம் தேடி வந்திருக்கீகளே! அந்தப் பெண் ணுக்கு நீங்க இழைச்ச கொடுமைகளும் அதுனாலே ஏற்பட்ட பாபமும் எப்படித் தீரும்? நீங்க உருப்பட மாட்டீங்க. போங்க போங்க. படிச்சிருந்தும் புத்தியில் லாத மடச்சாம்பிராணி, இன்னும் அம்மாப் பிள்ளை யாகவே தான் இருக்கப் போறியா? உனக்குன்னு தனி யோசனையும் சுய தைரியமும் கிடையாதா?''

குமரகுரு தலையை தொங்கப் போட்டபடி நின்றான். இசக்கி அம்மாள் சுதாரித்துக் கொண்டாள். ''வா, குமாரு நடுத் தெருவிலே மறிச்சுக்கிட்டு மரியாதை இல்லாமப் பேசுகிறவன் கூட நமக்கு என்ன பேச்சு? வா வா'' என்று அவசரமா நகர்ந்தாள்.

குமரகுருவும் தொடர்ந்தான்.

''வாங்க அண்ணாச்சி. கூட்டம் கூடப் போகுது'' என்று ராமதுரை முத்துமாலையிடம் மெதுவாகச் சொன்னான்.

முத்துமாலை உரத்த குரலிலேயே அறிவித்தான்: ''ஏ மூலி அலங்காரி, நீ ஒரு பெண்ணை தள்ளி வச்சிட்டு, உன் மகனுக்கு வேறே இடத்திலே பொண்ணு பார்த் தாலும் பார்ப்பே. எந்தச் சீமையிலேயிருந்து மருமக வந்தாலும் நீ அவளை வாழவிடப் போறதில்லே. சரியான பாதகத்தி நீ. உன் கொடுக்கைப் புடிச்சுக் கிட்டுத் திரியி தானே, முதுகெலும்பில்லாத பய, அவன் இந்த நிலை யிலே இருக்கிற வரைக்கும் உன் குடும்பம் விளங்காது. நீ கடலாடி விட்டு முருகனைக் கும்பிடு. அப்புறம் கன்னியா குமரி, ராமேசுரம்னு எங்கே வேணும்னாலும் போ. நீங்க உருப்படப் போறதில்லே!''

ஆத்திரமாக சுடுசொற்களை வீசி எறிந்து விட்டு, திரும்பிப் பாராமலே நடந்தான் முத்துமாலை. "இவங்களுக்கு இது போதாது. இன்னும் சூடாக் கொடுக்கணும். இது அவங்க ஊரும் இல்லே. நம்ம ஊரும் இல்லை. வந்த இடத்திலே வீண் வம்பு என்னத்துக்குன்னு இவ்வளவோடு நிறுத்தி விட்டேன்" என்று ராமதுரையிடம் கூறினான்.

முத்துமாலையின் போக்கு அந்த இளைஞனை பிரமிக்க வைத்தது. அவனுடைய எண்ணங்களும் செயல்களும் வியப்பளிக்கும் விஷயங்களாகவே பட்டன.

ராமதுரை சொன்னான்:

"அண்ணாச்சி, நீங்க செய்த தீர்ப்பு தான் சரியானது, நல்லதுன்னும் எனக்குப் படுது!"

"எதைச் சொல்லுதே?" என்று புரியாதவனாய் விசாரித்தான் முத்துமாலை.

"நீலா விவகாரம்தான். யோசிக்கையிலே வேறு எந்த முடிவும் அவளுக்கு நன்மை செய்யாதுன்னுதான் தோணுது. வளர்மதி கதியை நினைச்சுப் பார்க்கையிலே நம்ம சாதி சனம் வசதியான இடம்னு தேடிப் பார்த்துப் பேசி முடிச்சு சிறப்பாச் செய்து விடுகிற கல்யாணமும் சம்பந்தப்பட்ட பொண்ணுக்கு குறைவற்ற வாழ்க்கையையும் குணம் நிறைந்த கணவனையும் கொண்டு தரும் என்று நிச்சயமா நம்பறதுக்கில்லேன்னு தெரியவருது. இப்படியெல்லாம் செய்து பெரியவர்களாப் பார்த்து ஒரு பெண்ணின் வாழ்க்கையை பாழாக்கறதைவிட பெண்ணே தன் மனசுப்படி தேடித் தேர்ந்து கொள்கிற துணைவனும் அமைத்துக் கொள்கிற வாழ்க்கையும் மேலானதுன்னு படுது. அது அவளுக்கு சந்தோஷத்தையும் நல்ல எதிர்காலத்தையும் கொண்டு சேர்க்கும்னும் எதிர்பார்க்கலாம் இல்லையா?"

"நம்மகையிலே என்னடே இருக்கு. துரை! ஒவ்வொரு வர் வாழ்க்கை எப்படி எப்படியோ அமைஞ்சு போகுது" என்று சுரத்தில்லாமல் பதிலளித்தான் முத்துமாலை.

"அது சரி" என்று ராமதுரை உறுதியாகக் கூறினான். "நான் முடிவு பண்ணிட்டேன். நாம நீலாவை பார்த்த தையோ மூக்கனும் அவளும் தாலி கட்டிக் கொண்டு தனியாப் போயிட்டதையோ நான் அம்மாவிடம் சொல்லப் போறதில்லே. ஊரிலே எவருக்கும் தெரிவிக்கப் போறதில்லே..."

"தெரிவிச்சுத்தான் என்ன ஆகப்போகுது?"

"அதுதான். நன்மை எதுவும் ஏற்படாது, கண்டபடி பேச்சுகள்தான் பரவும். நீங்களும் யாரிடமும் சொல்ல வேண்டாம். எப்பவாவது தானாத் தெரிஞ்சால் தெரிஞ் சிட்டுப் போகுது!" என்றான் துரை.

"ஊம். நாங்க அலைஞ்சு திரிஞ்சு பார்த்தோம், நீலா எங்க கண்ணிலே படவேயில்லே. எங்கே போனாளோ என்னா ஆனாளோ தெரியாதுன்னு யாராவது என்ன ஏதுன்னு நம்ம கிட்டே தூண்டித் துளைச்சுக் கேட்டால் சொல்லிப் போடுவோம்" என்று முத்துமாலை ஆமோதித்தான்.

# 18

அன்று இரவே முத்துமாலை ஊருக்குத் திரும்பிவிட வில்லை. மறுநாள் தான் வந்து சேர்ந்தான்.

வந்த உடனேயே அவன் காதில் விழுந்த செய்தி அவனுக்கு அதிர்ச்சி தந்தது.

அணைந்த பெருமாள் பிள்ளையின் மகள் வளர்மதி செத்துப் போனாள்.

"என்னது? செத்துப் போனாளா? வளர்மதியா? நெசமாவா? எப்படி?"

நம்ப இயலாதவனாய் அவன் கேள்விகளை அடுக்கினான். உண்மை அவன் உள்ளத்தை உலுக்கியது. துயரம் கவ்விப் பற்றிய இதயத்தில் வலி எடுத்தது.

அந்த ஊரில் அது சகஜ நிகழ்ச்சி. அடிக்கடி யாராவது ஒரு நபர் 'பூச்சி மருந்தை' குடித்து வைப்பது வழக்கம் தான். தற்கொலை முயற்சி. வயலில் பயிர்களுக்கு பூச்சி நோயைத் தடுப்பதற்காகத் தெளிக்க வேண்டும் என்று வீட்டில் வாங்கி வைக்கப்படும் மருந்து, குறுக்கு வழியில் சீக்கிரமே எமலோக யாத்திரையை மேற்கொள்ள ஆசைப் படுகிற ஆண் அல்லது பெண்ணுக்கு சுலப டிக்கட் ஆக உதவி புரியும்.

பெண்டாட்டியோடு சண்டை போட்டுக் கொண்ட புருசன் அவளுக்கு புத்தி கற்பிக்க வேண்டும் என்று மருந்தை குடித்து விடுவான். புருசனைப் பிடிக்காத பெண்டாட்டி பழிவாங்கும் எண்ணத்தோடு அதைக் குடிப்பாள். மாமியார் கொடுமையை தாங்க முடியாத மருமகள்—குடும்பப் பிச்சுப்பிடுங்கல்களை சகித்து சகித்து அலுத்துப் போன ஆண்—வேலை கிடைக்காத வாலிபன்-இப்படி யார் யாரோ பரலோகத்துக்கு ஒரு பாஸ்போர்ட் ஆக பூச்சி மருந்தைக் கையாண்டார்கள்.

ஒன்றிருவர் செத்துப் போவார்கள். சீக்கிரமே கண்டு பிடிக்கப்பட்டால், உற்றார் உறவினர் டாக்சி பிடித்து, மருந்து சாப்பிட்ட நபரை எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடுவார்கள். பிரைவேட் டாக்டர்கள் நடத்தும் வசதிகள் நிறைந்த 'கிளினிக்'குகளுக்குத் தான். இது தான் சமயம் என்று டாக்டர்கள் ஐநூறு, அறுநூறு எனப்

பணம் பிடுங்கி விடுவார்கள். பின்னே என்ன செய்வது? 'பெரிய ஆஸ்பத்திரி' க்குப் போனால், அக்கப்போர்கள் அதிகம் ஆகும். 'தற்கொலை முயற்சி' என்று வழக்கு தொடரப்படுமே! அது வேறு அலைச்சல், பணச் செலவு, மற்றும் பல சிரமங்கள்.

ஆஸ்பத்திரிக்குப் போயும் பிழைக்காமல் போகிறவர்களும் உண்டு.

மருந்து குடித்து செத்துப் போகும் நபரின் உடலை 'சட்டுப் புட்டென்று பைசல்' பண்ணுவதில் எல்லோரும் அதிக அக்கறை காட்டுவதும் வழக்கமாக இருந்தது. வேண்டாதவர், பிடிக்காதவர்,வம்புபண்ணுகிறவர் எவராவது போலீசுக்கு ரிப்போர்ட் பண்ணி, போலீஸ் வந்து விட்டால், இருக்கிறவங்க பாடு தானே திண்டாட்டம்? எனவே, அவசரம் அவசரமாக மயானத்துக்குக் கொண்டு போய் வரட்டி, கட்டை, வைக்கோல் முதலியவற்றை தாராளமாக உபயோகித்து—அவசியமானால் மண்ணெண்ணையையும் பயன்படுத்தி—வேகம் வேகமாகக் காரியத்தை முடித்து விடுவார்கள்.

இந்த இனத்தில் வளர்மதியும் சேருவாள் என்று முத்துமாலை 'சொப்பனத்தில் கூட நினைத்ததில்லை.' ஆனாலும், அந்தப் பெண் அப்படித் தான் போய்ச் சேர்ந்தாள்.

அவளுக்கு வாழ்க்கை அலுத்துப் போய்விட்டது, பாவம்! அப்பா, அம்மா அவளை குறை சொன்னதில்லை. இவள் விதி இப்படி இருக்கே என்றுதான் அவர்களும் குமைந்து புழுங்கினார்கள். அக்கா தங்கச்சிமார் சண்டை அவ்வப்போது தலைகாட்டும். தங்கச்சிகளில் எவளாவது ஒருத்தி குத்திக் காட்டுவது போல் சொல் வீசுவதும் வழக்கம்தான். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களில் யாராவது குதர்க்கமாகப் பேசி, அவள் மனவேதனையை அதிகப்படுத்துவதும் உண்டு.

அல்பமாகத் தோன்றக் கூடியகாரணங்கள் எத்தனையோ. அவற்றை அவள் பெரிசாக எண்ணி, மனச்கவலையும் வேதனையும் பட்டு, 'இப்படி எல்லாம் அவதிப்படுவதை விட ஒரேயடியா செத்துப் போகலாமே' என்று துணிந்து, பூச்சி மருந்தை தஞ்சம் அடைந்தாள். அவளுடைய 'அதிர்ஷ்டம்' தக்க தருணத்தில் அந்த வீட்டில் யாரும் அவள் செயலைக் கண்டு பிடிக்கவில்லை. ஆகவே, அவளது நோக்கம் வெற்றிகரமாக நிறைவேறியது. வளர்மதி ஒரே அடியாக அஸ்தமித்து விட்டாள்!

விஷயம் அறிந்த முத்துமாலை ரொம்பவும் ஆடிப் போனான் 'சே, வளர்மதி இப்படிப் பண்ணுவாள்னு நினைக்கவேயில்லையே. பைத்தாரப்புள்ளெ! எதுக்கு இப் படிச்சாகணும்? அவளுக்காக நான் அசலூரிலே நடுத் தெருவிலே வச்சு அவ மாமியா கூடவும் புருசன் கூடவும் சண்டை போட்டேனே. அதைப் பத்தி அவ கிட்டே சொல்லணும்னு எண்ணினேனே...' இவ்வாறு அவன் புலம் பிக்கொண்டே யிருந்தான்.

அன்றைக்கு ராத்திரி முத்துமாலை அதிகமாக சாராயம் குடித்தான். வயிற்றெரிச்சலையும் மனக் கொதிப்பையும் அணைக்கக் கூடிய ஒரே மருந்து இதுதான் என்று சொல்லிக் கொண்டே குடித்தான். பாட்டுப்பாடிய வாறு தெருக்களில் திரிந்தான்.

அன்று அவன் பாடிய பாட்டில் அளவற்ற சோகம் கலந்து ஒலித்தது.

''காயமே இது பொய்யடா—வெறும்

காற்றடைத்த பையடா!—ஓட்டை

மூங்கில் வைத்து வேய்ந்த வீடடா!''

இந்த அடிகளையே அவன் திரும்பத் திரும்பப் பாடினான். சில சமயம் சொற்கள் சிதைந்து, அவன் அழுது அரற்றுவது போலவே குரல் ஒலித்தது.

# 19

முத்துமாலைக்குக் குழந்தைகளிடம் மிகுந்த பிரியம். பார்ப்பதற்கு சிறிது வசீகரமாக உள்ள எந்தக் குழந்தையையும் அவன், ஆசையோடு தூக்கி வைத்துக்கொள்வான். கொஞ்சுவான். போகிற இடத்துக்கெல்லாம் எடுத்துக் கொண்டு போவான். அது கேட்கிறதை எல்லாம் வாங்கிக் கொடுப்பான்.

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே. முத்துமாலை பிள்ளைகளிடம் பாசமா, பிரியமா இருக்கிறதுனாலே பிள்ளைகளும் அவன் கிட்டே ஆசையாப் போகுது. மாமா, மாமன்னும், தாத்தா தாத்தான்னும் புள்ளைக அவனை சுத்திச் சுத்தி வரும்' என்று சில 'அம்மாளுக' சொல்வார்கள்.

''மாமா, எனக்கு ஏரேப்ளேன் செய்து கொடு'' 'கப்பல் பண்ணித் தா' 'மைக்கூடு செய்யி' என்று குழந்தைகள் தாள்களை அவனிடம் கொடுத்துப் பஞ்சரிக்கும்.

அவனும் விதம்விதமாக அனைத்தையும் செய்து கொடுப்பான். அட்டையில் கிளியும், மயிலும், மனிதனும், மரமும் வரைந்து கத்திரி வைத்து வெட்டிக் கொடுப்பான். வேடிக்கை காட்டி பிள்ளைகளைச் சிரிக்க வைப்பான். குட்டிக் குட்டிக் கதைகள் சொல்லுவான்.

ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு குழந்தையின் பேரில் அவனுக்கு அலாதியான பிரியமும் பற்றுதலும் ஏற் பட்டுவிடும். அதை வீட்டுக்கு அழைத்து வருவான். விளை யாட்டுக் காட்டி மகிழவைத்து அந்தக் குழந்தை சிரிப் பதைப் பார்த்துத் தானும் களிப்படைவான்.

இப்போது அவனுக்கு மங்கையர்க்கரசியின் மீது பிரியம் வளர்ந்து வந்தது. திரிபுரத்தின் மகள் என்பதனால் மட்டுமல்ல. அது யார் பிள்ளை என்று தெரியாமல் இருந்தபோதே, அம்மன் கோயிலில் தன்னந்தனியாகக் காண நேரிட்ட முதல் சந்திப்பிலேயே, அந்தக் குழந்தை யிடம் முத்துமாலைக்கு ஒரு ஒட்டுதல் ஏற்பட்டுவிட்டது. அதனுடைய கூச்சமில்லாத சுபாவமும், தயக்கமின்றிப் பேசுகிற குணமும் அவனை வெகுவாக ஈர்த்தன.

மங்கை அவனைக் காண்கிறபோதெல்லாம் ஒரு பாட்டை நீட்டி நீட்டிப் பாடும்.

''அத்தான் பொத்தைக் கதா
அயகுள்ள பூசணிக்கா;
மயபெஞ்ச முத்தத்திலே
பொத்துன்னு வியந்தாயாம்
பட்டுன்னு வெடிச்சாயாம்!''

பாட்டின் முடிவிலே ''டோ டோ டோய்'' என்று கூவி, கைகொட்டி கலகல என்று சிரிக்கும்.

அப்போது அதன் முகம் மிக வசீகரமான பெரிய புஷ்பம் மாதிரி ஒளிரும். அப்படியே அதை அள்ளி எடுத்து முத்தமிட்டு ''போக்கிரி கழுதை!'' என்று செல்லமாகக் கன்னத்தை கிள்ளுவான், சிரிப்பான்.

திரிபுரம் அவனை ''அத்தான்'' என்று அழைத்கதி லிருந்து, மங்கை இந்தப் பாட்டை பாடத் தொடங்கி

யிருந்தது. அதன் உச்சரிப்பில் கடா "கதா" ஆகவும், அழகுள்ள என்பது "அயகுள்ள" என்றும், மழைபெய்த என்பது "மயபெஞ்ச" என்றும், விழுந்தாராம் வந்து "வியுந்தாயாம்" என்றும் மாறிவிட்டன. அந்தப் பிள்ளை அப்படிப் பாடுவதும் தனி இனிமையாகத்தானிருந்தது.

மங்கையின் அப்பா சிலைகளைத் திருடிப் பிடிபட்டு ஓடிப்போன பிறகு முத்துமாலைக்கு அந்தக் குழந்தையின் மீது அனுதாபம் பிறந்தது. ஊர்ப்பிள்ளைகள் அதை "சாமிதிருடி மகள்" என்று பழித்துக் கேலி பண்ணுவது அவன் காதுகளிலும் விழுந்தது.

அவ்வாறு பரிகசிக்கும் பிள்ளைகளை அவன் கண்டித்தான். சில பிள்ளைகளின் காதைப் பிடித்துத் திருகியும், சில குழந்தைகளின் மண்டையில் நறுக்கென்று குட்டியும், "இனிமேல் இப்படிச் சொன்னால் முதுகுத் தோலை உரிச்சுப் போடுவேன், ஜாக்கிரதை!" என்று மிரட்டியும் எச்சரித்தான்.

திரிபுரம் ஊர்பிள்ளைகளின் தன்மைகளை அறிந்து, தன் பிள்ளைகளை அடிக்கடி வெளியே போகக் கூடாது என்று அடக்கி வைத்திருந்தாள். அப்படியும் சில சமயங்களில் மங்கை வேடிக்கை பார்க்க வெளியே வந்து விடும்.

மங்கை இப்போதெல்லாம் நகைகள் அணிவதில்லை. பகட்டான ஆடைகள் உடுத்துவதில்லை, ஒழுங்காகத் தலைவாரிக் கொள்வது கூட இல்லை என்பதை முத்துமாலை கவனித்தான். திரிபுரத்தின் உள்ளமும் உணர்ச்சியும் பாதிக்கப்பட்டிருப்பதின் அடையாளங்கள் தான் இவை எல்லாம் என்று அவன் புரிந்து கொண்டான். அவளுக்காகவும் அவன் அனுதாபப்பட்டான்.

அவளுடைய வீட்டுக்குப் போய் அவளைப் பார்த்து பேசலாமா, கடிதம் ஏதாவதுவந்ததா என்றுகேட்கலாமா என்று அவன் நினைத்தான். ஆனாலும் போகவில்லை.

மனசுக்குள் ஏதோ ஒரு குறுகுறுப்பு. அவள் நன்றாகப் பேசமாட்டாள். தன் மீது அவளுக்கு வருத்தம் இருக்கத் தான் செய்யும் என்று உள்ளுணர்வு அவனுக்கு உணர்த்திக் கொண்டிருந்தது.

ஒரு ராத்திரி வேளையில் முத்துமாலை தெருக்களில் திரிந்து கொண்டிருந்த போது, திரிபுரத்தின் வீட்டுப் பக்கம் வருகையில், உள்ளே சிரிப்பொலி கேட்டது. அது விகாரமாக ஒலித்தது. அதைத் தொடர்ந்து அழுகை எழுந்தது, பொங்கி பொங்கி அழுதது.

திரிபுரம் தான் இப்படி எல்லாம் பண்ணுகிறாள் என்று அவன் உணர்ந்தான். அவளுக்கு அமைதியில்லாமல் மனம் பேதலித்துப் போயிற்றாம், அவ்வபோது ஹிஸ்டீரியா கண்டு சிகிச்சை பெற்றுப் தேறினாளாம் என்று முன்னொரு நாள் தங்கராசு தெரிவித்தது அவன் நினைவில் எழுந்தது.

''பாவம் திரிபுரத்துக்கு திரும்பவும் மனக்கோளாறு ஏற்பட்டு விட்டது போலிருக்கு!'' என்று முத்துமாலை எண்ணிக் கொண்டான். அவன் மனமும் அமைதியிழந்தது.

அன்று இரவு பூராவும் அவன் சீட்டி அடித்தவாறே திரிந்தான். தனது மனக் கொதிப்பை எல்லாம், உள்ளக் குமைதல் முழுவதையும், ஊதி ஊதியே கரைத்து விட விரும்பியவன் போல அவன் உதடுகளைக் குவித்து சீட்டி அடித்தவாறே வறண்ட காற்றென அங்குமிங்கும் சுற்றி வந்தான். அந்தச் சீட்டி ஒலி உருக்கமாகத் தொனித்தது. கேட்டோரின் செவி உட்புகுந்து உள்ளத்தில் இனம் புரியாத ஒரு வேதனையைப் பாய்ச்சுவதாக இருந்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, அந்திவேளை. இருட்டு இன்னும் கீழிறங்கி வந்து கவியவில்லை. முத்துமாலை அம்மன் கோயிலை நோக்கிப் போய்க் கொண்டிருந் தான்.

ஒரு தெருவின் திருப்பத்தில் ஒரு பிள்ளை நின்று அழுது கொண்டிருந்தது.

"யாரது? மங்கை மாதிரி இருக்கு!" என்று அவன் மனம் அறிவித்தது.

மங்கை தான். அவன் பதறினான். ஏன் இந்த நேரத்தில் இந்தப் பிள்ளை இப்படிப் அழுதுகிட்டு நிற்குது?

அதன் அருகில் போய் "மங்கை, ஏன் அழுதே? என்ன விசயம்? நீ எப்படி இங்கே வந்தே?" என்று அன்பாக விசாரித்தான் முத்துமாலை.

மங்கை விக்கி விக்கி அழுதது. விரல்களை மடக்கிக் கொண்டு கைகளின் பின் புறத்தால் கண்களைத் தேய்த்தபடி அழுது நின்றது.

அவன் அதை வாரி எடுத்தான். "இருட்டப்போற நேரத்திலே நீ ஒத்தையிலே இங்கெல்லாம் வரலாமா? நீ வந்தது உன் அம்மாவுக்குத் தெரியுமா?" என்று பிரியமாக விசாரித்தான்.

"அம்மா என்னை அடிஅடின்னு அடிச்சா, தொலைஞ்சு போ சனியனேயின்னு புடிச்சுத் தள்ளினா. அம்மாவை பாக்கவே எனக்கு பயமா இருந்தது. ஓடியாந்துட்டேன்" விம்முதல் விக்கல்களுக்கிடையே சிறிது சிறிதாக விஷயத்தைக் கூறியது அந்த பிள்ளை.

ஐயோ பாவம் என்று இரங்கியது அவன் மனம். கடைக்குப் போய் இரண்டு வேர்க்கடலை மிட்டாய் வாங்கிக் கொடுத்தான். "வீட்டுக்குப் போகலாம். இருட்டிட்டுதுன்னு சொன்னா, அப்புறம் பயமா இருக்கும். வீட்டுக்குப் போற வழி தெரியாமப் போயிடும்." என்று கூறியவாறே திரிபுரத்தின் வீடு நோக்கி நடந்தான்.

கதவு திறந்திருந்தது. பிள்ளையை திண்ணையில் இறக்கிவிட்டு. "உள்ளே போ கண்ணு. போறையா?" என்று பேசினான் முத்துமாலை.

வீட்டுல் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. திண்ணையி லும் ஒரு விளக்கு எரிந்தது.

அப்போது அங்கே வந்து நின்ற திரிபுரத்தைப் பார்க் கவும் "திக்கென்றது" அவனுக்கு.

தலை பரட்டையாகக் காட்சி தந்தது. தலைமுடிக்கு எண்ணெய் தடவிப் பல நாட்கள் ஆகியிருக்க வேண்டும். நெற்றி நடுவில் "டேஞ்சர்லைட்" மாதிரி சிவப்புக் குங்குமம் பெரிசாகத் தீட்டப்பட்டிருந்தது. அது வட்டப் பொட்டாகவுமில்லை, விபூதிப் பூச்சு மாதிரி நெற்றி பூராவும் இழுக்கப்பட்டிருக்கவுமில்லை; இருந்தாலும், முகத்துக்கு ஒரு கோரத்தன்மை அளிப்பதாய் நெற்றியில் பாதியை அடைத்துக் கொண்டு பளிச்சிட்டது அது. அவளுடைய கண்களில் குளுமை இல்லை; இயல்பான ஒளி சுடரிடவில்லை. வெறி கலந்த தனி ரகப் பார்வை தேங்கியிருந்தது.

முத்துமாலையைப் பார்த்ததும் அவள் சிரித்தாள். ஆரோக்கியமான சிரிப்பு அல்ல. அது ஒரு பெண்ணின் அறிமுகச் சிரிப்பு இல்லை. நளினமான வரவேற்பு நகைப் பும் இல்லை.

அவள் சிரிப்பும் முகந்தோற்றமும் முத்துமாலைக்கே மனசினுள் ஒரு அரிப்பை உண்டாக்கியது. பேய் பிசாசு களில் நம்பிக்கை இல்லாதவன்தான் அவன். ஆனாலும், அந்த நேரத்தில் மங்கிய விளக்கொளியில், விசித்திரமாகச் சிரித்து நின்றவளைக் காண்கையில் "பேய் புடிச்சவ மாதிரில்லா தோணுது" எனும் நினைப்பு அவன் மனசுல் நெளிந்து கொடுத்தது.

அவன் பேச்சு கொடுக்கும் முன், அவளே பேசி விட்டாள்;

"வாரும் வே, அதை பிள்ளே! இங்கேயும் திருட்டை கண்டு பிடிக்கவந்தீரா? சிலைகள் பதுக்கப்பட்டிருக்கான்னு

பார்க்க வந்தீரா?இந்தப் புள்ளையையும் ஒரு சிலையின்னு எண்ணி மீட்டு வந்தீரா''

அவள் பேச்சு தோரணை மட்டுமல்ல, அவளது குரலே மாறிப் போயிருந்தது. முத்துமாலைக்கு அப்படித் தான். தோன்றியது.

அவன் பதில் சொல்ல வாய் திறப்பதற்குள், அவள் ஆவேசம் வந்தவள் போல் கத்தினாள்.

"போடா இங்கேருந்து. போ. உடனே போயிடு. என் வாழ்க்கையிலே மண்ணை அள்ளிப் போட்ட சண்டாளா. நான் புருசனோட வாழுறதை சகிக்காத பொறாமைக் காரா. இங்கே ஏன் வந்தே? இன்னும் ஏன் நிக்கிறே. போறையா, உன்னைக் கடிச்சுக் குதறி உன் ரத்தத்தை நான் குடிக்கவா?''

கூப்பாடு போட்டாள் திரிபுரம். தொடர்ந்து 'வீல் என்று கீச்சிட்டலறினாள். மயங்கித் தடாலென்று கீழே விழுந்தாள்.

முத்துமாலை திகைத்துப் போய் நின்றான்.

இதற்குள், தெருவில் போனவர்களும் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களும் வந்து கூடியிருந்தார்கள். திரிபுரத்தின் அம்மா வீட்டினுள்ளிருந்து வெளியே வந்து, மகள் பக்கத்தில் உட்கார்ந்து, ஒரு விசிறியால் வீசினாள்.

''பேய் புடிச்சிருக்கு! அதுதான் இப்படி'' "பைத்தியம் முற்றிப் போச்சு'' என்று அவரவர் மனம் போனபடி பேசினார்கள். மற்றவர்கள், பல்வேறு யோசனைகள் கூறினார்கள்.

'நீ இங்கே எங்கே வந்தே, முத்துமாலை?'' என்று விசாரித்தார்கள்.

தான் வந்த காரணத்தை அவன் சொன்னான்.

''பாவம் திரிபுரம்!'' என்று அனுதாபப்படத்தான் முடிந்தது அவர்களால்.

# 20

நாளுக்கு நாள் அதிகம் அதிகமாக மனச் சோர்வுபெற்று வந்த முத்துமாலை, திரிபுரத்தின் தாக்குதலினால் வெகுவாக பாதிக்கப்பட்டான். அவனுடைய மனம் உடைந்து சிதைந்து தகர்ந்துவிட்டது போன்ற உணர்வு அவனுள் படிந்தது.

திரிபுரம் இப்படி வெறியுடன் தன்னை ஏசிப் பேசுவாள், கேவலமாகப் பேசி வெளியே துரத்துவாள் என்று அவன் எவ்வாறு எண்ணியிருக்க முடியும்? நீ-வா-போ என்று ஏகவசனத்தில் அவள் பேசுவாள் என்றுகூட எண்ணியவனில்லை அவன். அப்படி இருக்கையில் ''போடா'' என்று அவள் தன்னை மரியாதைக் குறைவாகப் பேசியதைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போனான். அவள் சுய உணர்வுடன் பேசவில்லை; மன நோய்க் கோளாறுதான் அவளை இவ்வாறெல்லாம் ஆட்டி வைக்கிறது என்ற நினைப்பு அவனுக்கு சிறு ஆறுதல் அளித்த போதிலும், அவனது மனம் உதைத்துக் கொண்டுதானிருந்தது.

அவளுடைய குடும்ப வாழ்க்கை சிதைவுற்றதற்கு திரிபுரம் தன்னைக் குற்றம் சாட்டியதை முத்துமாலையினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவள் வாழ்வு சீர் குலைந்ததுக்கு அவனா காரணம்? அவளுடைய புருஷனின் குணக்கேடுகளும் அயோக்கியத்தனங்களும் அதர்மச் செயல்களும் அல்லவா அடிப்படைக் காரணம்? இதை ஏன் அவள் மறந்தாள்?

இதை எண்ண எண்ண அவன் மனம் குழம்பியது. திரிபுரமா இப்படி மாறிப் போனாள்! நம்ம திரிபுரமா?

அவன் உள்ளத்தில் வேதனைகலந்த வியப்பு குறுகுறுத்துக் கொண்டிருந்தது.

அமைதி இழந்த முத்துமாலை நிறைய நிறையக் குடித்தான். அவனுடைய கூட்டாளிகளே அவன் போக்கைக் கண்டு அஞ்சினார்கள். ''இது நல்லதில்லே அண்ணே. உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது''என்று எச்சரித்தார்கள்.

''ப்ச! குடிமுழுகிப் போகுமாக்கும்! இத்தனை நாள் இருந்து என்னத்தை கிழிச்சிட்டோம்? இனிமேலும் உசிரோடிருந்து எதை பெரிசா வெட்டி முறிக்கப் போறோம்? இன்னிக்குச் செத்தா நாளைக்கு காடாத்து; பதினாறாம் நாள் கருமாதி. சவத்தை விட்டுத் தள்ளு' என்று சுரத்தில்லாமல் பேசினான்.

இது வேறு முத்துமாலை என்று பட்டது அவனது நண்பர்களுக்கு. முன்பெல்லாம் இப்படி வறண்ட குரலில், வாழ்ந்து முடிந்து ஓய்ந்து போனவன் போல, அவன் பேசியிருக்கமாட்டான்.

அவன் செயல்களிலும் மாறுதல் தென்படத்தான் செய்தது.

எதிலுமே அவனுக்கு ஆர்வம்இல்லாமல் போய்விட்டதாகத் தோன்றியது. ஊர் விவகாரங்களில் அக்கறை காட்ட மறுத்தான்.

இரவு நேரங்களில் நிகழ்கிற அக்கிரமங்களில் அநியாயச் செயல்களில் தலையிட்டு, நீதி வழங்க வேண்டியது—தண்டனை கொடுப்பது அல்லது சமரசம் செய்து வைப்பது—தனது பொறுப்பு என்று நம்பியவன் போல் அனைத்து விவகாரங்களிலும் குறுக்கிட்டு ஆக்கினைகள் செய்து வந்த ''அண்ணாச்சி'' யாக இல்லை அவன் இப்போது.

ஒரு ராத்திரி, ஒரு சிறிய வீட்டில் பெரும் கூச்சலாக

இருந்தது அந்த வீட்டுக்காரன் தன் மனைவியை அடி அடி என்று அடித்துக் கொண்டிருந்தான்.

அடிக்கடி தலைதூக்குகிற ஒரு நிகழ்ச்சிதான் இது. மாசத்தில் ஒரு தடவை அந்த வீட்டில் இந்தக் கூத்துதான். புருஷனுக்கு மனைவி பேரில் சந்தேகம். அவள் எங்கோ போய்,எவனுடனோ ஜாலிபண்ணிவிட்டு வந்திருக்கிறாள் என்று ஏசுவான். அவளும் பேச்சுக்குப் பேச்சு வீச, வார்த்தைகள் தடித்து கை வீச்சில் வந்துநிற்கும். அவன் 'கண்ணு மண்ணு' தெரியாமல் அவளை அடித்து நொறுக்குவான்.

அதுபோன்ற சமயங்களில் தெருவோடு போகிற முத்துமாலை தன் பாட்டுக்கு நடக்கமாட்டான். புருசன் பெண்டாட்டி சண்டை; தனிப்பட்ட விவகாரம் என்று நினைக்கமாட்டான். கதவைத் தட்டி, கூப்பாடு போடுவான்.

"ஏ வீராசாமி! மாட்டுப் பயலா நீ? அவளை பொம்பிளைன்னு நெனச்சியா எருமை மாடுன்னு நெனச்சியா? இப்படி மடார் மடார்னு போட்டு அடிக்கிறியே! செத்துப் போகப் போறா, பாவம்!" என்பான்.

அடிப்பவன் ஏதாவது சொல்லுவான். இவனும் தர்ம நியாயமாக ஏதேனும் கூறுவான். சமாதானம் பண்ணி விட்டுத்தான் போவான்.

இந்த ராத்திரியிலோ...

வீராசாமி வெட்டரிவாளைத் தூக்கிக் கொண்டு பாய, அவன் மனைவி பேச்சி பயந்து அலறிக் கொண்டு வெளியே பாய்ந்தாள். "அய்யோ பாவி கொல்ல வாறானே! வெட்ட வாறானே" என்று தெருவில் ஓடினாள்.

அப்போது தான் முத்துமாலை அந்தத் தெருவில் வந்தான். அவன் குறுக்கே பாய்ந்த பேச்சி "அண்ணாச்சி, அண்ணாச்சி! என்னைக் காப்பாத்து...அந்தப் பாழறுவான் அரிவாளைத் தூக்கிக்கிட்டு வெட்ட வாறான்" என்று புலம்பினாள்.

"உங்களுக்கு வேறே வேலையில்லே! இதே கூத்து

தான் எப்பவும். வெட்டிக்கிட்டு சாவீகளோ நாசமாப் போவிகளோ... எக்கேடும் கெட்டுப் போங்க'' என்று சொல்லியபடியே அவன் நடந்துபோனான்.

போகிற போதே தானாகவே பேசிக் கொண்டான்; "இதெல்லாம் என்னமனுசசென்மங்க! வீட்டையும் தெருவையும் நாறடிச்சுக்கிட்டு! செத்துத் தொலையட்டுமே சனியங்க."

முத்துமாலையின் உள்ளத்தில் கசப்பு மண்டிச் சுழன்றது. ஒருவெறுமை அவனுள் புகுந்தது. குழந்தைகள்கூட அவன் கவனத்தைக் கவரும் சக்தியை இழந்துவிட்டன. எதிலுமே அவனுக்குப் பிடிப்பு குறைந்து போயிற்று.

குழந்தை ஒன்று கீழே விழுந்துவிட்டால் அதுக்கு அடி கிடிபட்டதோ என அங்கலாய்த்துப் பதறக் கூடியவன் தான் அவன்.

இப்போதோ?

ஒரு சிறுமி வீட்டுப் படிக்கட்டில்உருண்டு விழுந்தது. அதன் நெற்றியில் காயம் பட்டு அது கதறி அழுதது.

பகல் நேரம் தான். பார்த்துக் கொண்டு போன முத்துமாலை இரக்கத்தோடு முன்னே பாயவில்லை. குழந்தையை எடுத்து அன்போடு உதவி புரியவில்லை.

"தொலையட்டும். ஆடிக் கொண்ணு அமாவாசைக்கு ஒண்ணுன்னு தான் பிள்ளைகளை வதவதன்னு பெத்துத் தள்ளுதாங்களே. ஒண்ணு குறைஞ்சா என்ன கெட்டுப் போச்சு!'' என்று முணு முணுத்தபடி நடந்தான்.

இவ்வாறு அநேக நிகழ்ச்சிகள்.

"ஆளே அடியோடு மாறிப் போனான்'' என்பதை அவனுடைய கூட்டாளிகள் உணர்ந்தார்கள். தனபாக்கியமும் புரிந்து கொண்டாள். ஏன் இப்படி திடீர்னு மாறினான் என்பதுதான் ஒருவருக்கும் விளங்கவில்லை.

தனபாக்கியம் அவனிடம் கேட்டாள்; "உங்களுக்கு என்ன செய்யுது? ஏன் ஒரு மாதிரி இருக்கீக?''

முத்துமாலை பெருமூச்செறிந்தான். ''என்ன வாழ்க்கை! என்ன மனுசங்க! எனக்கு எதுவுமே பிடிக்கலே'' என்றான்.

—சே, திரிபுரம் என்னன்னமோ பேசிப் போட்டா! அவ என்னை புரிஞ்சுக்கிடவே இல்லையே!

இதை அவன் வாய் விட்டுச் சொல்லவில்லை.

—அவளை நெனைக்கையிலே பாவமாகத்தான் இருக்கு. திரிபுரம்தான் என்ன செய்வா பாவம்.

வேதனையால் குமைந்து புழுங்கினான் முத்துமாலை.

# 21

அன்று வழக்கம் போல்தான் பொழுது விடிந்தது.

ஆனால், சிவபுரத்துக்கு அது வழக்கம் போல் மற்றும் ஒரு நாளாக அமையவில்லை. விபரீதமான செய்தியை வைத்திருந்தது. இருட்டு. விடிவின் பேரொளி அந்த ஊர்க்காரர்களுக்கு அதிர்ச்சியைக் கொண்டு தந்தது.

—ஐயோ, இப்படியும் நடக்குமா!... அவனுக்கு இது மாதிரிச் சாவு வரும்னு யாரு நெனச்சா?... முத்துமாலை திடீர்னு செத்துப் போவான்னு யாரு கண்டது?...

—பாவி போயிட்டானே... ஊரை ஊரை சுத்தி வருவானே... சவத்து மட்டை குடிச்சுக் குடிச்சுக் கெட்டான்.

—குடிகாரனாத் திரிஞ்சாலும் யாருக்குமே தீங்கு செய்யமாட்டானே. நன்மையை நெனச்சு நல்லதுகளைச் செய்யணுமின்னுதான் அலைஞ்சான்! இப்படியா பொட்டுப் பொடுக்குன்னு போகணும்?

இந்த விதமாகவும் இன்னும் பலவாறும் பேசினார்கள். ஆண்களும் பெண்களும் ஆற்றாமையோடு புலம்பினார்கள்.

செய்தியைக் கேட்டு எவர்தான் அதிர்ச்சி அடைய வில்லை? எல்லோருக்கும் அது நம்ப முடியாத செய்தி யாகத்தான் ஒலித்தது. ஆனால் உண்மையாகவே நடந்து முடிந்திருந்தது.

முத்துமாலை செத்துப்போனான்.

ஊருக்குக் கிழக்கே, குளத்தங்கரைச் சாலையை ஒட்டிய பள்ளமான வயல் பகுதியில், விழுந்து கிடந்தான் அவன்.

ராத்திரி எந்நேரத்தில் விழுந்தானோ? எப்படி விழுந் தானோ? குப்புறக் கிடந்தான்.

காலையில் அந்தப் பக்கமாகச் சென்ற ஒருவன் வயலில் எவனோ விழுந்து கிடப்பதைக் கண்டான். 'குடிகாரப் பய. மூக்கு முட்டக் குடிச்ச போதையிலே கிடக்கான் போலே' என்று எண்ணியவனாய் அருகில் போய் கவனித் தான். திடுக்கிட்டான், அது முத்துமாலை.

அந்த ஆள் குரல் கொடுத்தான். தட்டி எழுப்பினான். உடம்பின்மேலே கைவைத்ததுமேவிளங்கி விட்டது.முத்து மாலை கட்டையாய்க் கிடந்தான்; உயிர் போய் ரொம்ப நேரம் ஆகியிருக்க வேண்டும்.

அவன் ஊரை நோக்கி நடந்தான். கிராம முனிசீப் பிடம் தெரிவிக்க வேண்டுமே. அவசரமாக நடந்தான். எதிரேவந்தவர்களிடம் தகவல்அறிவித்தவாறு போனான்.

கேள்விப்பட்டவர்கள் எல்லோரும் அந்த இடத்துக்கு விரைநதார்கள். சேதி வேகமாகப் பரவவும், கூட்டம் கூட்டமாய் சென்றார்கள். ஊர் பூராவுமே திருவிழா பார்க்கத் திரண்டது போல் அங்கே கூடியது.

அங்கே முத்துமாலை செத்துக் கிடந்தான்.

ரோட்டு ஓரத்தில் கால் சறுக்கித் தவறி விழுந்து, சரிவில் உருண்டு உருண்டு போய், வயலுக்குள் விழுந்தி ருக்க வேண்டும். தலையில் பின்புறத்தில் ரத்தம் வந்து, காதின் ஓரம் வழிந்து, கழுத்தில் கறையாகப் படிந்து காய்ந்திருந்தது.

கீழே விழுந்ததில் ஏதாவது ஒரு கல் தாக்கி, 'பொருத்தில் அடிபட்டு அவன் செத்துப் போயிருக்க வேண்டும்' என்று ஊகித்தார்கள்.

எவனாவது பின்னாலிருந்து கல்லை வீசி எறிந்து தாக்கியிருப்பானோ? அப்படி அடிபட்டு இவன் கீழே விழுந்து மேலும் காயப்பட்டு செத்திருப்பானோ?

சிலர் சந்தேகக் குரல் எழுப்பினார்கள்.

யார் அவ்வாறு தாக்கப் போகிறார்கள்? எவன் துணிச்சலாகக் கல்லெறிந்து முத்துமாலையைக் கொன்றிருக்க முடியும்? முத்துமாலைக்கு அப்படிப்பட்ட விரோதி யார் உண்டு?

அநேகர் எதிர்ப்புக் குரல் கொடுத்தார்கள்.

முத்துமாலையின் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் இல்லையா? மாடசாமி மாதிரி. நாரம்புநாதன் மாதிரி. ஏன் நாரம்புநாதனே பணம் கொடுத்து ஆளை ஏவி இவனைத் தாக்கியிருக்கக் கூடாது? அப்படி நடக்காதா என்ன?

மனிதர்கள் பலவிதம், பலரும் பலப் பல விதமாகப் பேசினார்கள். மனம் போன போக்கில் கற்பனையை ஓடவிட்டார்கள்.

''அதெல்லாம் ஒண்ணும் இராது. அவன் குடிச்சுப் போட்டு, தட்டுத்தடுமாறிக்கிட்டு, இந்தப் பக்கமா வெளிக்கு வந்திருப்பான். ரொம்ப ஓரமாப் போயிருப்பான். கால் சறுக்கிக் கீழே விழுந்திருக்கான். பெரிய கல்லுலே மண்டை இடிச்சிருக்கு. பொருத்திலே பலமான அடிபட்டிருக்கு. உயிரு போயிட்டுது. இதுதான் நடந்திருக்கும். வீணான சந்தேகங்களைக் கிளப்பிக்கிட்டு நின்னா, போலீசுக்கு ரிப்போர்ட்டு அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்படும். அவங்க வந்து பிரேத பரிசோதனை நடத்தணும், பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பணும், உடம்பை அறுத்துப் பார்க்கணும்பாங்க. அநாவசியமான அக்கப்போருதான் எல்லாம். இதெல்லாம் என்னத்துக்கு?'' இவ்வாறு உறுதியாகப் பேசினார் கிராம முனிசீப்.

"நீங்க சொல்றது சரிதாமுங்கேன். அதுதான் நடந்திருக்கு. இருட்டு நேரமில்லா. தன்னறிவோடு நடக்கிறவனுக்கே தடுமாறும். குடிபோதையிலே தள்ளாடிக்கிட்டே போறவனுக்கு சொல்லுவானேன்!"

பெரியவர்கள் ஆமோதித்துப் பேசினார்கள். "ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்க சட்டுப்புட்டுனு சோலி முடியட்டும்" என்று அவசரப்படுத்தினார்கள்.

கட்டைவண்டி ஒன்று கொண்டு வரப்பட்டது. முத்துமாலையின் உடலை அதில் எடுத்து வைத்து வீட்டுக்குக் கொண்டு வந்தார்கள்.

தனபாக்கியம் தலைவிரி கோலமாய் அழுது அரற்றியவாறு வண்டி கூடவே வந்தாள். வீட்டில் தரையில் முட்டி முட்டி அழுதாள். அவளோடு சேர்ந்து அழுவதற்குப் பெண்கள் கூடினார்கள்.

ஆண்கள் கூடி ஆக வேண்டிய காரியங்கள் அனைத்தையும் ஒழுங்காகச் செய்து முடித்தார்கள்.

"ஊம்ம். முத்துமாலை கதை முடிஞ்சுது!என்ன போக்குப் போனான் கரிக்கொல்லன்! இப்படி ஒரேயடியாகப் போயிருவான்னு யாரு நெனச்சா?" என்று சொல்லலானாள் தங்கராசுவின் தாய்.

அவள் தன் மகனுக்கு எழுதிய கடிதத்தில், ஊர் சமாச்சாரங்கள் பலவற்றோடும், முத்துமாலை செத்துக் கிடந்த விவரத்தையும் சேர்த்து எழுதினாள்.

அந்த செய்தி தங்கராசுக்கு மிகுந்த வருத்தம் அளித்தது.

"முத்துமாலை அவனுடைய வழியில் நல்லதையே செய்துகொண்டிருந்தான். அவனுடைய முரட்டு சுபாவங்களினாலும் போக்குகளினாலும் முத்துமாலையின் நல்லதனங்கள் பிரகாசிக்காமலே இருண்டு விட்டன. அதே மாதிரி, அவன் எப்படிச் செத்தான் என்பதும் வெளிப்படையாகத் தெரியாமல் போய்விட்டது. இருட்டிலே வாழ்ந்து, இருட்டிலே செயல் புரிந்த முத்துமாலை இருட்டில் செத்துப்போனதும் பொருத்தம் தான்" என்று அவன் எண்ணிக்கொண்டான்.

☐☐☐

Wrapper Printed by : Sri Gomathy Achagam Madras-5.

